# தமிழரசு

16.10.1992 ரூ.1





7 உறுப்பினர் கொண்ட சிறுபான்மை கல்வி நிறுவனங்களின் தூதுக் குழுவினர் மதுரை தலைமைப் பாதிரியார் (ஆர்ச் பிஷப்) ஆரோக்கியசாமி அவர்கள் தலைமையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைத்தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினர் (22.9.'92).



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 28.9.92 அன்று, தலைமைச் செயலகத்தில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஏழை எளிய மக்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# இந்த இதழில்


டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் முதல்வர் பேருரை ... 2

மத்திய அரசுக்கு முதல்வர் கோரிக்கை ... 9

சட்டப்பேரவையில் துணை மதிப்பீடு ... 15

இலவச வேட்டி வழங்கும் திட்டம் ... 17

கடமை தவறாத காவலர் குடும்பத்திற்கு முதல்வர் நிதியுதவி ... 19

பெரியார் மாவட்டத்தில் சிறுசேமிப்பு ... 20

தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு: முதல்வர் அறிக்கை ... 24

புதுக்கோட்டை மக்களுக்கு முதல்வர் உதவி ... 28

நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் மீன் வளர்ப்பு ... 29

மறைமலைநகர்-காமராஜர் ரயில் நிலையம் ... 31

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் இளம்பிள்ளை வாத மறுவாழ்வு முகாம் ... 33

குடிப்பழக்கம் உயிர்க்கொல்லி ... 34

மாயூரம் வேதநாயகம் பிள்ளை ... 37

காந்தியடிகள் பிறந்த நாள் விழா ... 41

நாடகக் கலைஞர்களுக்கு அரசு சலுகை ... 45


## வடலூர் வள்ளல்!

**கவிஞர் இளந்தேவன்**

எறும்பின் காலடிகள்
எழுப்புகின்ற ஓசையையும்
காதுகளால் கேட்கும்
கருணைமனம் கொண்டவர்யார்?

கொழுத்திருக்கும் கோழி
கூரலகில் இருதுண்டாய்
உயிர்துடிக்கும் சிறுபுழுவின்
ஊமைப் புலம்பல்களில்
தானழுது துடிக்கின்ற
தன்மை யுடையவர்யார்?

மீன்பிடிக்கும் வலைகண்டால்
மீன்துடிக்கும் முன்னாலே
தான்துடித்து விழுகின்ற
தயையுடைய வள்ளல்யார்?

கருவாடு போலிருக்கும்
கந்தையுடை ஏழைமக்கள்
இளைத்திருக்கப் பார்த்துமனம்
இளைத்து, உடல் மெலிபவர்யார்?

என்னுள் இருப்பவர்யார்?
எனக்கெதிரே இருப்பவரின்
கண்ணில் தெரியவர்யார்?
கல்லுருகக் காண்பவர்யார்?

மண்நோக நடக்காமல்
மாதா சிவகாமி
கண்நோக நடக்குமந்தக்
கருணை வடிவினர்க்குப்

பூப்போட்டு அருச்சித்தால்
பொன்னடிகள் நோகுமென்று
பாப்போட்டு அருச்சிக்கப்
பாவலர்காள் வாரீரோ!


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

புரட்டாசித் திங்கள் - 30

மலர்: 23 இதழ்: 8

16-10-1992




# தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில்

என் வழிகாட்டியான புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரில் செயல்படும் இந்த எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் சிறப்புரையாற்ற எனக்கு அழைப்பு விடுத்ததைப் பெருமையாகக் கருதுகிறேன். இவ்வழைப்பினை ஏற்பதன் மூலம் என்னுடைய வழிகாட்டியான டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அஞ்சலி செலுத்த எனக்குக் கிடைத்த மற்றொரு வாய்ப்பாகவே இதைக் கருதுகிறேன். டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலங்களை எல்லாம் கடந்ததொரு பார்வையையும், உண்மைகளை ஒட்டு மொத்தமாக உணரக்கூடிய மனப்பக்குவத்தையும், தேவை உள்ளவர்களுக்கெல்லாம் உதவிடும் இதயத்தையும் பெற்றிருந்தார்.

மனித வளத்தை மேம்படுத்துவதுதான் மக்களின் மகிழ்ச்சிக்கு ஆதாரம் எனக் கருதிய அவர் தன்னுடைய சிறப்பான கவனத்துக்குரிய துறையாகக் கல்வியைத் தேர்ந்தெடுத்தார். குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தைப் பேணும் வகையில் தமிழகக் குழந்தைகளுக்குப் புரட்சித் தலைவர் மதிய சத்துணவுத் திட்டத்தை வழங்கினார். சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உயர் கல்வியே திறவுகோள் என்பதை உணர்ந்த அவர், தமிழ்ப் பல்கலைக் கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் மற்றும் மருத்துவப் பல்கலைக் கழகம் ஆகியவற்றை நிர்மாணித்தார். நமது மானிலத்தில் குழந்தைகளுக்கும்' இளைஞர்களுக்கும் நீண்டகால நன்மைகளை வழங்கும் கல்வி யின் முன்னேற்றத்திற்கான உறுதியான அடித்தளத்தை (Foundation) அமைத்தார்-

பெரும் வள்ளலாகத் திகழ்ந்த ஜான் டி. ராக்ஃபெல்லர் ஒரு முறை எழுதியதாவது:

அதிகபட்ச நன்மைகளைச் செய்வதற்கும் குறைந்த பட்ச தவறுகளைப் புரிவதற்கும் நாகரீகத்தை

# மாண்புமிகு முதல்வர் பேருரை



வேரிலிருந்து பேணி வளர்ப்பதற்கும் உடல் நலம், நன்மை, மகிழ்ச்சி ஆகியவற்றை எங்கும் பரப்புவதற்கும் செய்யப்படும் உதவியே உன்னதமான தத்துவமாகும். பெற்றிருக்கும் வளங்களை மேம்படுத்தவும் வளர்க்கவும் இதுவரை இல்லாத இடங்களில் முற்போக்கான, ஆரோக்கியமான உழைப்புக்கு வாய்ப்பளிக்கவும் முயர்சி, காலம், பொருள் ஆகியவற்றை முதலீடு செய்வதே உன்னதத் தத்துவமாகும். அனைத்து உதவிகளிலும் அடிப்படையாக விளங்குவது கல்வியே ஆகும்.

- புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் ஜான் டி. ராக்ஃபெல்லர் அவர்களும் ஒரே இலட்சியத்தையும் ஒரே எண்ணத்தையும் கொண்டிருந்தார்கள். இந்தப் பல்கலைக் கழகத்தின் மூலம் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் கனவை ஓரளவு நிறைவேற்றியுள்ளோம் என்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்த மருத்துவப் பல்கலைக் கழகம் மருத்துவக் கல்வியின் தரத்தையும் உயர்த்தியுள்ளது. மருத்துவக் கல்வியின் தரத்தை உயர்த்தவும், சமுதாயத்தின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குத் தொடர்புடைய மருத்துவப் பாடத்திட்டம் உருவாக்கவும் ஒரு மருத்துவப் பல்கலைக் கழகம் நிறுவ வேண்டுமென்று உலக அளவில் நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். நமது நாட்டில் பசுமைப் புரட்சியில் வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் தலையாய பங்கினை ஆற்றிய அனுபவமும் உள்ளது. 1982- இல் மாநில அரசு அமைத்த குழுவின் பரிந்துரையின் பேரில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது.

இந்த மருத்துவப் பல்கலைக் கழகம் ஒரு சிறப்பான குறிக்கோளுடன் கூடிய ஒரு பல்கலைக் கழகமாகும். நவீன சமுதாயத்திற்கு அறிவினை வழங்கக்கூடிய திறவு கோலாக இப்பல்கலைக் கழகம் விளங்குகிறது. நமது சமுதாயம் அதிக அளவில் பயன்படுத்தும் புத்தக அறிவினை இது உருவாக்குகிறது. நமது சமுதாயத்தில் முக்கிய அங்கம் வகிக்கும் அறிவு ஜீவிகளின் தாயகமாக இது விளங்குகிறது. தொழில்நுட்ப அறிவை வழங்கும் திறமை, அனுபவம் ஆகியவற்றைப் புதுப்பிக்கவும் பாதுகாக்கவும் உறுதியான கருவியாக இது விளங்குகிறது. விஞ்ஞான, தொழில் நுட்பத்தில் உயர்மட்டக் கல்வியை மக்கள் பெறும் வகையில் நேரிடையாகவோ மறைமுகமாகவோ கல்வி போதிக்கும் முக்கிய நிறுவனமாக இது விளங்குகிறது.

'அப்ரஹாம் பிளாக்ஸெனர்' - அவர்களுடைய வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால் பல்கலைக் கழகமென்பது 'ஒரு காலத்தின் கண்ணாடி', புத்தக வடிவிலும் செயல்முறை வடிவிலும் அடங்கியிருக்கும் தொடர்ச்சியான அறிவியல் - தொழில்நுட்ப சாதனைகளின் களஞ்சியமாகப் பல்கலைக் கழகம் விளங்கி, மாணவர்களுக்குப் பயன்படுகிறது. இன்று உலகமெங்கும் அமைந்துள்ள பல்கலைக் கழகங்கள், பொருளாதார முன்னேற்றத்திற்கும், உடல் மன ஆரோக்கியத்திற்கும் சமூக நீதிக்கும் சக்திமிக்க, நேரடிப் பங்கினை வழங்கக்கூடிய நிறுவனங்களாகக் கருதப்படுகின்றன.

மனித சிந்தனைகளில் பெரிய முன்னேற்றங்கள் பல்கலைக் கழகங்கள் மூலம் ஏற்பட்டுள்ளன.

விஞ்ஞானங்களிலும் அதன் பல்வேறு கிளைகளிலும் புதிய ஆராய்ச்சிகள், புதிய கண்டுபிடிப்புகள், பல்கலைக் கழகங்கள் மூலமாக நடைபெற்றுள்ளன. விஞ்ஞானத்தில் ஏற்பட்டுள்ள முக்கியமான முன்னேற்றங்கள் பல்கலைக் கழகத்திலிருந்து தான் தொடங்கியிருக்கின்றன.

கற்றுக் கொடுப்பதும், தகவல்களைத் தருவதும் சிக்கலான வாழ்க்கை முறைகளுக்குத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள சிறப்பான திறமைகளையும் அறிவாற்றல்களையும் மாணவர்க்கு வழங்குவதும் மட்டும் பல்கலைக் கழகத்தின் நோக்கமல்ல. மாறிவரும் மக்களின் தேவைகளுக்கேற்ற அம்சங்களைக் கல்வி முறை கொண்டிருக்க் வேண்டுமென்பது உண்மைதான். ஆனாலும் பல்கலைக் கழகங்கள் மனிதப் பண்புகளை வலியுறுத்தி, மனித நலத்துக்கு முக்கியத்துவம் தர வேண்டுமென்பதே என் கருத்து. பல்கலைக் கழக மாணவர்கள் பாடத்தை மட்டும் படிப்பதில்லை. தன் வாழ்க்கையில் என்றும் நினைவுகூரத்தக்க பருவத்தில், உயரிய, உன்னதப் பண்புகளால் கவரப்பட்டு மாணவர் குறிப்பிடத்தக்க ஒருவராகிறார். மனித அறிவு வளர்ச்சியையும், சிந்தனைகளையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளுவதன் மூலமும் 'உள்ளத்தோடு உள்ளம் உராய்ந்து கருத்துப் பரிவர்த்தனை செய்துகொள்ளுவதன் மூலமும் பக்குவம் பெற்ற மனிதராக உருவாக மாணவரிடத்தில் இப்பண்புகள் கிரியா ஊக்கியாகச் செயல்படுகின்றன. பல்கலைக் கழகம் ஆன்மாக்களின் நட்புக்கூடமாக - சத்தியத்தை நாடுவோரின் சங்கமாக அமைய வேண்டும். தற்கால வாழ்க்கைச் சூழ்நிலையில் எவ்வளவுதான் அவசியமாக இருந்தாலும் பொருளைப் பெறுவதையும் வாழ்க்கை வசதிகளைப் பெறுவதையும்விட மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் வாழ்க்கையில் இருக்கின்றன என்பதை நம்புபவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். அகிலத்துத் தீமைகளை அகற்ற அளவில்லாத ஆவல், பெருந்தன்மைமிக்க ஒரு நெஞ்சம், பரந்துபட்ட பார்வை இவற்றைப் பெறவும் தன்னலமற்ற, ஒருபால் கோடாத வழியிலே இலட்சியங்களைத் தொடரவும் பல்கலைக் கழகம் மாணவருக்கு உதவ வேண்டும்.

இப் பல்கலைக் கழகத்தின் பணி மகத்தானது. இங்கு மருத்துவர்களையும் - அறுவைச் சிகிச்சை நிபுணர்களையும் உருவாக்கும் பணி நடந்து வருகிறது. உடல், மன நோய்களை எதிர்த்துப் போராடும் சமுதாயத்திற்குத் தேவையான சேவைகளைப் புரியும் பொறுப்பு இந்த இளைஞர்களுக்கு உண்டு. வளர்ந்து கொண்டே வரும் மருத்துவச் செய்திகளை ஒரு மருத்துவ மாணவன் தொடர்ந்து படித்து வருவது மிகவும் கட்டாயமானது. இந்த அறிவு வளர வளர கூடவே தனித்துறைப் புலமையும் வளருவதால் சிறிய, மிகச் சிறிய பிரிவுகளில் கூரிய - மிகக் கூரிய கவனம் செலுத்த வேண்டியது ஒரு மருத்துவ மாணவருக்குக் கட்டாயமாகின்றது. மருத்துவர்களும் அறுவை சிகிச்சை நிபுணர்களும் தங்களது அறிவைத் தொடர்ந்து மேம்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். நோயின் தன்மையைப் புரிந்து கொள்ளும் திறமையைக் கூர்மைப்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும். நோய்க்கேற்ற சிகிச்சையை நோயாளிகளுக்கு வழங்க வேண்டும். மேற்கத்திய நாடுகளில், குறிப்பாக இந்நூற்றாண்டின் இறுதியில், குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை



மருத்துவ அறிவியல் துறையில் அடைந்துள்ளனர்.

உயிரியல், உயிர்-வேதியல், நுண் அறுவை மருத்துவம் போன்ற துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் காரணமாக, இதுவரையிலும் புனிதமாகவும் தொடவே முடியாத பகுதியாகவும் கருதப்பட்ட இதயத்தையும், மூளையையும் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் தொட்டுவிட்டார்கள். வருங் காலத்தில் உடல் உறுப்புகளை மாற்றி, செயற்கை உறுப்புகளைப் பொருத்துவது சாதாரண விஷயமாகிவிடும்.

மருந்துத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் காரணமாக மருந்துப் பொருட்கள் மூலம், நினைவு, எண்ணம், ஆசைகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் நிலையை எட்டிவிட்டோம்.

நவீன மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள இது போன்ற முன்னேற்றங்கள் மனித சமுதாயம் முழுவதையும் வெகுவாகப் பாதித்து அவற்றின் மீது தொடர்ந்து பெருத்த பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. மனிதன் மீது மருத்துவ விஞ்ஞானத்தின் பாதிப்பு எதிர்காலத்தில் பெருகும். வாழ்வைக் கட்டுப்படுத்தும் மருத்துவத் துறையின் சக்தி வளர வளர, மருத்துவர் தன்னுடைய திறமையைப் பயன்படுத்தும் முறை நம்மைப் பொறுத்த வரை முக்கியமான ஒன்றாக உள்ளது. நோய்களைக் கண்டுபிடிப்பதில் ஏற்பட்டுள்ள சக்திவாய்ந்த புதிய முறைகளால் மருத்துவ விஞ்ஞானம் மிகப் பெரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளது. விஞ்ஞானம் வழங்கியுள்ள புதிய முறைகளின் மூலம் மருத்துவம் மனித உடலைப் பற்றி, புதிய உண்மைகளையும் நிலைமைகளையும் கண்டறிய முடிகிறது. இப்படிக் குவிந்துள்ள தகவல்கள் நோயைக் கண்டு பிடிக்கவும், சிகிச்சை அளிக்கவும் புதிய வழிமுறையை வழங்கியுள்ளன. மருத்துவத் துறையில் வந்துள்ள விஞ்ஞான அணுகுமுறை, மனித உடலை மருத்துவர் ஒரு பொருளாகவே கருத வழி வகுத்துள்ளது. மருத்துவத்துறையின் வழி முறைகளில் ஒருவர் ஆழமாகச் செல்லச் செல்ல மனித உடலை ஒரு பௌதிகப் பொருளாகவே கருதுகிறார்.

மருத்துவர், மருத்துவ அறிவு, மருத்துவத் தகவல் ஆகியவற்றை முழுமையாகப் பெற்றிருந்தாலும், அவர் மருத்துவ ஞானத்தைப் பெற்றவராகக் கருத முடியாது.

டி.எஸ்.எலியட் ஒரு முறை இக்கருத்தையே எதிரொலித்தார். அறிவைத் தேடுவதில் நாம் தொலைத்துவிட்ட ஞானம் எங்கே? தகவல்களைத் தேடுவதில் நாம் தொலைத்து விட்ட அறிவு எங்கே?

(Where is the wisdom we have lost in knowledge? Where is the knowledge we have lost in information?)

விஞ்ஞானத்திற்குரிய அமைதியான பகுத்தறிவு அடிப்படை மருத்துவத்திற்கும் தேவைப்படுகிறது. அது மனித நேயத்தைப் பிரதிபலிப்பதாக இருப்பதாக இருக்கவேண்டும். வாழ்க்கையையும் மனிதனையும் தன்னிகரில்லாததாகவும் சிறப்பாகவும் கருதும் தகுதி வேண்டும். ஒருவர்க்கொருவர் தொடர்பு கொள்ளும் மனப்பான்மையுடன் மருத்துவர் நடக்க வேண்டும். நிதானம் தவறாத தொழில் நுட்ப நிபுணராகவும் இதயபூர்வமான அன்பும் அக்கறையும் காட்டுகிற தோழனாகவும் இருக்க வேண்டும். மனித இயல்பையும் உயிர்ப் பண்பையும் ஊடுருவிப் பார்க்கின்ற தெளிந்த பார்வை, முழுமையான ஈடுபாடு இவற்றின் அடிப்படையில் மருத்துவத் தொழில் தன் தகுதியை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். மருத்துவரிடம் ஒரு தொலை நோக்குப் பார்வையையும் ஒருங்கிணைந்த முழுப் பார்வையையும் வளர்ப்பதை மருத்துவக் கல்வி குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். மருத்துவ நிபுணர்களுக்கென்று சமுதாயத்தில் தனிப்பட்ட மதிப்பும் குறிப்பிட்ட பணியும் உண்டு. ஒரு நோயாளி நோயினால் பாதிக்கப்பட்ட உடலின் ஒரு பகுதியில் மட்டும் துன்புறவில்லை நோயால் உடல் உள்ளம் முழுவதும் துன்பப்படுகிறான். எனவே மருத்துவரின் தொழில் திறன் பற்றிய ஒரு முழுமையான ஒருங்கிணைந்த பார்வை நமக்குத் தேவைப் படுகிறது.

பொதுவாக மேற்கத்திய சமுதாயத்தில் மருத்துவத்துறைத் தேர்ச்சி என்பது வெகு ஆழமாக வேரூன்றி விட்டது. பொது மருத்துவர் இல்லையென்றே சொல்லலாம். தனித் துறையில் தேர்ச்சி பெற்றவர்கள் ஒரே கூரையின் கீழ் அலுவலகங்களை வைத்துள்ளனர். நோயாளிகள் ஒரு மருத்துவரிடமிருந்து வேறொருவருக்கு அனுப்பப்படுகின்றனர். எந்தத் துறையில் தேர்ச்சி பெற்ற மருத்துவரை முதலில் அணுகுவது என்பதே நோயாளியின் பிரச்சினையாக இருக்கும். நோயாளியைச் சோதனை செய்யப் பொது மருத்துவரே கிடையாது. இந்தியா போன்ற நாடுகளில் பொது மருத்துவருடைய சேவை ஆரம்பம் முதல் கடைசி வரை இருக்க வேண்டுமென்பதே என்னுடைய கருத்து. ஏனெனில் நோயாளியைப் பற்றியும், அவர்களுடைய சூழ்நிலையைப் பற்றியும் பொது மருத்துவருக்கு நன்கு தெரியும். பொது மருத்துவர் வழங்கக் கூடிய தகவல்களின் அடிப்படையில் தனித்துறைத் தேர்ச்சியாளர் சிகிச்சையளிக்காவிட்டால், குருட்டுத் தனமாகச் சிகிச்சை அளிப்பதாகவே தெரியும். அது நோயாளிக்கு நன்மை பயப்பதைவிட தீமையையே அதிகம் பயக்கும்.

இத்தகைய சூழ்நிலையில் தான் ஒருங்கிணைந்த மருத்துவம் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

**அரசு அங்கீகாரத்துடன் நடத்தப்பட்டு வரும் தனியார் ஊனமுற்றோர் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு, மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் உணவுத் தொகை ரூபாய் முப்பதிலிருந்து, ரூபாய் தொண்ணூறாக உயர்த்தப்பட்டுள்ளது.**

**கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் தேதி முதல் இது அமலுக்கு வருகிறது. இதன் மூலம் 1,200 குழந்தைகள் பயன் பெறுவார்கள்.**

**இதற்கான உத்தரவை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பிறப்பித்திருக்கிறார்.**

கனடாவைச் சேர்ந்த தலை சிறந்த மருத்துவ நிபுணர் சர். வில்லியம் ஆஸ்லர் கூறுகையில்''காச நோயின் விளைவு, நோயாளியின் நுரையீரல் களைவிட, , மூளையுடனே அதிகம் தொடர்பு உடையது'' என்கிறார்.

அதேபோல் ஹிபோகிராடஸ் கூறுகையில், ''ஒரு நோயாளி எத்தகைய நோயினால் பாதிக்கப் பட்டிருக்கின்றான் என்பதை விட, எத்தகைய நோயாளி நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்பதையே அறிய வேண்டும்'' எனக் கூறுகிறார். நோயை எதிர்த்துப் போராடும் உணர்வுள்ள நோயாளி, முற்றிலும் நம்பிக்கையிழந்து நிலை மையை ஏற்றுக்கொள்ளும் நோயாளியைவிட நன்கு வாழ்கிறார்கள் என்பது புற்றுநோய் ஆராய்ச்சியில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

நோயைக் காண்பதற்கு முன் நோயாளியைக் காண்பதே சிறந்தது என்பதற்கான ஆதாரங்களை நன்கு புரிந்து கொள்வதே நல்ல மருத்துவருக்கு அழகாகும். அதாவது நோயாளியின் மீது தீவிர நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும். மருத்துவர் நோயாளியை நெருக்கமாக உணர வேண்டும். நோயாளியின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்போது அவர்களுடைய பயம், எதிர் பார்ப்புகள் குறித்துச் செயல்படும் போதும் நட்புணர்வோடு அணுக வேண்டும். விஞ்ஞானத் தின் பெயரால் சுவரைவிட கடினமான தடுப்பு களைத் தனக்கும் தன் நோயாளிகளுக்குமிடையே ஏற்படுத்திக் கொள்ளும் மருத்துவர்களை நான் அறிவேன். அவர்களது மனிதாபிமானமற்ற தன்மை நோயைக் குணமாக்குவதற்கு மாறாக அதை மேலும் மோசமாக்குகின்றது. நோயைவிட நோயாளியே முக்கியம் என்பதையே ஹிபோ கிராடஸ் கோடிட்டுக் காட்டுகிறார்.

''நான் ஏற்றுக்கொள்ளும் மருத்துவக் கோட்பாடு என் திறமைக்கும் தீர்ப்புக்கும் ஏற்றபடி நோயாளிகளுக்கு நன்மை பயக்கும் - அவர் களுடைய காயத்திற்கோ வேறு தவறுக்கோ அல்ல''

நோயாளியின் ஒட்டுமொத்தத் தேவைகளைப் புரிந்து கொள்ளவும், அவர்களுக்கு அவைகளை வழங்கவும் தேவையானவைகளைக் கருத்தில் கொள்ளும் வகையில் இந்த உறுதிமொழியின் பொருள் விசாலப்படுத்தப்பட வேண்டும்.

மருத்துவர்களைப் பற்றி மாமுனிவர் திரு வள்ளுவர் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்-

''நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்''

''மருத்துவர் நோயின் தன்மையைக் கண் டறிந்து, அதன் காரணங்களையும் அவற்றை நீக்கும் முறைகளையும் கண்டுபிடித்து, மருத்துவ இயலின் நியதிப்படி சரியாக மருத்துவம் செய்ய வேண்டும்.

ஒரு மருத்துவரின் வாழ்நாள் முழுமைக்கும் கடைப்பிடிக்க வேண்டிய, மருத்துவருக்கும் நோயாளிக்கும் இடையே இருக்கவேண்டிய மனித நேய உறவின் முக்கியத்துவம் பற்றிய தத்துவமே இந்த வரிகளில் அடங்கியுள்ளது.

தம்மிடம் வரும் நோயாளிகளுக்கு ஒருங் கிணைந்த சிகிச்சையை வழங்கும் எண்ணத்துடன் கூடிய மருத்துவர்களையும் அறுவைச் சிகிச்சை நிபுணர்களையும் உருவாக்குவதே மருத்துவக் கல்வி யின் குறிக்கோளாக இருக்க வேண்டுமென நான் கருதுகிறேன். இதன் அடுத்தபடி, சமுதாயத்தின் தேவைகளில் அத்தகைய மருத்துவர்களின் பங் கினைப் புரிந்து கொள்வது தான் சமூகம் முழுமைக்கும் முழுமையான ஆரோக்கியமான வாழ்வினை அளிக்கக் கூடிய தகுதிபடைத்த மருத்துவர்களைப் படைப்பதே மருத்துவக் கல்வி யின் குறிக்கோளாக விளங்க வேண்டுமென நம்புகிறேன். சுகாதார பாதுகாப்பு என்பது குணப்படுத்தக் கூடியதாகவும், மேம்படுத்துவதாக வும், நோய் தடுப்பதாகவும், மறுவாழ்வு அளிப்ப தாகவும் இருக்க வேண்டும். சமூக அளவில் முதலில் நோயைக் கண்டறிந்து சிகிச்சையளித்து சாதாரண நோய்களைச் சமாளிக்கும் அடிப்படை மருத்துவரே இன்றைய நம் தேவையாகும். இன் றைய மருத்துவ மாணவர்கள் தனித்துறைத் திறமை பெற்று சமுதாயத்தின் பொது சுகாதாரம் பற்றிய மருத்துவத் தேவைகளைச் சரியாகப் புரிந்து கொள் ளாமல் தங்கள் படிப்பை முடித்துவிடுகின்றனர். சீனா, ஜப்பான், போன்ற நாடுகளில் மருத்து வர்கள் மேற்கத்திய மருத்துவக் கல்வியைப் பயின்று சிறந்த சமூக சுகாதார மருத்துவராகின்றனர்.

நமது நாட்டில், நமது பண்டைய மருத்துவ முறையில், நோயாளியின் உடல், மனம், உணர்வு களுக்குச் சிகிச்சை அளிக்கும் ஒருங்கிணைந்த முயற்சியை வலியுறுத்தும் பாணி உள்ளது. இந்தக் கோணத்தில் ஆராய்ச்சி செய்து, இது போன்ற ஒருங்கிணைந்த கண்ணோட்டத்தின் முக்கிய அம்சங்களைப் புரிந்துகொண்டு மாணவர் களுக்குப் போதிக்க வேண்டுமென மருத்துவப் பல்கலைக் கழகத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

நம் நாட்டின் இன்றைய தேவை அடிப்படை சுகாதாரக் கவனிப்பு ஆகும். சுகாதாரக் கவனிப்பு மக்களின் - குறிப்பாகக் கிராமத்து மக்களின் - வீடுகளில் வழங்கப்பட வேண்டும். நெடுங்கால மாகத் தனித்தன்மை பெற்ற மருத்துவப் பாதுகாப்பு நகரங்களிலேயே, 20 சதவிகித மக்களுக்கு மட்டும் கிடைத்துவந்துள்ளது.

மருத்துவப் பாதுகாப்பைக் கிராமப்புற மக் களுக்கு வழங்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. 2000-ஆம் ஆண்டில் அனைவருக்கும் நல வாழ்வு'' எனும் ஐ.நா. சபையின் அறிவிப்பு வெறும் மருத்துவக் குறிக்கோள் மட்டும் அல்ல. அது ஒரு சமூக இலட்சியம். அதில் ஏராளமான பொருளாதாரச் செய்திகள் அடங்கியுள்ளன.

அடிப்படை சுகாதார நிலையங்களை மேம்

படுத்துவதன் மூலமே இக்குறிக்கோளை நாம் அடைய முடியும்.

நமது புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டத்துடன் நாம் அடித்தளம் அமைத்துள்ளோம். குக்கிராமங்களில் வாழும் மக்களுக்குக் கூட சுகாதார மருத்துவ வசதிகளைச் செய்து வருகிறோம். சமீபத்தில் தமிழ்நாட்டின் அனைத்து மக்களுக்கும் பயன் அளிக்கும் வகையில் இலவச சுகாதார முகாம்களை நாம் நடத்தி உள்ளோம். 9,100 முகாம்களில் 51 இலட்சம் பயனாளிகளுக்குச் சிகிச்சை அளித்துள்ளோம். மருத்துவ சுகாதார வசதிகள் மக்களின் வீடுகளுக்கே கொண்டு செல்லப்பட்டிருப்பதால், இந்தத் திட்டம் மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதேநேரத்தில், வளர்ந்து வரும் மக்கள் பெருக்கத்தால் சுகாதார மருத்துவத் தேவைகளும் ஏராளம். வசதி படைத்தோர் தனித் திறமை பெற்ற மருத்துவப் பாதுகாப்பினை நாடு முழுவதும் ஏற்படுத்திட உதவி புரிந்துள்ளனர். ஆனால் பெரும்பான்மையாக உள்ள ஏழைகள் அரசாங்க மருத்துவமனைகளையே நம்பியுள்ளனர். அரசு மருத்துவமனைகளில் உள்ள வசதிகளை மேம்படுத்த அனைத்து முயற்சிகளையும் அரசாங்கம் எடுத்துவருகிறது. அதே நேரத்தில் அரசின் முயற்சிகளை நிறைவு செய்யும் வகையில் தனியார் துறையிலிருந்தும் உதவி பெறுவது அவசியமாகிறது. புதிய மருத்துவமனைகள், புதிய நோய் கண்டுபிடிப்புக் கருவிகள் தனித்துறை திறமை வாய்ந்த ஒரு புதிய தலைமுறை, புதிய வழிகள், சொகுசுகள், பணம் தந்தால் தாராளமாகக் கிடைக்கின்றன. இவையனைத்திலும் ஒரு வியாபார நோக்கம் உள்ளது. ஆனாலும் தனியார் மருத்துவமனையில் உள்ள ஒரு சில மருத்துவர்கள் சேவை உணர்வுடன் ஏழைகளுக்கு உதவுகின்றனர். தன்னலமற்ற சேவையால் மருத்துவர்கள் ஒளி விளக்காகப் பிரகாசித்து, எண்ணிக்கையில் குறைவாயிருந்தாலும், நீங்கள் தேர்ந்தெடுக்கின்ற மருத்துவப் பாதையை ஒளிமயமாக்கிக் கொண்டுள்ளனர். நீங்கள் உங்கள் வாழ்வில் முன்னேறும் பொழுது ஏழைகளுக்கு உதவி செய்வதையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலம் அனைவரது பாராட்டுதலையும் நன்றியினையும் நீங்கள் பெறுவீர்கள். எடுப்பதை விட கொடுப்பதில் (குறிப்பாக ஏழை மக்களின் உடல் நிலை பாதிக்கப்படும்போது) அதிக மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை ஏழை பணக்காரன் என்னும் பாகுபாடு கிடையாது. சாதி, சமய, பொருளாதார வேறுபாடு இன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உங்கள் உதவி தேவைப்படுகிறது.

எனவே உங்கள் அறிவையும் திறனையும் கொண்டு ஏழை மக்களின் ஆரோக்கியத்திற்கு உதவுங்கள் என உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். நமது புனிதமான நூல்கள் எப்போதும் 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்பதையே வலியுறுத்தி வந்துள்ளன. இதில் மருத்துவர்களே முன்னிலை வகிக்க வேண்டும்.

அனைத்து வசதிகளுடன் கூடிய வளாகம் டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்தின் நெடுநாள் தேவையாக இருந்து வருகிறது. அதனுடைய அவசியத்தை வலியுறுத்தி துணைவேந்தர் டாக்டர் பி.பி. ராஜன் அவர்கள் என்னுடன் விவாதித்தார். நகரின் மையத்தில் குறைந்த பட்சம் நிர்வாகப் பிரிவினையும் நூலகத்தையும் அமைக்க வேண்டும் எனக் கருத்துத் தெரிவித்தார். டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்தின் நிர்வாகப் பிரிவினையும் நூலகத்தையும் அமைக்க, கிண்டியில் உள்ள கிங் இன்ஸ்டிடியூட்டில் நிலத்தை அரசு ஒதுக்கித் தரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெகுவிரைவில் பல்கலைக் கழகத்தின் முழு வளாகமும் உருவாக இது முதல் படியாக இருக்கும் என நான் நம்புகிறேன்.

பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பட்டதாரிகளையும், பரிசு பெற்றவர்களையும் நான் பாராட்டுகிறேன். மருத்துவத்துறையில் இன்று இருப்பதைப் பெருமையாக நீங்கள் கருத வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் சேவையை எதிர்பார்க்கின்ற மக்களுக்குச் சுயநலமின்றி உங்களை நீங்கள் அர்ப்பணிப்பீர்கள் என்ற நம்பிக்கையில், உங்களது மருத்துவக் கல்விக்கான பெரும் பகுதி செலவினை ஏழைச் சமுதாயம் ஏற்றுள்ளது என்பதை நீங்கள் உணரவேண்டுமென நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு டாக்டர் ஆஃப் சைன்ஸ் (Doctor of Science) பட்டம் வழங்கியமைக்காக நான் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

முதல் பக்க அட்டையில்...

29.9.92 அன்று நடைபெற்ற டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில்- மேதகு ஆளுநர், திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கும் காட்சி.

கடைசிப் பக்க அட்டையில்...

2.10.92 அன்று காந்தியடிகளாரின் பிறந்த நாளன்று, அன்னாரின் திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்.

# மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு டாக்டர் பட்டமளிப்பு விழா

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது பட்டமளிப்பு விழா 29.9.1992 அன்று சென்னைப்பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்கு மேதகு ஆளுநரும், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக வேந்தருமான திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் தலைமை தாங்கினார்.

பல்கலைக்கழக வேந்தர், இணை வேந்தர், துணை வேந்தர், ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் ஊர்வலமாகச் சென்று மேடையை அடைந்தனர்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழா மேடையை அடைந்த போது அவருக்கு பாண்டு வாத்தியம் முழுங்க சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது.

விழாவிற்கு வருகை புரிந்தவர்களை பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் பி.பி. ராஜன் அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

துணை வேந்தர் டாக்டர் பி.பி. ராஜன் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு டாக்டர் பட்டம் (Doctor of Science - Honoris Causa) வழங்குவதற்கான பட்டயத்தைப் (Citation) படித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், மக்கள் நல்வாழ்வுக்காகப் படைத்திட்ட கீழ்க்கண்ட சாதனைகளைப் பாராட்டி அவருக்கு இந்தக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

★ ஏழைத் தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்க மலிவு விலை மதுவை ஒழித்தல்.

★ 'அனைவருக்கும் ஆரோக்கியம்' என்ற கொள்கை வழி மருத்துவ வசதிகளைப் பெருக்குதல்!

★ கிராமப்புற மக்களுக்கும் 'அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர் ஆர்த்தரோஸ்கோப் 300 எம்.ஏ. எக்ஸ்ரே' கருவி போன்ற நவீன சாதனங்களின் மூலம் பயன் கிடைக்குமாறு செய்தல்.

★ மாநிலம் முழுவதும் பட்டிதொட்டியெங்கும் 9,100 மருத்துவ முகாம்கள் மூலம் 51 இலட்சம் மக்கள் பரிசோதிக்கப்பட்டு, சிறப்பு மருத்துவ சிகிச்சை அளிக்க, 'புரட்சித்தலைவி மருத்துவ நலத்திட்டம்!'

★ மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் - வட்டார மருத்துவமனைகளில் தயார் நிலையில் உயிர் காக்கும் மருந்துகள்! மருத்துவமனைகளின் பராமரிப்பில் புதிய உத்வேகம்!

★ கிராமப்புறத் தாய்மார்களுக்குப் பயனளிக்கும் வகையில் குடும்ப நலத்திட்டங்களில் நடைமுறை சாத்தியமான அணுகுமுறை!

★ உடல் ஊனமுற்றோர் நலனுக்கெனத் தனியாக ஒரு இயக்ககம்!

★ சிறப்பினமாக 35 இலட்சம் ரூபாய் செலவில் உடல் ஊனமுற்றோருக்குச் சாதனங்கள்!

★ முதியோர் ஓய்வூதியம் மாதத்திற்கு 50 ரூபாயிலிருந்து 75 ரூபாயாக அதிகரிப்பு!

★ ஓய்வூதியம் அனுமதிக்கப்படுவதில் பயன் பெறுவோர் எண்ணிக்கைக்கு வரையறை இல்லை!

★ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் 72 இலட்சம் சிறார்களுக்கு வழங்கப் படும் சத்துணவில் புரதச் சத்தை அதிகரிக்க 'சோயா மாவு'.

★ டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்படி கருவுற்ற மகளிருக்கு மகப்பேறு காலத்தில் வழங்கப்படும் மாதாந்திர நிதி உதவி 50 ரூபாயிலிருந்து 75 ரூபாயாக அதிகரிப்பு!

★ பள்ளி மாணவ மாணவியருக்கு மருத்துவப் பரிசோதனைத் திட்டம்!

பல்கலைக்கழக வேந்தர் மேதகு ஆளுநர், திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டத்தை (Degree of Doctor of Science - Honoris Causa) வழங்கினார். சபையினரின் பலத்த மகிழ்ச்சி ஆரவாரத்திற்கு இடையே மாண்புமிகு முதல்வர் அவர்கள் டாக்டர் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெறும் இரண்டாவது டாக்டர் பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

அதைத் தொடர்ந்து பேராசிரியர் ஜே.எஸ். பஜாஜ் (மத்தியத் திட்டக்குழு உறுப்பினர் - நல்வாழ்வு) அவர்களுக்கு டாக்டர் பட்டத்தை (Honoris Causa) மேதகு ஆளுநர் அவர்கள் வழங்கினார். மருத்துவக் கல்வியை முடித்த 179 மருத்துவர்களுக்கு டாக்டர் பட்டங்களை மேதகு ஆளுநர் வழங்கினார்.

இவ்விழாவில், மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சரும், மருத்துவப் பல்கலைக் கழகத்தின் இணை வேந்தருமான திரு. சு.முத்துசாமி அவர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பட்டமளிப்பு விழாப் பேருரை ஆற்றினார்.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
என். இளங்கோ.



# மத்திய அரசுக்கு முதல்வர் கோரிக்கை

**மத்திய அரசை, பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வினை நீக்கக் கோரியும், இரசாயன உரங்களின் விலைகளை மீண்டும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை:**

**ம**த்திய அரசு கடந்த செப்டம்பர் 16-ஆம் தேதி முதல் பெட்ரோலியப் பொருட்களின் விலையைக் கடுமையான அளவிற்கு உயர்த்தி உள்ளது. மேலும் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து பெட்ரோலியப் பொருட்களின் விலையும் வெகுவாக உயர்த்தப்பட்டது. குறிப்பிட்டுச் சொன்னால், சென்ற ஆண்டு விலைகளோடு ஒப்பிடும் பொழுது இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் அறிவித்த விலை உயர்வு - அதாவது

டீசலுக்கு : *3.43* சதவிகிதம் என்றும்;
பெட்ரோலுக்கு : *3.87* சதவிகிதம் என்றும்;
சமையல் எரிவாயுவுக்கு : *3.93* சதவிகிதம் என்ற அளவில் இருந்ததற்கே தமிழக அரசின் சார்பில் நான் நமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தேன். அந்த விலை உயர்வை ஏழை, எளிய மக்களால் தாங்க முடியாத சுமை என்றும் சுட்டிக் காட்டி இருந்தேன்.

அப்படிப்பட்ட விலை உயர்வே தாங்க முடியாத ஒன்று என்று கருதப்பட்ட நிலையில், தற்போது திடீரென மேலும் அறிவிக்கப்பட்டுள்ள இந்த விலை உயர்வு ஐந்து, ஆறு மடங்கு அதிகமான அளவிற்கு அதாவது:

டீசலுக்கு : *20.80* சதவிகிதமும்;
பெட்ரோலுக்கு : *7.04* சதவிகிதமும்;
சமையல் எரிவாயுவுக்கு : *21.84* சதவிகிதமும் என்கிற அளவில் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த விலை உயர்வின் காரணமாகத் தமிழகத்தில் ஒரு லிட்டர் டீசல் ரூ.*6.91* என்றும், ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.*18.38* என்றும், சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்று ரூ.*86.58* என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் இது மிகக் கடுமையான பொருளாதாரச் சுமையைச் சாதாரண மக்களின் மீது சுமத்தியுள்ளது என்கிற கருத்து எங்கும் நிலவி வருகிறது.

குறிப்பாகச் சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை மட்டும் ரூபாய் *15.52* என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இது நடுத்தர மக்களுக்கும், தாய்மார்களுக்கும் தாங்க முடியாத பெரிய சுமையாக இருப்பதாக உணரப்படுகிறது.

இந்த விலை உயர்வினால், சாதாரண மக்கள் பயன்படுத்தும் இன்றியமையாப் பொருட்களின் விலைகளும் உயர்ந்து, ஏழை எளிய மற்றும் நடுத்தர வர்க்க மக்கள், பெரிதும் பாதிக்கப்படுகிற நிலை உருவாகி உள்ளது. குறிப்பாகப் பேருந்துகளில் பயணம் செய்யும் பாமர மக்களும், இந்த விலை ஏற்றத்தினால் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக்கப்படுவார்கள். மேலும், தமிழ்நாட்டில் விவசாயிகள் கணிசமான அளவில், ஆயில் எஞ்சின் பம்ப்செட்டுகளைப் பயன்படுத்துவதால், இந்த விலை உயர்வு, அவர்களின் பொருளாதார நிலையைப் பெரிதும் பாதிக்கும்.

இந்த விலை உயர்வின் விளைவாக, சமையல் எரிவாயு விலை, மிக அதிக அளவுக்கு உயர்த்தப்பட்டு இருப்பதால், கிராமப்பகுதிகள் முதல் நகரப் பகுதிகள் மற்றும் மாநகரப் பகுதிகள் வரை எல்லா இடங்களிலும், எல்லா மக்களுக்கும், இது செலவினத்தை அதிகரிக்கும். இந்த மிக அதிக அளவிலான திடீர் விலை உயர்வினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

இந்த விலை உயர்வினால், பொதுவாக விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்துவதற்குத் தமிழக அரசு எடுத்து வரும் அனைத்து நடவடிக்கைகளும், பயன் அளிக்காமல் போய்விடுகிற சாத்தியக் கூறுகள் உள்ளன.

இவ்வாறு சாதாரண மக்களைப் பாதிக்கும் வகையில் பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்த்தப்பட்டுள்ள சூழ்நிலையில் விவசாயப் பெருமக்களின் அடிப்படைத் தேவையான இரசாயன உரங்களின் விலைகளும் மூன்று, நான்கு மடங்கு உயர்ந்திடும் சூழ்நிலை உருவாகி உள்ளது.

**● 1991-92-இல் கைத்தறி மற்றும் விசைத்தறி மூலம் 20,100 மில்லியன் சதுர மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டது. இதே ஆண்டில், ரூ.5,462 கோடி மதிப்புக்கு ஜவுளித் துணி ஏற்றுமதி செய்யப்பட்டது.**

24.8.1992 அன்று மத்திய அரசு உரக் கட்டுப்பாட்டுக் கொள்கையினை மாற்றி அமைத்து 7 வகையான தழைச்சத்து உரங்களை (Nitrogen) கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த தழைச்சத்து உரங்களின் விலை 10 சதவிகித அளவு குறைந்துள்ளது. இதற்காக மத்திய அரசிற்கு நம்முடைய பாராட்டையும், நன்றியையும், தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். இதர உரங்களான மணிச்சத்து (Phosphate) மற்றும் சாம்பல் சத்து (Potash) உரங்களைக் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கியது. தற்போது கட்டுப்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட உரங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு தனிப்பட்ட முறையில் விவசாயிகளுக்குத் தாங்க முடியாத துயரினையும் மற்றும் அனைத்துத் தரப்பு மக்களிடம் அதிருப்தியையும் உருவாக்கி உள்ளது. குறிப்பாகக் கட்டுப்பாடு நீக்கப்பட்ட இரசாயன உரங்களின் விலை 90 சதவிகிதம் முதல் 260 சதவிகிதம் வரை உயர்ந்துள்ளது.

குறிப்பிட்டுச் சொன்னால், 50 கிலோ எடையுள்ள D.A.P. (Diammonium Phosphate) உரம் ரூ.241.71-லிருந்து ரூ.454.60 ஆக உயர்ந்துள்ளது. 50 கிலோ எடையுள்ள Super Phosphate ரூ.64.13-லிருந்து ரூ.155-க்கு உயர்ந்துள்ளது. 50 கிலோ எடையுள்ள Muriate of Potash ரூ. 87.85-லிருந்து ரூ.315.15-க்கு உயர்ந்துள்ளது. இந்த விலை ஏற்றமெல்லாம் தன்னிச்சையாக உர உற்பத்தியாளர்கள் நிர்ணயித்த விலை என்பதால், வெளிச்சந்தையில் இதற்கும் மேலும் இவற்றின் விலை பன்மடங்கு உயர்ந்துள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

ஏனெனில் அகில இந்திய அளவில் நமது மாநிலம்தான் அதிக அளவில் Potash உரங்களை உபயோகித்து வரும் மாநிலமாகும். இந்த விலையேற்றத்தால் தமிழ்நாடு மற்றவர்களைவிட அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இரசாயன உரங்களுக்கான 496 கோடி ரூபாய் அளவிற்குச் செலவு செய்ய வேண்டிய தமிழக விவசாயிகள் தற்போது இந்த விலை உயர்வின் காரணமாக ரூ.846 கோடி செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதாவது ஏறத்தாழ 350 கோடி ரூபாய் இரசாயன உரத்திற்காகக் கூடுதல் பளுவைச் சுமக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது வேதனைக்குரியதாக உள்ளது. இவ்வளவு பெரும் சுமையை ஏற்கெனவே துயருற்றுள்ள தமிழக வேளாண் பெருமக்களால் எப்படித் தாங்க முடியும் எனத் தமிழக அரசு பெரும் கவலை கொண்டுள்ளது. அவர்களது கவலையைப் போக்கத் தொடர்ந்து அவர்களுக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

ஆகவேதான் தமிழக மக்களின் எண்ணத்தை, ஏக்கத்தை, துன்பத்தை மத்திய அரசுக்கு ஒருமித்த குரலில் எடுத்துரைக்கிற வகையில் மத்திய அரசு தற்போது அறிவித்துள்ள பெட்ரோலியப் பொருட்களின் மிக அதிகமான விலை உயர்வை மறுபரிசீலனை செய்து, இவ்விலை உயர்வினை முற்றிலுமாக அகற்ற வேண்டும் என்றும், இரசாயன உரங்களின் விலையை மீண்டும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் இம்மாமன்றத்தின் மூலம் மத்திய அரசைத் தமிழக அரசின் சார்பிலும்; தமிழக மக்களின் சார்பிலும் கேட்டுக் கொள்கிறேன். •

## சுத்தமே சுகம்!

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். எனவேதான், மத்திய அரசு, எட்டாவது திட்டத்தில் ஊரக சுகாதாரத் திட்டத்திற்கு ரூ.674 கோடி ஒதுக்கியுள்ளது. இதனைக் கொண்டு 33.7 இலட்சம் கிராமப்புற வீடுகளில் கழிப்பறைகள் கட்டப்படும். கிராம மக்களில் 2-3 சதவிகிதத்தினர் இதனால் பயனடைவர். ஏழாவது திட்டத்தில் இதற்கு ரூ.180.63 கோடி ஒதுக்கப்பட்டது. வேறு பல திட்டங்களின் பலனாக 1985 முதல் 1992 வரை 22.60 இலட்சம் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

நடப்பு நிதியாண்டில் (1992-93) மட்டும் ரூ.155.50 கோடி செலவில் 3.50 இலட்சம் கழிப்பறைகள் கட்டப்படும். இதனால் 17.50 இலட்சம் கிராமப்புற மக்கள் பயன் பெறுவர்.

## மஞ்சள்

மங்கையர் மங்கலச் சின்னமாகக் கருதப்படுகின்ற மஞ்சள் ஒருபுறம் இருக்கட்டும். சமையலுக்குப் பயன்படும் கறி மஞ்சளைப் பற்றிப் பார்ப்போமா? உலகிலேயே அதிக அளவில் மஞ்சளை உற்பத்தி செய்வது நம்நாடுதான். ஆண்டொன்றுக்கு 323 ஆயிரம் டன் மஞ்சள் இந்நாட்டில் விளைகிறது. இதில், பத்தாயிரம் டன் ஏற்றுமதியாகிறது. இதன்மூலம் கிடைக்கும் வருமானம் ரூ.14 கோடி வாசனைப் பொருட்கள் ஏற்றுமதியால் கிடைக்கும் வருவாயில் 5.2 சதவிகிதம் மஞ்சள் மூலமே!





**விரைவில்...**

# நாடகக் கலைஞர்களுக்கு நலம் சேர்க்கும் சலுகைகள்!

## சென்னை விழாவில் முதல்வர் அறிவிப்பு

சிறந்த நாடகக் குழுவினரான 'நாடகப் பிரியா' என்ற அமைப்பின் 3000-வது நாடக விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 26.9.92 அன்று கலந்து கொண்டு தலைமை தாங்கிச் சிறப்பித்தார்.

சென்னையிலுள்ள 'மியூசிக் அகாடெமி' அரங்கில் நடைபெற்ற இந்த இனிய விழாவில் நடத்தப்பட்ட திரு. எஸ்.வி. சேகர் குழுவினரின் 'பெரிய தம்பி' என்ற நாடகத்தையும் கண்டு களித்தார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளு மன்ற-சட்டமன்ற உறுப்பினர்களும் வந்திருந்த இவ்விழாவின் தொடக்கத்தில் திரு. எஸ்.வி. சேகர் வரவேற்புரையாற்றினார். விழா முடிவில், 'நாடகப் பிரியா' குழுவின் தலைவர் திரு. எஸ்.வி. வெங்கட்ராமன் நன்றி கூறினார்.

இவ்விழாவில் - மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஊனமுற்ற வாலிபர் மூவருக்கு சைக்கிள் களும், குடிசைப் பகுதிவாழ் மக்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டியும் வழங்கினார்.

திரைப்பட இயக்குநர்கள் திரு. கே. பாலசந்தர், திரு. கே. விசு, சபாக்களின் கூட்டமைப்புத் தலைவர் திரு. ஆர். கிருஷ்ணசாமி, தமிழ்நாடு இயல் இசை இசை நாடக மன்றத் தலைவர் திரு. குன்னக்குடி வைத்தியநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

'நாடகப் பிரியா'வைச் சேர்ந்தோருக்குக் கேடயங்கள் பரிசளித்து - அவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய தலைமை உரை விவரம் வருமாறு:

'தமிழ் நாடக உலகில், தனது சிறந்த நகைச் சுவை நாடகங்களின் மூலம், தனக்கெனத் தனி முத்திரையைப் பதித்து, அனைவருக்கும் அறிமுக மான நல்ல கலைஞர், எஸ்.வி. சேகர் அவர்கள், கடந்த 18 ஆண்டுகளாக 'நாடகப் பிரியா' என்னும் நாடகக் குழுவை வெற்றிகரமாக நடத்திய தோடு, '3000-ஆவது முறையாகத் தன்னுடைய குழுவினரோடு நாடகங்களை நடத்தும், சாதனை யைப் பாராட்டும் வகையில் நடத்தப்படும் இந்த இனிய விழாவில் கலந்து கொள்வதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மேலும், அவரது 'பெரிய தம்பி' என்னும் நாடகத்தைக் கண்டு களிக்கும் வாய்ப்பினையும் அளித்துள்ளமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**புகழ் பெற்ற நாடகக் குழுக்கள்**

தொன்றுதொட்டு, அந்தக் காலத்திலிருந்தே நாடகம், தமிழர்களின் வாழ்வில் உண்டு பண்ணி யுள்ள ஊக்கம், அளவிட முடியாதது. திரைப்படக் கலை வளர்ச்சி அடைவதற்கு முன்னர், மேடை நாடகங்களை நடத்தியதில், புகழும், பெருமையும் கொண்ட பல நாடகக் குழுக்கள், தமிழ்நாட்டில் இயங்கி வந்திருக்கின்றன. தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், நவாப் ராஜமாணிக்கம், டி.கே.எஸ். சகோதரர்கள்,

மற்றும் நாடகக் காவலர் ஆர்.எஸ். மனோகர் போன்ற அறிஞர்கள், நாடகக் கலையின் வளர்ச்சிக்காக, அருந்தொண்டாற்றி இருக்கிறார்கள் என்பது, நம் அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். சமூக நாடகங்களும், புராண நாடகங்களும், மக்களுக்குத் தேவையான கருத்துக்களை வழங்கியதோடு மட்டும்மல்லாமல், இந்தியச் சுதந்திரத்திற்கும் எழுச்சி ஊட்டிய வரலாறு நம்மிடம் உண்டு. அந்த வகையில், இன்றைய கால கட்டத்தில், நகைச்சுவை நாடகங்களைப் படைப்பதையே தனது இலட்சியமாகக் கொண்டு, அந்த முயற்சியில் மகத்தான வெற்றி பெற்ற நாடகங்களை நடத்தி வருபவர் தான். எஸ்.வி. சேகர் அவர்கள். நகைச்சுவை நடிப்புக்குச் சில சிறப்புத் தகுதிகள் உண்டு. நடிகர் ஒருவர் தனது நடிப்பால் காண்போரை அழ வைப்பது எளிது. ஆனால், அதே நேரத்தில், தமது நடிப்பால் சிரிக்க வைப்பது என்பது, மிகமிகக் கடினம்.

இத்தகைய நகைச்சுவை பின்னணி கொண்ட துறையில் தற்போது நகைச்சுவை நாடகங்கள் என்றால், அது எஸ்.வி. சேகருடைய நாடகங்கள் தான் என்ற ஒரு சாதனையைப் படைத்திருக்கிறார் சகோதரர் எஸ்.வி. சேகர் அவர்கள்.

நாடகக் கலையினை வெற்றிகரமாக நடத்துவதில், சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. நாடகங்கள் ஒவ்வொரு முறையும் நடத்தப்படும் போது, புதிதாக ஒரு நாடகம் அரங்கேற்றுவதைப் போன்ற நிலயை உண்டு பண்ணுவதற்கு, அசாத்தியத் திறமை வேண்டும். நாடகத்தைப் பார்க்கின்ற ரசிகர்கள், நாடக நடிகர்களின் நடிப்பின் நுணுக்கங்களை, நேரடியாக ரசித்து, தங்கள் கருத்துக்களையும் பாராட்டுகளையும் வெளிப்படுத்துகிற வாய்ப்பு, நாடகத்திற்கு மட்டுமே உண்டு. எனவே, நடிகர்கள் சரிவர நாடகக் கர்ட்சிக்கு ஏற்றாற் போல், உணர்ச்சிகளைக் காட்டத் தவறினால், நாடகம் வெற்றி அடைய இயலாது; நடிகர்கள் பாராட்டுப் பெற முடியாது. அதிலும் குறிப்பாக நகைச்சுவை மேடை நாடகங்களில், நடிகர்கள் நகைச்சுவை ததும்ப வசனங்களை உச்சரிக்கும் முறையிலும், குரலின் ஏற்ற இறக்கத்திலும், உடலின் அசைவிலும் தான், நகைச்சுவை உணர்வினை வெளிப்படுத்த முடியும்.

"A sense of timing and ability to deliver the punch lines effectively and the ability to create ripples of laughter through appropriate bodily gestures, are the important assets of a comedy artiste" என்று கூறுவார்கள்.

**சிறந்த நடிகர்**

ஒரு நகைச்சுவை நடிகருக்கு உரித்தான அத்தனை அம்சங்களும் அமையப் பெற்ற சிறந்த நடிகர், நமது எஸ்.வி. சேகர் என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது.

ரசிகர்களைச் சிரிக்க வைப்பதையே தனது இலட்சியமாகக் கொண்டு திகழும் எஸ்.வி. சேகர் ஒரு நாடகக் குழுவைத் தொடர்ந்து நடத்தி வருவதோடு திரை உலகிலும் அறிமுகமாகி, இதுவரை 68 திரைப்படங்களிலும் நடித்திருக்கிறார்.

இவரது நாடகங்கள், தொலைக்காட்சியிலும் தொடர் நாடகங்களாக ஒளிபரப்பப்பட்டு, மக்கள் மனதைக் கவர்ந்திருக்கின்றன என்பதெல்லாம், நமக்குத் தெரிந்த செய்திதான். ஆனால், இவரது நாடகக்குழு, பல்வேறு சமுதாயப் பணிகளையும் ஆற்றியிருக்கிறது என்று அறியும்போது, மிகுந்த மகிழ்ச்சியை எனக்கு ஏற்படுத்துகிறது.

அரிமா சங்கம், சுழற் சங்கம் போன்ற சமூக சேவை நிறுவனங்களின் நிதிக்காக, இவர்களது குழு நாடகங்களை நடத்தியோடு, மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை, சீருடை வழங்குதல் போன்ற அரும்பணிகளையும் ஆற்றியிருக்கிறது. இந்த வகையில் கண் தானம், இரத்த தானம், ஆகியவற்றைப் பற்றி, 'நம் குடும்பங்கள்' என்ற தொலைக்காட்சித் தொடர்நிகழ்ச்சி ஒன்றையும், இவர்கள் படைத்திருக்கிறார்கள். இத்தனை பெருமைகளையும் பெற்ற எஸ்.வி. சேகருக்கும், அவரது நாடகக் குழுவைச் சேர்ந்த நடிக நடிகையர்களுக்கும், மற்றவர்களுக்கும், எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவர்களெல்லாம் விருப்பத்தோடு பங்கேற்றுள்ள இந்த நாடகத்துறை, இன்று எப்படி வளர்ந்து வருகிறது என்பதையும், நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைய விஞ்ஞான முன்னேற்றக் காலத்தில், புதிய புதிய விளம்பரச் சாதனங்கள், தொலைக்காட்சி, வீடியோ என்று தோன்றிவிட்ட பிறகு, பலர் வீட்டைவிட்டு வெளியே செல்வதே இல்லை. பரபரப்பான வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்டுப்போன மக்களுக்கு, ஒரு சில மணி நேரம் நாடக அரங்கில், அமர்ந்து நாடகங்களைக் கண்டுகளிக்கிற வாய்ப்பு, வெகுவாகக் குறைந்துவிட்டது.

**சிரஞ்சீவி நாடகங்கள்**

அத்தகைய பின்னணியிலும், தொழில் நுட்ப யுகத்தின் வளர்ச்சியால் பாதிக்கப்படாமல், கால வெள்ளத்தால் அழிக்கப்படாமல், இன்னமும் ஒருசில நாடகக் குழுக்கள் தான் இயங்கி வருகின்றன.

நாடகக் கலையினைத் தொடர்ந்து காத்து வருகின்றன. தொலைக்காட்சி, வீடியோ ஆகியவற்றினால், திரைப்படத் தொழிலே பாதிக்கப்பட்டிருக்கும் போது, நாடகத்தின் நிலை என்னவாகும் என்கிற கேள்விக்குறி எழுகிறது. இத்



**● நாம் அரசியல் துறையில் முன்னேறி மாற்றம் பெற்றிருக்கிறோமே தவிர, சமுதாயத் துறையில் இன்னமும் பிற்போக்கான நிலையில்தான் இருக்கிறோம்; இந்த நிலை மாறவேண்டும்.**

**—தந்தை பெரியார்**



தகைய காலகட்டத்தில் சிறந்த நாடகங்கள் என்றுமே சிரஞ்சீவி நாடகங்கள் தான், என்பதை மெய்ப்பிக்கும் வகையில், நாடகக் காவலர் திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்கள் புராண நாடகங்களையும், திரு. எஸ்.வி. சேகர் அவர்கள் நகைச்சுவை நாடகங்களையும், வெற்றிகரமாக நடத்தி, நாடகத்தின் தனித்தன்மையை நிலை நாட்டியுள்ளனர்.

அதற்காக நாம் அவர்களுக்கு, நமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். நாடகமென்பது தொன்றுதொட்டு, தலைமுறை தலைமுறையாக, நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற, ஒரு அரிய கலையாகும். இதனை நாம் அழிய விடக்கூடாது.

இன்றைய நாளில், சினிமா, தொலைக்காட்சி என்ற தொழிலுக்குச் செல்லவே அனைவரும் விரும்பும் காலகட்டத்தில், நாடகக் கலையில் முழுமையான ஈடுபாட்டைக் காட்டி, அக்கலை நசிந்துவிடாமல் காக்கின்ற முயற்சியில், ஈடுபட்டுள்ளவர்களை, பாராட்டுவதோடு மட்டுமன்றி, அவர்களுக்கு நாம் உறுதுணையாக இருந்து உதவ வேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**கலைவாணர் அரங்கில் சலுகைக் கட்டணம்**

எஸ்.வி. சேகர் இங்கே பேசும்போது 2 கோரிக்கைகளைச் சொன்னார். 'நாடகக் குழு ரெயிலில் பயணம் செய்யும்போது சலுகைக் கட்டணம் வழங்கப்படுவது போல, அரசாங்கப் பஸ்களில் பயணம் செய்யச் சலுகைக் கட்டணம் கொடுக்கவேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

இது மிகவும் நியாயமான கோரிக்கை, அதிகாரிகளுடன் கலந்துபேசி பரிசீலித்து விரைவில் நல்ல முடிவை அறிவிப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்த கோரிக்கை சென்னை கலைவாணர் அரங்கில் நாடகங்கள் நடத்த சலுகைக் கட்டணம் வழங்க வேண்டும் என்பது.

நாடகக் கலை அழிந்துவிடக் கூடாது என்பதில் மிகுந்த அக்கறை கொண்டவள் நான். அந்த வகையில் இதற்கு விரைவில் ஆவன செய்யப்படும். இன்னும் சொல்லப் போனால் உடனடியாகச் செய்யப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

***12 ஆண்டுகளுக்குப் பிறகு...***

பொதுவாக நான் அரசியலுக்கு வந்தபின், கடந்த 12 ஆண்டுகளாக, அதிலும் குறிப்பாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, நான் ஆற்றிக் கொண்டிருக்கிற பணியில் உள்ள பளுவின் காரணமாக, எந்தவொரு திரைப்படத்தையும் முழுமையாகக் கண்டு களித்ததில்லை. பார்ப்பதற்கு நேரமும் இல்லை. ஆனால், சில நாட்களுக்கு முன்பு, திரு. விசு அவர்கள் இயக்கிய 'சிதம்பர ரகசியம்' என்ற ஒரு நல்ல திரைப்படத்தை, தொலைக்காட்சியில் பார்க்கிற வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. அதில் நகைச்சுவை நயத்தோடு திரு. எஸ்.வி. சேகர் அவர்கள் மிகச் சிறப்பாக நடித்திருக்கிறார். அவருடைய அப்பாவித்தனமான, குழந்தைத் தனமான நடிப்பையும், நகைச்சுவையையும், நான் மிகவும் ரசித்தேன். இன்று தான் கடந்த 12 ஆண்டுகளுக்குப் பிறகு 'பெரிய தம்பி' என்

● மக்களுக்கு நல்ல புத்தியும், எதிலும் சரியான தீர்வு காணக்கூடிய சிறந்த ஆலோசனையும் கொடுப்பதே படித்த பட்டதாரிகளின் அன்றாடக் கடமையாக இருக்கவேண்டும்.

—டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்

னும் அவரது நாடகத்தைப் பார்க்கும் வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

இந்த விழாவில் தமிழகத்தின் தலை சிறந்த திரைப்பட இயக்குநர், திரு. கே. பாலசந்தர், அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்து இருக் கிறார்கள்.

திரைப்படத் துறையின் ஜாம்பவானாகத் திகழும் அவர், சமூக நாடகங்களில் மறுமலர்ச் சிக்கு, ஒரு கால கட்டத்தில் வித்திட்டவர் என் றால், அது மிகையாகாது. அவரது அற்புதமான நாடகங்கள், வெற்றிகரமான திரைப்படங்களாக, வெள்ளித் திரையில் மிளிர்ந்ததற்குக் காரணம், அவர் இந்த இரண்டு துறைகளிலும், தனக்கென்று ஒரு தனி இடத்தைப்பெற்றவர் என்பதால்தான். அவரது மிகச் சிறந்த திரைப்படங்களில் ஒன்றான 'மேஜர் சந்திரகாந்த்'-தில் கதாநாயகியாக நடிக்கும் வாய்ப்பை நான் பெற்றேன். அதன்பின் அவரது அடுத்த திரைப்படங்களான 'பாமா விஜயம்' மற்றும் 'வெள்ளி விழா' ஆகிய படங்களிலும், என்னை நடிக்க அவர் அன்புடன் அழைத்தார்.

**பாராட்டுவது என் கடமை**

ஆனால், அப்பொழுது நான் நிறைய திரைப் படங்களில் ஒரே நேரத்தில் நடித்துக் கொண்டி ருந்த காரணத்தால், அவரது அழைப்பினை ஏற்று, அந்தப் படங்களில் நடிக்க இயலவில்லை. திரைப் படத் துறையில் தனக்கென ஓர் உயர்ந்த இடத்தை, தன் சிந்தனையாலும், உழைப்பாலும், திறமை யாலும், நிரந்தரமாகப் பிடித்திருக்கும் திரு. கே. பாலசந்தர், அவர்களை நான் இந்த நேரத்தில் பாராட்டுவதை, எனது கடமையாகக் கருதுகிறேன். திரையுலகிலும், நாடக உலகிலும் சேர்ந்தாற்போல் சாதனை படைத்திருக்கும் திரு. எஸ்.வி. சேகர் அவர்களை வாழ்த்திப் பேசிய, பிரபல திரைப்பட இயக்குநர் திரு. விசு அவர்கள், நாடக உலகத்திலே மிகுந்த அனுபவம் பெற்றவர்.

திரையுலகில் தனக்கென ஒரு பாணியைக் கையாண்டு தனி முத்திரையைப் பதித்து வருபவர்.

'In Tamil Nadu, the very name Visu, has become a byword today, for good, clean, wholesome entertainment, which can be enjoyed by the entire family'.

அவர் இயக்கி வெளிவந்துள்ள 'திருமதி ஒரு வெகுமதி' என்ற திரைப்படத்தை நான் மிகவும் ரசித்துப் பார்த்தேன். எனக்கு வாய்ப்புக் கிடைக் கும் பொழுது, இவரது திறமையைப் பயன்படுத்த வேண்டுமென்று நினைத்தேன். அந்த நல்ல சந் தர்ப்பம் மிக விரைவிலேயே வந்தது. தமிழக அரசு தயாரித்துவரும், மதுவிலக்குப் பிரச்சாரப் பட மான, 'நீங்க நல்ல இருக்கணும்' என்ற திரைப் படத்தை இயக்கும் வாய்ப்பை அவருக்கு அளித் தேன். அவரது திறமையையும், கைவண்ணத்தை யும், நீங்கள் அந்தத் திரைப்படத்தில் நிச்சயமாகக் காணலாம்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர், திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள், வயலின் என்றாலே குன்னக்குடி என்று கூறும் அளவிற்கு, இசை உலகில் உயர்ந்து நின்ற போதிலும், இன்றும் தன் கலைப் பணியினைப் பக்தியுடனும், இதய சுத்தியுடனும், தொடர்ந்து செய்து வருகிறார். அவர் அறிமுகம் தேவையில்லா தவர்; அனைவருக்கும் தெரிந்த இசை வல்லுநர்.

சென்னை சபாக்கள் கூட்டமைப்பின் தலைவர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள், தன்னுடைய கலை ஆர்வத்தாலும், கலைஞர்களுக்கு வழங்குகிற ஆதர வாலும் நாடகக் கலையையும், நாடகக் கலைஞர் களையும் பாதுகாத்து வருகிறார். அந்த வகையில் அவர் தமது பாராட்டுக்கு மட்டுமல்ல, நமது அன் பிற்கும் பாத்திரமானவர் ஆகிறார்.

பெருமைக்குரியவர்களால் இன்று பெரிதும் பாராட்டப்பெற்ற திரு. எஸ்.வி. சேகர் அவர்கள், இந்தப் பாராட்டுக்களுக்கு முற்றிலும் தகுதி உடையவர்.

**மனதாரப் பாராட்டுகிறேன்**

பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி, இன்று நம் அனைவரின் பாராட்டுக்களையும் பெற்று ஒரு சாதனையாளராகத் திகழும் எஸ்.வி. சேகர் அவர்களுடைய தந்தையும், 'நாடகப்பிரியா' குழுவின் தலைவருமான திரு. எஸ்.வி. வெங்கட் ராமன் அவர்கள், தனது மகனின் இந்த மாபெரும் வெற்றிக்கு மூல காரணமானவர் என்பது, ஒரு சிலருக்கே தெரியும். தன் மகனைக் கலைச் சேவைக் காக அர்ப்பணித்து, அதில் முழு வெற்றி அடை வதற்குத் தேவையான, ஊக்கத்தையும் உதவி களையும் வழங்கி, உறுதுணையாக இருந்து, தன் மகன் இந்த உயர்ந்த நிலையை அடைவதற்கு மூல காரணமாகத் திகழ்ந்து, இன்று நம்மிடையே வீற் றிருக்கும் திரு. எஸ்.வி. வெங்கட்ராமன் அவர் களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

3000 தடவை தங்களது நாடகங்களை நடத்தி மாபெரும் சாதனை புரிந்துள்ள எஸ்.வி. சேகர் அவர்களுக்கும், அவரது தந்தையார் அவர் களுக்கும் 'நாடகப் பிரியா' குழுவில் அங்கம் வகிக்கும் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த வாழ்த் துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ்.வி. சேகரை நான் கேட்டுக் கொள் கிறேன். கடைசி வரை நாடகக் கலையை மறந்து விடாதீர்கள். இதை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.

உலக அளவில் தரமான நாடகங்களைத் தயாரித்து, நடத்திப் பெயரும் புகழும் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்''.

**- இவ்வாறு மாண்புமிகு முதல்வர்புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசினார்.** ●

தஞ்சாவூர்க்கால்வாய்கள் நவீனப்படுத்தப்படும்!

காவல் துறையினர் உடுப்புப் பராமரிப்பு - உணவுக் கட்டண வீகிதங்கள் உயர்த்தப்படுகின்றன!

கடன் தொகையைக் கட்டிவிடும் விவசாயிகளுக்கு போனஸ்!

சவ்வரிசி நிறுவன இடர்ப்பாடு களையப்படவிருக்கிறது!

# சட்டப்பேரவையில் மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் வழங்கிய துணை மதிப்பீடு முழு விவரம்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1992-93-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை இம் மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூபாய்161.29 கோடி நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில், ரூபாய் 131.83 கோடி வருவாய்க் கணக்கிலும் எஞ்சிய தொகையான ரூபாய் 29.46 கோடி மூலதன, கடன் கணக்குகளிலும் அடங்கும்.

வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த பின்னர், உடனடி செலவு செய்ய வேண்டிய சில இனங்களுக்கு எதிர்பாராத செலவு நிதியிலிருந்து தொகை அனுமதிக்கப்பட வேண்டியிருந்தது. இவ்வாறு அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று எதிர்பாராச் செலவு நிதியில் ஈடு செய்வதற்கே முக்கியமாக இத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டங்கள், திட்டப் பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

காவல்துறையின் சில வகைப் பணியாளர்களுக்கு உடுப்புப் பராமரிப்புப் படிகள் (Kit maintenance allowance), உணவுக் கட்டணங்கள் ஆகியவற்றிற்கான கட்டண வீதங்களை அரசு உயர்த்தியுள்ளது. இவற்றிற்கான செலவு ரூபாய் 1.27 கோடி, முதற்கண் எதிர்பாராத செலவு நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது. துணை மதிப்பீட்டில் இத்தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகையை 30.9.1992-க்கு முன்னர் செலுத்திவிடும் விவசாயிகளுக்கு, காலங்கடந்த வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவற்றுக்குச் சமமான தொகையை 'போனஸ்' ஆக அரசு அனுமதித்துள்ளது. இத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூபாய் 69 கோடியாகும். முதற்கண் செலவு செய்ய எதிர்பாராத செலவு நிதியிலிருந்து ரூபாய் 40 கோடி முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீட்டில் மொத்தத் தொகையும் சேர்க்கப்பட்டுள்ளது.

தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் உதவியுடன் ரூபாய் 2.19 கோடி செலவில் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு மேம்பாட்டுத் திட்டத்தைச் செயற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. எதிர்பாராத செலவு நிதியிலிருந்து முன்பணம் வழங்குவதன் வாயிலாக, இச்செலவு முதற்கண் செய்யப்பட்டுள்ளது. துணை மதிப்பீட்டில், இவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

திட்டங்கள், மற்றும் திட்டப் பணிகள் அனைத்திலும் ஏழை எளியோர் மற்றும் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் ஆகியோரின் நலனுக்கே இந்த அரசு எப்போதும் தலையாய முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. ஏழை எளியோருக்கு வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். இதற்கிணங்க, கடந்த பொங்கல் திருநாளன்று வேட்டி, சேலை வழங்கப்பட்டது. மேலும், வருகின்ற பொங்கல் திருநாளன்று இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த, தற்போது கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், வருகின்ற பொங்கல் திருநாளையொட்டி ஊரக நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கும்,

நகர்ப் பகுதிகளில் வாழும் ஏழை எளியோருக்கும் இலவசமாக 60 இலட்சம் புடவைகளும், 60 இலட்சம் வேட்டிகளும் வழங்கப்படும். இதற்கென்று, துணை மதிப்பீட்டில், ரூபாய் 45 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த அரசு, உலக வங்கி உதவியுடன் மொத்தம் ரூபாய் 41.85 கோடி செலவில் அணைப் பகுதி பாதுகாப்புச் சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராத செலவு நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி முன்பணம் வழங்கப்பட்டு, துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்திய விடுதலைக்காகப் போராடியோரின் தியாகங்களைப் பாராட்டும் வகையில், விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அளிக்கப்படுகிற உதவித் தொகையை அரசு கணிசமாக உயர்த்தியுள்ளது. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 400 மாநில அரசு உதவித் தொகையாக வழங்கி வந்தது. இந்த உதவித் தொகை தற்போது மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மத்திய அரசிடம் உதவித் தொகை பெறும் பலதரப்பட்ட விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் மாதம் மொத்தமாக ரூபாய் 1000 உதவித் தொகையாகக் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. உயிர்நீத்த விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்பத்தினர் தற்போது மாதம் ஒன்றுக்கு ரூபாய் 400 உதவித் தொகை பெற்று வருகின்றனர். இத்தொகை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

''வெள்ளையனே வெளியேறு'' இயக்கத்தின் பொன்விழாக் கொண்டாட்டங்களின் போது, சுதந்திரப் போராட்ட வீரர்கள் பொன்னாடைகளும் நினைவுப் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராத செலவு நிதியிலிருந்து ரூபாய் 1.43 கோடி அளவிற்கு முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகைகள், துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.

சேலத்திலுள்ள சவ்வரிசி நிறுவனத்தின் (Sago Serve) கடுமையான நிதி இடர்ப்பாட்டைக் களைவதற்காக, 1991-92-ஆம் ஆண்டிற்கு இழப்பீட்டு உதவித்தொகை என்ற வகையில், ரூபாய் 50 இலட்சம் அனுமதித்துள்ளது. இது துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

1993 ஜனவரித் திங்களில், 10-ஆவது ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பை பன்னாட்டு கால்பந்து விளையாட்டுப் போட்டியை குறித்த நேரத்தில் நடத்தும் பொருட்டு சென்னை நேரு விளையாட்டு அரங்கத்தில் புதிய பன்னோக்கு விளையாட்டு அரங்கமொன்றைக் கட்டுவதற்கு அரசு ரூபாய் 7 கோடி அனுமதித்துள்ளது. இதற்கு எதிர்பாராத செலவு நிதியிலிருந்து தொகை வழங்கப்பட்டுச் செலவிடப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.



நடப்பாண்டில், தஞ்சாவூர் கால்வாய்களை நவீனப்படுத்தல் என்ற திட்டத்தின் கீழ், கால்வாய்களுக்குப் புதிய கரைகள் அமைத்தல், வடிகால் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றுக்காக ரூபாய் 4.55 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தொடக்கச் செலவுகளுக்காக, எதிர்பாராத செலவு நிதியிலிருந்து ரூபாய் 1.10 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் நிதியுதவியுடன் ரூபாய் 2.81 கோடி செலவில் சிறைகளை நவீனப்படுத்துவதற்கான பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக எதிர்பாராத செலவு நிதியிலிருந்து ரூபாய் 80 இலட்சம் முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. இது துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் திரைப்பட நகரை உருவாக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கு மொத்தச் செலவு ரூபாய் 14.93 கோடியாகும். இதற்கான முதற்கட்டப் பணியை மேற்கொள்ள ரூபாய் 3.93 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராத செலவு நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இது துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து இங்கு நான் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும், ஏனைய இனங்களைக் குறித்தும் உரிய முழு விவரங்களும் பேரவை முன்னர் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் விரிவாக இடம் பெற்றுள்ளன. இவற்றுடன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93-ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன். வணக்கம்.

**- தமிழ்நாடு சட்டப் பேரவையில் 21.9.92 அன்று, 1992-93-ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீடுகளை வைத்து ஆற்றிய உரை.** •

# இலவச சேலை

# வேட்டி வழங்கும் திட்டம்:

## சட்டமன்றத்தில் முதல்வர் அறிவிப்பு

23.9.1992 அன்று இந்த மாமன்றத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. பழனிச்சாமி அவர்களும் துணை மானியக் கோரிக்கையின் மீது உரையாற்றும் பொழுது, இலவச வேட்டி சேலைகள் வழங்கும் திட்டத்தைப் பற்றி சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவை குறித்துச் சரியான விவரங்களை இம்மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எங்கள் அரசு சென்ற ஆண்டு தமிழகத்திலுள்ள ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும், நகர்ப்புறங்களில் உள்ள வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழை, எளியோருக்கும் இலவசமாக வேட்டி சேலைகள் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் 60 இலட்சம் வேட்டிகளும் 60 இலட்சம் சேலைகளும் வழங்கத் திட்டமிடப்பட்டது.

வழங்கப்பட வேண்டிய 60 இலட்சம் சேலைகளில் இது வரை அதாவது 23.9.1992 வரை 59,99,870 சேலைகள் வழங்கப்பட்டு விட்டன. வேட்டிகளைப் பொருத்தமட்டில் வழங்கப்பட வேண்டிய 60 இலட்சம் வேட்டிகளில் இதுவரை 57,69,234 வேட்டிகள் வழங்கப்பட்டு விட்டன.

இனி 130 சேலைகளும் 2,30,766 வேட்டிகளும் மட்டுமே வழங்க வேண்டியுள்ளது. மீதமுள்ள இந்த வேட்டி, சேலைகள் அனைத்தும் Co-optex மூலமாகப் பெறப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அக்டோபர் 15-ஆம் தேதிக்குள் முழுமையாகக் கொடுத்து முடிக்கப்படும்.

ஒரு சில மாவட்டங்களிலுள்ள ஒரு சில தாலுக்காக்களில் வேட்டிகள் இன்னும் பெறப்பட வேண்டியிருப்பதால், ஏற்கெனவே கிடைக்கப் பெற்ற சேலைகளைப் பயனாளிகளுக்கு, வேட்டிகளையும், சேலைகளையும் சேர்த்து வழங்கலாம் என்ற அடிப்படையில் வழங்கப்படாமல் உள்ளன. கிடைக்கப்பெற்ற சேலைகளை உடனடியாகப் பயனாளிகளுக்கு வழங்கும்படி ஆணையிட்டுள்ளேன். இன்னும் வழங்கப்பட வேண்டிய 2,30,766 வேட்டிகளும் 130 சேலைகளும் விரைவில் அக்டோபர் 15-ஆம் தேதிக்குள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு கோடியே 20 இலட்சம் பேருக்கு வேட்டிகளும், சேலைகளும் வழங்குவது ஒரு மிகப் பெரிய திட்டம் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். இதனைக் குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்படுத்துவதில் உள்ள சிரமங்களையும் நீங்கள் அறிவீர்கள்.

இத்திட்டத்தில் வழங்க வேண்டிய ஒரு கோடியே 20 இலட்சம் வேட்டி சேலைகளில் இதுவரை ஒரு கோடியே 17 இலட்சத்து 69 ஆயிரத்து 104 வேட்டி, சேலைகள் கொடுத்து முடித்துள்ளோம் என்பதே ஒரு சாதனை ஆகும். இந்நிலையில் இத்திட்டம் சரிவர செயல்படுத்தப்படவில்லை என்று கூறிய கருத்துக்கள் தவறானதாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடப்பு ஆண்டிற்கு அதாவது 1992-93-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்குத் தேவையான அனைத்து வேட்டிகளும், சேலைகளும் Co-optex நிறுவனம் மூலமாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் தமிழகத்திலுள்ள ஏழை நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்புக் கிடைக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

- 24.9.92 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பு.



• வாலிபர்கள் வைத்தியர்களாக வேண்டும்; உடல், உள்ளம் இரண்டிலும் உள்ள நோய்தீர்க்கும் மருந்தளிக்கவேண்டும்.

—அறிஞர் அண்ணா

# பூச்சிக்கொல்லி எதிர்ப்புத்திறனை அறிய புதிய கருவி

பயிர்ப்பாதுகாப்பில், பூச்சிக் கொல்லிகளை முழுவதுமாக ஒதுக்கி விட முடியாது. இவைகளைச் சரி யான அளவில் நாம் பயன்படுத் தாமல் இருக்கும்பொழுது, பூச்சிகள் அத்தகைய பூச்சிக்கொல்லிகளை எதிர்க்கும திறனைப்பெற்று விடு கின்றன. இத்திறன் பன்மடங்கு பெருகி பூச்சிக்கொல்லிகளைத் திறனற்றதாக ஆக்கிவிடுகின்றன. பயிர்ப்பாதுகாப்புக்குப் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்து வதற்கு முன்பாக வயலில் தென் படும் பூச்சிகள் எதிர்ப்புத்திறன் பெற்றுள்ளனவா? என்பதை அறிந்து கொள்வதன் மூலம், பயன்தராத பூச்சிக்கொல்லிகளைத் தவிர்க்கவும் முடியும்.

பூச்சிகளுக்குப் பூச்சி எதிர்ப்புத் திறன் உள்ளதா என்பதை அறிய, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பூச்சியியல் துறையின ரால் ஒரு எளிதாக எங்கும் எடுத்துச் செல்ல வசதியான 'பாட்டர்ஸ்' என்னும் கருவி கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இக்கருவியை மின்சாரம் கொண்டும் அல்லது மனித சக்தி மூலமாகவும் இயக்கலாம்.

இக்கருவியில் சோதனை செய் யப்படவேண்டிய பூச்சிகள் அல்லது அவற்றின் புழுப்பருவங்கள் அல்லது குஞ்சுகள் இவற்றை வைத்து எதிர்ப் புத்திறனை அறியலாம். வயலி லிருந்து கொணர்ந்த புழுக்களையும், நாம் பயன்படுத்தும் பூச்சிக்கொல்லி களையும் இச்சோதனைக்கு உட்படுத்த வேண்டும். நமக்கு எந்த அளவுக்குப் பூச்சிகள் கொல்லப் படவேண் டுமோ அதற்கு ஈடாகப் பூச்சிக் கொல்லியின் அளவு பயன்படுத்தப் படவேண்டும். பூச்சிகளின் இறப்பு விகிதத்தையும் கணக்கிட வேண்டும். பூச்சிகளின் இறப்பு விகிதம் குறை வாக இருந்தால் அவை எதிர்ப்புத் திறன் பெற்றுள்ளது என்பதை அறியலாம். மேலும் நம் வயலில் காணும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த எந்த அளவுக்குப் பூச்சிமருந்து உப யோகப்படுத்தவேண்டும் என்பதை யும் அறிந்து கொள்ளலாம் என்று தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக்கழகம் அறிவிக்கின்றது.

—தமிழ்நாடு
வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## லாரி உரிமையாளர்கள் - ஓட்டுநர்கள் - ஏஜெண்ட் - ஆகியோரின் முக்கிய கவனத்திற்கு

சரக்கு ஏற்றிச் செல்லும் வாகனங் களில் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிக எடையுள்ள சுமை ஏற்றிச் செல்வது மோட்டார் வாகனச் சட்டம் 1988-இன் பிரிவு 113-இன் படி குற்றமாகும். மேலும் மோட்டார் வாகனச் சட்டம் 1988-இன் பிரிவு 114-இன் படி இவ்வாகனங்களைச் சோதனை செய் வதற்கு அதிகாரமுள்ள அலுவலர் களால் சோதனையின்போது அதிக எடை ஏற்றப்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டால் அனுமதிக்கப்பட்ட தைவிட பாரம் அதிகமுள்ள சரக் கினை ஓட்டுநரின் சொந்தப் பொறுப் பில் இறக்கி வைக்கச் சொல்லவும் அதுவரைக்கும் சம்பந்தப்பட்ட வாகனத்தை அவ்விடத்திலிருந்து மேற்கொண்டு செல்ல அனுமதிக் காமல் இருக்கவும் அதிகாரமளிக்கப் பட்டுள்ளது.

வாகனங்களில் அனுமதிக்கப் பட்ட அளவைவிட அதிக பாரம் ஏற்றிச் செல்வது வாகனத்திற்கும், சாலையைப் பயன்படுத்துவோருக் கும் மட்டும் ஆபத்து மட்டும் இன்றி இத்தகைய வாகனங்களினால் சுற்றுப் புறச் சூழல் கேடும் உண்டாகிறது என்றும் இது குறித்துக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் இதற்கு முதற் படியாகச் சரக்கு வாகனங்களை இயக்குபவர்களை அழைத்து இது குறித்து விளக்கி மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் ஆகிய வற்றை மீறுவோர் மீது எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகள் குறித்தும் அவர்களுக்கு விளக்குமாறு மத்திய தரைப் போக்குவரத்து அமைச்சகத் தால் (போக்குவரத்துப் பிரிவு) கோரப்பட்டுள்ளது.

இதன்படி 21.8.92 அன்று தமிழ்நாடு லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர்களுக்குப் போக்குவரத்து ஆணையர், சென்னை-5 அவர் களால் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் இது குறித்து நடத் தப்பட்ட கூட்டத்தில் தகுந்த விளக்கம் அளிக்கப்பட்டது. லாரி உரிமை யாளர் சங்கத்தின் பிரதிநிதிகளும், சரக்குவாகனங்களில் அனுமதிக்கப் பட்ட எடைக்குமேல் பாரம் ஏற்றுவ தில்லை என உறுதி அளித்தனர்.

எனவே சரக்கு ஏற்றிச் செல்லும் வாகனங்களில் (Goods Carriages) அனுமதிக்கப்பட்ட எடைக்கு மேல் சரக்கு ஏற்றிச் செல்லக் கூடாதென இதன் மூலம் வாகன உரிமையாளர் களும், புக்கிங் ஏஜெண்டுகளும், ஓட்டுநர்களும் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். தவறினால் தணிக்கை அதிகாரி ஓட்டுநரை அவருடைய பொறுப்பில் அதிகமாக ஏற்றப்பட்ட சரக்கை இறக்கி வைக்கும்படி எழுத்து மூலமாக உத்தரவு இடுவார். மேலும் மோட்டார் வாகனச் சட்டம் 1988-இன் பிரிவு 194-இன் படி முதன்முறையாகக் கண்டுபிடிக்கப் பட்ட குற்றத்திற்கு ரூ.2,000 வரை அபராதமும், இரண்டாவது மற்றும் அதற்கடுத்த குற்றங்களுக்கு ரூ.5,000 வரை அபராதமும் வசூலிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படு கிறது. மேலும் மோட்டார் வாகனச் சட்டம் 1988- இன் பிரிவு 114-இன் படி, அதிக எடை ஏற்றிய மைக்காக வாகனத்தைச் சோதனை யிட உரிய அதிகாரமுள்ள அலு வலர் வாகனத்தை நிறுத்தச் சொல்லும் போது நிற்காமல் ஓட்டுநர் ஓட்டிச் சென்றாலோ, அல்லது சம்பந்தப் பட்ட அலுவலர் வாகனத்தின் எடை யைச் சோதிக்குமுன் ஏற்றப்பட்ட சரக்கையோ அல்லது சரக்கின் பகுதியை அகற்றினாலோ அல்லது அகற்ற முற்பட்டாலோ மோட்டார் வாகனச் சட்டம் 1988- இன் பிரிவு 194 (2)-இன் படி ரூ.3,000 வரை அபராதமாக வசூலிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இது 15.9.92 முதல் அமலுக்கு வரும்.



# கடமை தவறாத காவலர் குடும்பத்தினருக்கு முதல்வர் நிதியுதவி

கடந்த 6.9.92 அன்று சென்னையில் நடந்த ஒரு சம்பவத்தில் கள்ளச்சாராயம் கடத்தியதாகச் சந்தேகப்பட்ட ஒரு லாரியை மடக்கிச் சோதனையிடச் சென்ற மயிலாப்பூர் காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர் திரு. என்.ஆர். கோபால் மரணமடைந்தார். உடனடியாக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அவரது கடமை உணர்வையும், வீரச் செயலையும் பாராட்டும் வண்ணம் அவரது குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாயை உதவித் தொகையாக வழங்கவேண்டுமென்று ஆணையிட்டார்கள்.

மதுரை, சமயநல்லூர் காவல் நிலையத்தைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் திரு. பி. கிருஷ்ணசாமி அவர்கள் இலங்கைத் தீவிரவாதி ஒருவரால் சுடப்பட்டு மரணமடைந்தார். உடனடியாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அவரது கடமை உணர்வினையும், வீரச் செயலையும் பாராட்டும் வகையில் அவரது குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் உதவித் தொகையாக வழங்க வேண்டுமென்று ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், மறைந்த உதவி ஆய்வாளர் திரு. பி. கிருஷ்ணசாமியின் மனைவி திருமதி பி.கே. மீனா மற்றும் குடும்பத்தினரையும், மறைந்த காவலர் திரு. என்.ஆர். கோபாலின் மனைவி திருமதி சூரிய குமாரி மற்றும் அவரது குடும்பத்தினரையும், 23.9.92 அன்று தலைமைச் செயலகத்திற்கு அழைத்து வரச் செய்து, அவர்களுக்கு ஆறுதல் கூறி, இருவரது குடும்பத்தினருக்கும் உதவித் தொகையாகத் தலா ரூபாய் ஒரு இலட்சம் வழங்கினார்கள்.



பெரியார் மாவட்டம்:

# சிறுசேமிப்புத் திட்டப் பணிகள்

பெரியார் மாவட்டத்தில் சிறு சேமிப்புப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சிறுசேமிப்புத் திட்டத்தில் இம்மாவட்டம் 1987-88-ஆம் நிதியாண்டில் அரசின் இலக்கான ரூ.10 கோடிக்கு, மொத்த வசூலான ரூ.12,85 கோடியில் நிகர வசூலாக ரூ.3.56 கோடி செய்து, 35.6 சதவிகித சாதனை எய்தியது. 1988-89-ஆம் நிதியாண்டில், அரசின் இலக்கான ரூ.12 கோடிக்கு, மொத்த வசூலான ரூ.16,88 கோடியில் நிகர வசூலாக ரூ.6,49 கோடி செய்து, 54.1 சதவிகித சாதனை எய்தியது. 1989-90-ஆம் நிதியாண்டில் அரசின் இலக்கான ரூ.16 கோடிக்கு, மொத்த வசூலான ரூ.24.49 கோடியில், நிகர வசூலாக ரூ.12.12 கோடி செய்து, 75.1 சதவிகித சாதனை எய்தியது. 1990-91-ஆம் நிதியாண்டில் அரசின் இலக்கான ரூ.20 கோடியில், மொத்த வசூலான ரூ.32.00 கோடிக்கு, நிகர வசூலாக ரூ.17.41 கோடி செய்து, 87 சதவிகித சாதனை எய்துள்ளது. 1991-92-ஆம் நிதியாண்டில் அரசின் இலக்கான ரூ.24 கோடிக்கு, மொத்த வசூலான ரூ.55.50 கோடியில், நிகர வசூலாக ரூ.24.33 கோடி செய்து 101 சதவிகித் சாதனை எய்தியுள்ளது. 1992-93-ஆம் நிதியாண்டில் 1992 ஜூலை திங்கள் முடிய அரசின் இலக்கான ரூ.23 கோடிக்கு மொத்த வசூலாக ரூ.15.87 கோடியில், நிகர வசூலாக ரூ.3.55 கோடி செய்து, 15.43 சதவிகித சாதனை எய்தியுள்ளது.

தமிழக அரசின் ஊக்குவிப்புத் திட்டங்கள் காரணமாகவும், வட்டி மற்றும் முதிர்வுத் தொகைகள் கூட்டப்பட்டதன் காரணமாகவும், இம் மாவட்ட மக்கள் சிறுசேமிப்புத் திட்டத்தினை ஏற்றுள்ளனர். அதன் காரணமாக மொத்த வசூலும் நிகர வசூலும் அதிகரித்து வருகிறது.

இம்மாவட்டத்தில் 802 பேர் நிலை முகவர்களாகவும், 691 பெண்கள் மகளிர் முகவர்களாகவும், 10 பொது வருங்கால வைப்பு நிதி முகவர்களாகவும் இருந்து வருகின்றனர். இவர்கள் இத்திட்டத்தில் நல்ல முறையில் பணியாற்றி வருவதால், சிறுசேமிப்பு வசூலில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் அதிக அளவில் முகவர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர, தொடர்வைப்புக் கணக்குகள் புதிதாக ஆரம்பிக்கத் தீவிர இயக்கம் துவக்கப்பட்டு, நடப்பாண்டில் 60,000 கணக்குகள் துவக்கப்படவுள்ளன. ஜூலை 1992 திங்கள் முடிய 16,029 கணக்குகள் துவக்கப்பட்டுள்ளன. மேலும் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு ஊராட்சியைத் தேர்வு செய்து அவ்வூராட்சியின் அனைத்துக் குடும்பங்களையும் இத்திட்டத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணியும் முடிவுறும் நிலையிலுள்ளது.

1981-82-ஆம் ஆண்டுக்கான சிறுசேமிப்பு மாவட்ட ஊக்குவிப்புத் தொகையிலிருந்து தமிழக விழியிழந்தோர் சங்கத்திற்குப் பெருந்துறையில் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.75,000 வழங்கப்பட்டு, கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

1989-90-ஆம் ஆண்டுக்கான மாவட்ட ஊக்குவிப்புத் தொகையிலிருந்து ஈரோடு நகராட்சிப் பகுதியில் சாலைகள் அபிவிருத்திப் பணிக்கு ரூ.4.55 இலட்சமும், பெருந்துறை அரசினர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை பெண்கள் விடுதிக்கு சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு ரூபாய் ஒரு இலட்சமும், சத்தியமங்கலம் நகராட்சியில் பவானி ஆற்றங்கரையில் படித்துறை கட்டும் பணிக்கு ரூ.1.50 இலட்சமும், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் குடிநீர் அபிவிருத்திப் பணிகள் செய்வதற்கு ரூ.5.30 இலட்சமும், சிறுசேமிப்பு விளம்பரப் பலகைகள் அமைக்கும் பணிக்கு ரூ.2 இலட்சமும், மற்றும் சிறுசேமிப்பு அதிக சாதனைக்காக உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கியமைக்காக ரூ.2 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில் சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் 11,933 முதலீட்டாளர்களுக்கு ரூ.12,00,000 ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

1992-93-ஆம் ஆண்டில் 2,750 முதலீட்டாளர்களுக்கு ரூ.3,52,000 ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறாகப் பெரியார் மாவட்டத்தில் சிறுசேமிப்புத் திட்டப் பணிகள் சிறப்போடு நடைபெற்று வருகின்றன.

— எஸ். நாகராசன்
மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம்

அஸ்ஸாம் மாநில முதல்வர் திரு. ஹிதேஸ்வர் சைக்கியாவும் அவரது துணைவியார் திருமதி பிரியா சைக்கியாவும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தனர் (16.9.'92).



வளரும் வேளாண்மை:



★ விதை முலாம் பூசுதல் பூச்சித் தாக்குதலைக் குறைக்கும். அதாவது சோளத்தில் குளோரிபைரிபாஸ் அல்லது பாசலோன் அல்லது மோனோ குரோட்டோஸ் இவற்றில் ஏதாவதொன்றை நான்கு மி.லிட்டர் மருந்தை இருபது மி.லிட்டர் நீருடன் கலந்து அத்துடன் அரை கிராம் கோந்து (பிசின்) மருந்து ஒட்டுவதற்காகச் சேர்த்து நான்கு கிலோ விதைகளுக்குச் சீராக முலாம் பூசவேண்டும். விதைகளை நிழலில் உலர்த்தி விதைக்கப் பயன்படுத்தவேண்டும். விதை முலாம் பூசுவதால் குருத்து ஈக்களின் தாக்குதல் வெகுவாகக் குறையும்.

சோளக் குருத்து ஈக்களைக் கவர்ந்தழிக்கக் கருவாட்டுப் பொறிகளை ஏக்கருக்கு நான்கு அல்லது ஐந்து என்ற அளவில் விதை முளைத்தவுடன் இருபத்தியோரு நாட்கள் வைக்கவேண்டும்.

சோளத்தில் ஊடுபயிராக அவரைத் தட்டைப் பயிரையும், நிலக்கடலையில் ஊடுபயிராகத் தட்டைப் பயிரையும் பயிர் செய்வதால் பயிரைத்தாக்கும் பூச்சிகளில் அந்துகள் ஊடுபயிரில் கவரப்பட்டு அதிக முட்டைகளை இடும். எனவே பயிர்களில் சேதம் குறையும்.

விளக்குப் பொறிகளை (லாந்தர்) முன்னிரவு நேரங்களில் அமைப்பதன் மூலம் அந்துப் பூச்சிகளின் பெருக்கத்தைக் கண்காணிக்கலாம்.

நிலக்கடலைப் பயிரில் கூட்டம் கூட்டமாக உள்ள புரோடீனியா இளம் புழுக்களையும், வளர்ந்த புழுக்களையும் பொறுக்கி அழிக்க வேண்டும்.

புரோடீனியா புழுக்கள் மற்றும் ஹீலியோதிஸ் அந்துகளை இனக் கவர்ச்சிப் பொறிகளை அமைத்துக் கண்காணிக்கலாம்.

பயிர்களில் தென்படும் முட்டைக் குவியல்களைச் சேகரித்து அழிக்கலாம்.

பருத்தியில் அமில நேர்த்தி செய்யப்பட்ட விதைகளைப் பயன்படுத்தவேண்டும்.

பருத்திக் குடும்பத்தைச் சார்ந்த வெண்டை, புளிச்சக்கீரை போன்ற பயிர்களை அருகில் பயிர் செய்வதைத் தவிர்க்கவேண்டும்.

பருத்தியில் தண்டுக்கூன் வண்டு அதிகம் தோன்றும் பகுதிகளில்

# மானாவாரிப் பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு



அறுவடை செய்த பயிர் பாகங்களை வயலில் வைப்பதையும், மறுதாம்பு செய்வதையும் தவிர்க்கவேண்டும்.

அந்தந்தப் பயிர்களில் பூச்சி களின் பொருளாதாரச் சேதநிலை எட்டியவுடன் கீழ்க்காணும் மருந்து களில் ஏதாவதொன்று காலை நேரங்களில் தூவ வேண்டும்.

கார்பரில் 5 சத நனைதூள் - ஏக்கருக்கு 10 கிலோ

பி.எச்.சி. 10 சத நனைதூல் - ஏக்கருக்கு 10 கிலோ

மேற்குறிப்பிட்ட முறைகளில் பயிர்ப் பாதுகாப்பு செய்து மானா வாரிப் பயிர்களில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த அதிக மகசூல் பெற லாம் என்று வேளாண் தகவல் பணிமையம் அறிவிக்கின்றது.

## கோடைப் பருவப் பருத்தியில் விதைநேர்த்தி

பொதுவாக விதை உற்பத்தி யாளர்கள் முந்தைய ஆண்டு கோடைப் பருவத்தில் உற்பத்தி செய்த விதை யையே, அடுத்த ஆண்டு கோடைப் பருவத்திற்கு உபயோகப்படுத்துகிறார்கள். இவ்வாறு ஓராண்டுச் சேமிப்பில் உள்ள விதைகள் வண்டுகளின் தாக்குதலுக்கு உட்பட்டு, விதையின் தரம் மிகவும் குறைகிறது. இப்படித் தரம் குறைந்த விதைகளைத் தரமிக்க விதைகளாக மாற்ற கந்தக அமிலம் கொண்டு விதை நேர்த்தி செய்து விதைக்கவேண்டும்.

**செய்முறை:** தேவையான விதை களை ஒரு பிளாஸ்டிக் வாளியில் எடுத்துக்கொண்டு ஒரு கிலோ விதைக்கு 100 மி.லிட்டர் வியாபார அடர் கந்தக அமிலம் என்ற அளவில் சிறுகச் சிறுக ஊற்றி, மரக்கழி கொண்டு நன்கு 2-3 நிமிடம் (விதைகள் காப்பிக் கொட்டை நிறத்தில் வரும் வரை) கலக்க வேண்டும். பின்பு இரண்டு மூன்று முறை குளிர்ந்த நீரினால் விதை களைக் கழுவி அதன்மேல் உள்ள அமிலத்தை நீக்க வேண்டும். அடியில் தங்கிய முதிர்ந்த விதைகளை எடுத்து நிழலில் உலர்த்த வேண்டும். பின்பு காப்டானை ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் என்ற விகிதத்தில் கலந்து விதைத்தல் வேண்டும். பூச்சி நாசினி யான டி.டி.டீக்கு பதிலாக, 5 சத கார்பரில் மருந்தை 2 கிராம் அளவில் சேர்த்து நேர்த்தி செய்ய லாம்.

## சென்னை மாநகராட்சியின் மின்சாரச் சுடுகாடு

பெசன்ட் நகரில் மாநகராட்சியின் மின்சாரச் சுடுகாடு 1.9.92 அன்று முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. இந்தச் சுடுகாட்டை, சென்னை மாநகராட்சி சுமார் ரூ.50 இலட்சம் செலவில் நிறுவி யுள்ளது. ஏற்கெனவே சோதனை செய்து பார்த்ததில், இந்தச் சுடுகாடு சிறந்த முறையில் இயங்கியது. அதன் அடிப் படையில் 1.9.92 அன்று முதல் சென்னை நகர மக்களுக்கு இந்த வசதியை வழங்க மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

இந்தச் சுடுகாட்டில் இரண்டு மின் உலைகள் உள்ளன. ஒவ்வொரு உலை யிலும் ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட 15 முதல் 20 சடலங்களை தகனம் செய்ய லாம். 2-வது உலை இன்னும் 15 நாட் களில் தயாராகி விடும். இதற்குக் கட்டணம், மிகக் குறைந்த அளவு தான். தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரத்தில் எந்தப் பகுதி யிலிருந்தும் சடலங்களை எடுத்து வரலாம். இது குறித்து மேலும் தகவலறிய விரும்பு வோர் 845691 என்ற தொலைபேசி யில் தொடர்பு கொள்ளலாம்.

மேலும், இன்னும் ஒரு மாதத்தில் மாநகராட்சி ஒரு அமரர் ஊர்தியைத் தயார் செய்து குறைந்த கட்டணத்தில் பொதுமக்களுக்கு அளிக்க இருக்கிறது.

**நன்மைகள்:**

★ விதையின் தரம் உயர்கிறது.
★ விதையின் முளைப்புத் திறன் அதிகரிக்கிறது.
★ விதையின் மேல் உள்ள விதை மூலம் பரவும் பூஞ்சாளக்களை நீக்கப்படுகிறது.
★ விதைப்பது சுலபம், சீரான பருமன் கொண்ட விதைகளானதால் விதை நேர்த்திக்கு எளிதானது.
★ விதைப்பதற்குக் குறைந்த விதைகளே போதுமானது.
★ விதைகள் குறைந்த நீரைக்கொண்டு நன்கு விரைவாக முளைக்கவும் ஏது வாகிறது.

## 1,307 டன் தேயிலை ஏற்றுமதி

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் தொடங்கி ஆகஸ்ட் வரையிலான ஐந்து மாத காலத்தில், இந்திய தேயிலை வர்த்தக அமைப்பு ரூ.9.75 கோடி மதிப்பிலான 1,307 டன் எடையுள்ள தேயிலையை ஏற்றுமதி செய்திருக்கிறது.

நம் நாட்டிலிருந்து அதிக அள வில் தேயிலையை வாங்கிய நாடு களில் முதலிடம் பெறுவது ஜெர்மனி. இந்த நாடு ரூ.2.29 கோடி மதிப் புக்கு தேயிலையை நமது நாட்டி லிருந்து இறக்குமதி செய்தது. இதைத் தொடர்ந்து ஜப்பான், பெல்ஜியம், மொராக்கோ ஆகிய நாடுகள் அதிக அளவில் இந்தியா விலிருந்து தேயிலையை வாங்கின.

## ஊதாக் கதிர் விளக்குப் பொறியின் மூலம், தானியச் சேமிப்புக்கிடங்கில் பூச்சிக் கட்டுப்பாடு

**தா**னியச் சேமிப்புக் கிடங்கு களில் காணப்படும் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்க ஓர் ஊதாக் கதிர் விளக்குப்பொறி நமது வேளாண் மைப் பல்கலைக்கழகத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இப்பொறி ஊதா கதிர்களை வெளியிடும் 4 வாட் விளக்கினைக் கொண்டது. இவ்விளக்கு, புனல் வடிவ அமைப்புக் கொண்ட ஓர் பொறியியல் மேற் புறத்தில் அதன் மையப்பகுதியில் பொறுத்தப்பட்டுள்ளது. புனலின் மேல் குறுக்கு விட்டம் 310 மி.மீ. அளவும் கீழ் வட்டம் 85 மி.மீ. அளவும் உடையது. புனலின் அடிப் பகுதியில் கவரப்பட்ட பூச்சிகளைச் சேகரிக்க பிளாஸ்டிக் டப்பா ஒன்று பொறுத்தப்பட்டுள்ளது. இந்த விளக்குப் பொறியை வேண்டிய இடத்தில் தொங்க விடுவதற்குப் புனலின் விளிம்புகளில் பொருத் திகள் உள்ளன.

இப்பொறியை, சேமிப்புக் கிடங் கில் தரையிலிருந்து சுமார் 1.5 மீ உயர்த்தில் சுவர் பகுதியின் அருகில் வைத்தல் வேண்டும். நெல் மற்றும் அரிசியைத் தாக்கும் ரைசோபர்தா, டிரைபோலியம் வண்டு போன்ற பலவகை வண்டுகள் அதிக அளவில் இப்பொறியால் ஈர்க்கப்படுகின்றன. கிடங்கில் வேலை செய்வோர்க்கு இடையூறாக இருக்கும் சோசிட் எனப்படும் பூச்சிகளும் கவரப்படு கின்றன. இப்பொறியை, குறிப்பாக, தானியங்களை நீண்ட நாள் சேமித்து வைக்கும்போதும், பூச்சி தாக்கப் பட்ட தானிய மூட்டைகள் கிடங் கிற்கு வரும்போதும், பூச்சிகளைக் கட்டுப்படுத்த, புகை மூட்டம் போட்ட பின்பும் பயன்படுத்துவதன் மூலம் பூச்சிகளின் சேதம் விரை வாகப் பெருகுவதைத் தடுக்கலாம். தானியங்கள் அடிக்கடி போக்கு வரத்து உள்ள கிடங்குகளில் பூச்சி களின் நடமாட்டத்தைக் கண் காணிக்க இப்பொறியைப் பயன் படுத்தலாம்.

இப்பொறி ஒன்றின் விலை சுமார் ரூ.750 ஆகும். இதன் ஆயுட் காலம் 5000 மணி. இதனை ஓர் இரவுக்குப் பயன்படுத்த ஆகும் செலவு 30 காசு என்று பல்கலைக் கழகத்தின் வேளாண் தகவல் பணி மையம் அறிவிக்கின்றது.

## சிறப்புத்தள்ளுபடி விலையில் கதர்த் துணிகள்

10 சதம் சிறப்புத் தள்ளுபடி விலையில், காதித் துணிகளை ஆண்டுதோறும் விற்பனை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது; அதன்படி இந்த ஆண்டில், பின்வரும் காலங்களில் விற்பனை செய்யப்படும்:

| | |
|---|---|
| ரம்ஜான் பண்டிகைக்காலம் | 7 நாட்கள் |
| காமராஜர் பிறந்தநாள் (ஜூலை 1-15) - | 15 நாட்கள் |
| பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் பிறந்த நாட்கள் (செப்டம்பர் 15-29)- | 15 நாட்கள் |
| காந்தி ஜெயந்தி, தீபாவளி (2.10.92-24.10.92) - 4,11,18 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளையும் சேர்த்து) | 23 நாட்கள் |
| ராஜாஜி பிறந்த நாள் (4.12.92-8.12.92) 6-ந் தேதி ஞாயிறு இல்லாமல் | 4 நாட்கள் |
| கிறிஸ்துமஸ், பொங்கல் பண்டிகைகள் காலம் (17.12.92-31.1.93) (டிசம்பர் 20,25,27, ஜனவரி 3-ம்நாள் ஞாயிறு சேர்க்காமல்) | 24 நாட்கள் |
| ஆண்டு இறுதி 27.3.93-29.3.93 விற்பனை (28ந் தேதி ஞாயிறு சேர்க்காமல்) | 2 நாட்கள் |
| மொத்தம் | 90 நாட்கள் |

# தமிழகத்தில் சட்டமும் ஒழுங்கும் முழுமையாக நிலைநாட்டப்பட்டு அமைதி நிலவுகிறது

## சட்டப் பேரவையில் முதல்வர் அறிக்கை

**1991**-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இவ்வரசு பதவியேற்றதும், தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களின் நடவடிக்கைகளை, குறிப்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. புலிகளின் நடவடிக்கைளைத் தமிழகத்தில் அறவே நீக்கிட, புலிகள் இயக்கத்தை தடைசெய்ய வேண்டுமென, பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இந்திய அரசின் உள்துறை அமைச்சகம், 1992-ஆம் ஆண்டு மே திங்கள் 14-ஆம் நாளன்று வெளியிட்ட, நிலை ஆணை 330(இ)-ஆம் எண்ணுள்ள தமது அறிவிக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பானது, ஒரு சட்டப்புறம்பான அமைப்பு என்று அறிவித்துள்ளது. இது 1967-ஆம் ஆண்டு சட்டப் புறம்பான நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின் (Act 37 of 1967) 3-ஆம் பிரிவின் 1-ஆம் உட்பிரிவின்படி அறிவிக்கப்பட்டுள்ளது. 1967-ஆம் ஆண்டு சட்டப்புறம்பான நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின் (Act 37 of 1967)-இன் கீழ், தண்டிக்கத்தக்க குற்றங்கள் தொடர்பாக, வழக்கு தொடர்வதற்கு அனுமதி அளிக்கும் அதிகாரம், தமிழ்நாடு அரசு உள்துறை செயலருக்கு வழங்கப் பட்டுள்ளது. இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் 28.5.1992-ஆம் நாளிட்ட, 364(இ), 365 (இ)- ஆம் எண்ணுள்ள அறிவிக்கையில், இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இச்சட்டத்தில் 7,8-ஆம் பிரிவுகளின்படி, இந்திய அரசின் உள்துறை அமைச்சகம் கையாளக்கூடிய அனைத்து அதிகாரங்களையும், தமிழ்நாடு அரசு செலுத்த வல்லமையுள்ளது என்றும் ஆணையிடப் பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசு கையாளத்தக்க அத்தகைய அதிகாரங்கள் அனைத்தையும், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாநகர்களில், காவல்துறை ஆணையாளர்களும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் செலுத்த வல்லமையுடையவர்கள் என்றும், இந்திய அரசு ஆணையிட்டுள்ளது.

சட்டப்புறம்பான எந்தவொரு நடவடிக்கையிலும் பங்கேற்கும், அல்லது அத்தகைய நடவடிக்கையைச் செய்யும் அல்லது அந்நடவடிக்கைகளைப் போதிக்கும், அறிவுறுத்தும், அல்லது அந்நடவடிக்கைகளுக்கு உடந்தையாயிருக்கும், அல்லது அத்தகைய நடவடிக்கையினைச் செய்யத் தூண்டும் எவரும், இச்சட்டத்தின் 13- ஆம் பிரிவின்படி, 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், அபராதத் தண்டனையும் பெறுவர். சட்டப்புறம்பான அமைப்பு என்று அறிவிக்கப்பட்ட ஓர் அமைப்பின், சட்டப்புறம்பான எந்தவொரு நடவடிக்கைக்கும், எந்த வழியிலேயும் உதவிபுரியும் எவரும், 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை, அல்லது அபராதத் தண்டனை, அல்லது கூட்டாக இவ்விரு தண்டனைகளும் பெறுவர்.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ் அவர்கள், 17.5.1992 அன்று, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் நன்னிலத்தில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்திற்கு, ஆதரவு அளிப்பதாக வெளிப்படையாக அறிவித்தார்.

அண்மையில் திண்டுக்கல் நகர் அருகிலுள்ள, மேட்டுப்பட்டி என்ற கிராமத்தில் நடைபெற்ற





**சென்னை வந்த மத்தியப் பணியாளர் நல இணை அமைச்சர் திருமதி. மார்கெரெட் ஆல்வா அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, முதல்வரின் இல்லத்தில் சந்தித்துப் பேசினார் (18.9.'92).**

திருமண விழாவில், ஒரு குழந்தைக்கு 'பிரபாகரன்' எனப் பெயர் சூட்டினார்.

பாட்டாளி மக்கள் கட்சியின் நாளேடும், தமிழ் தினசரியுமான 'தினப்புரட்சியில்', 25, 26 மற்றும் 27.8.92-ஆம் தேதிகளில், 'தன்னுரிமை' என்னும் பொருள் பற்றிக் கூறுகையில், டாக்டர் ராமதாஸ் கீழ்க்கண்ட கருத்துக்களை தெரிவித்ததாக அந்த தினசரியில் வந்துள்ளது.

'ஆரியர்களின் மேலாதிக்கத்தின் கீழ், தமிழர்கள் விவரிக்க முடியாத துன்பங்களை அனுபவிப்பதாகவும், தங்கள் சொந்த மாநிலத்திலேயே அகதிகளாகவும், அடிமைகளாகவும் வாழும் சூழ்நிலைக்கு, அவர்கள் தள்ளப்பட்டுள்ளதாகவும், அரசியலமைப்பின் அடிப்படையில் அவர்களுக்கு பேச்சுரிமை, எழுத்துரிமை மறுக்கப்பட்டுள்ளதாகவும், அரசியல் மற்றும் சமூக பொருளாதார துறைகளில், அவர்களுக்குரிய உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதாகவும், கருப்பு சட்டங்கள் அவர்கள் மீது திணிக்கப்பட்டு, அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுவதாகவும் கூறியுள்ளார்''.

''தினப்புரட்சி''-யில் அவர் வெளியிட்டுள்ள கருத்துக்களையடுத்து, பாட்டாளி மக்கள் கட்சி, தமிழர் வாழ்வுரிமை மாநாட்டை செப்டம்பர் திங்கள் 10, 11 மற்றும் 12 தேதிகளில் சென்னையில் நடத்தியது.

மாநாட்டில் பங்கேற்று உரையாற்றியவர்களில், டாக்டர் எஸ். ராமதாஸ், திரு. தீரன், திரு. ப. நெடுமாறன், திரு. கி.ஆ.பெ. விசுவநாதம், திரு. பெருஞ்சித்திரனார் ஆகியோர் முக்கியமானவர்கள். டாக்டர் ராமதாஸ் பேசுகையில், தமிழ்நாட்டு மக்களைக் காப்பாற்றும் நோக்குடன், இம்மாநாடு நடத்தப்படுவதாகக் கூறினார். தனி ஈழம் அடையும் பிரபாகரனின் இலட்சியம், விரைவில் ஈடேறும் என்றும் கூறினார்.

மாநாட்டின் இரண்டாம் நாளன்று உரை நிகழ்த்திய, திலீபன் மன்றத்தைச் சேர்ந்த தியாகுவும், பாட்டாளி மக்கள் கட்சியின் கொள்கை பரப்பு அணி மாநிலத் தலைவர், திரு. சி.ஆர். பாஸ்கரனும், அரசின் பொருளாதாரக் கொள்கையைக் குறை கூறியதுடன், தமிழர்கள் தன்னுரிமை பெற முயற்சி செய்ய வேண்டியதன் அவசியத்தையும், வலியுறுத்திப் பேசினர். மாநாட்டில் பேசிய பேச்சாளர்கள் அனைவரும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்ததை தீவிரமாகக் கண்டித்ததுடன், விடுதலைப்புலி இயக்கத்தையும், இயக்கத்தின் தலைவரான பிரபாகரன், தமிழீழம் மற்றும் திரு. ராஜீவ் காந்தியைக் கொலை செய்தவர்களையும், ஆதரித்துப் பேசினார்கள். விடுதலைப் புலிகள் வீரத்தோடு போராடி வருவதாகவும், அந்த இயக்கத்திற்கு எத்தனை தடைகள் ஏற்படுத்தப்பட்டாலும், அத்தடைகளையும் மீறித் தாங்கள் அளித்து வருகின்ற ஆதரவினை எந்த விதத்திலும் விலக்கப்போவதில்லை என்றும், தமிழீழம் அமைவதைப்போல், தமிழ்நாட்டிலும் தன்னுரிமை கிடைக்கவேண்டும் என்றும், அப்படி தன்னுரிமை கிடைக்கவில்லையென்றால், தனித் தமிழ்நாடு கோரிக்கை இங்கு வலிவு பெறப் போகிறது என்றும் பேசினார்கள். பிரபாகரன் வளரக் கூடாதென்ற காரணத்தினாலே, மத்திய

அரசு பிரபாகரன் மீது கொலைப் பழியைச் சுமத்தியிருப்பதாகவும், பிரபாகரன் மீது எவ்வளவு கொலை வழக்கு போட்டாலும், அதைப்பற்றி தமிழ்ச் சமுதாயம் கவலைப்படப் போவதில்லை என்றும், கவலைப்பட வேண்டிய அவசியமும் கிடையாது என்றும், அதே பிரபாகரனை ராணுவ மரியாதையுடன், குண்டு ஒலி முழங்க வரவேற்று, நரசிம்மராவ் பேச்சு வார்த்தை நடத்தப்போகின்ற காலம், கண்ணெதிரில் தெரிவதாகவும், அதற்கான ஆயத்தப் பணிகளை, ராமதாஸ் தலைமையில் தமிழ்ச் சமுதாயம் செய்து கொண்டிருப்பதாகவும், தமிழீழத்துக்காக உயிரைக் கொடுப்பதற்காக, 25 இலட்சம் இளைஞர்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்கள் தயார் நிலையிலே இருப்பதாகவும், டெல்லிக்கு வேண்டிய அதிகாரத்தை வழங்குகின்ற நிலையில், தமிழர்கள் வாழும் பகுதி இருக்கவேண்டுமே தவிர, அதிகாரத்தை டெல்லியிலிருந்து வேண்டுகிற நிலை இருக்கக் கூடாது என்றும், அவ்வகையில் தமிழர்கள் வாழ்கிற நாடு, தமிழர்களுக்கே சொந்தம் என்றும் கூறப்பட்டது.

மாநாட்டின் கடைசி நாளான, 12.9.92 அன்று நடைபெற்ற ஊர்வலத்தில் பங்கேற்றவர்கள், எல்.டி.டி.ஈ-யையும் பிரபாகரனையும் ஆதரித்து, ''உலகத் தமிழன் பிரபாகரன் வாழ்க'' என்று கோஷத்தை எழுப்பிக்கொண்டு சென்றனர். ஊர்வலத்தில் பிரபாகரனுடைய உருவப்படம் எடுத்துச் செல்லப்பட்டது. ஊர்வலத்தில் சென்றவர்களில் சிலர், பிரபாகரனின் உருவப்படத்தையும், மற்றும் சிலர் பிரபாகரன், சிவராஜன், ஆகியோரின் உருவப்படம் தாங்கிய தலைப்பாகை அணிந்து சென்றனர். மேலும் தாணு, சிவராஜன் ஆகியவர்களைப் புகழ்ந்தும், 'காலிஸ்தான் ஜிந்தாபாத்' என்ற கோஷங்களையும் எழுப்பிக் கொண்டும் சென்றனர்.

மாநாட்டில் உரையாற்றிய திரு. தீரன் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குத் தடை இருந்து வருவதாகவும், அந்த தடையை மீறி தாங்கள் அவர்களுக்கு அளித்து வருகின்ற ஆதரவினை எந்த நிலையில் இருந்தும் மாற்றப்போவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திரு. நெடுமாறன், மாநாட்டை டாக்டர் ராமதாஸ் துவக்கி வைப்பது மிகவும் பொருத்தமானது என்று கூறி வழிமொழிந்து பேசுகையில், விடுதலைப் புலிகளின் இயக்கத்திற்கு ஆதரவு எந்த நிலையிலும் அளிக்க தாங்கள் தயாராக இருப்பதாகச் சொல்லியுள்ளார்.

திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் உரையாற்றும் பொழுது 'அரசியல் சட்டம் 21-வது பிரிவின்படி வாழ்வுரிமை, கல்வி உரிமை, நீதி பெற உரிமை போன்றவைகள் கிடைக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. அந்த உரிமைகள் தமிழர்களுக்கு கிடைக்கின்றதா? எங்கு பார்த்தாலும் தமிழன் தாக்கப்படுகிறான் என்ற நிலைமை தானே இருக்கிறது'' என்று கூறியுள்ளார். இந்திய அரசு நெல்சன் மண்டேலாவையும், யாசர் அராபத்தையும் ஆதரிக்கிறது; விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்கிறது, என்ன நியாயம் என்று கேட்டு, விடுதலைப்புலி இயக்கத்திற்கு எத்தனை தடைகள் விதிக்கப்பட்டாலும், அதை மீறி என்றைக்கும் அவர்கள் அவ்வியக்கத்திற்கு ஆதரவு கொடுக்கப் போவதாகக் கூறியுள்ளார்.

டாக்டர் ராமதாஸ் பேசுகையில், புறநானூற்றுக் கவிதைகளில் முன்னர் வாழ்ந்த தமிழர்களின் வீரம் பற்றிப் பத்திரிகைக்காரர்கள் எழுதுகிறார்களே தவிர, தற்போது AK 47-ஐ கையில் வைத்துக் கொண்டு போராடும் தமிழச்சி பற்றி எழுதுங்கள் என்று சொன்னால், அது தங்களின் வேலை இல்லை என்று பத்திரிகைக்காரர்கள் சொல்வதாகவும், மாவீரனாக பிரபாகரன் திகழ்ந்து கொண்டிருப்பதாகவும், அவரது குறிக்கோள் நிறைவேறப் போகிறது என்றும், தமிழ் ஈழம் மலர்வதைத் தாங்கள் பார்க்கத்தான் போகின்றோம் என்றும் கூறியுள்ளார்.

தமிழ் ஈழம் அமைவதைப் போல தமிழ்நாட்டிலும் தன்னுரிமை கிடைக்க வேண்டுமென்றும், அப்படி தன்னுரிமை கிடைக்கவில்லை என்றால் தனித்தமிழ் ஈழம் போல தனித் தமிழ்நாடு கோரிக்கை எழுந்து வலிமை பெறத்தான் போகிறது என்றும் கூறியுள்ளார்.

## உயரே... உயரே..!

உலகின் பெரிய ஏர்லைன்ஸ் நிறுவனங்களில் ஒன்றான இந்தியன் ஏர்லைன்ஸ் தொடங்கப்பட்டு 40 ஆண்டுகள் ஆகின்றன. ஏர்பஸ் ஏ-300, ஏ-320, போயிங் 737 என அனைத்து ரக நவீன விமானங்களையும் இந்நிறுவனம் இயக்குகிறது.

தினசரி 68 இடங்களை இணைக்கும் வகையில் 220 சர்வீஸ்கள் நடத்தப்படுகின்றன. சராசரியாகத் தினமும் 28,000 பேர் இந்தியன் ஏர்லைன்ஸில் பயணிக்கின்றனர். நமது அண்டை நாடுகளுக்கும் (11 நகரங்கள்) இந்தியன் ஏர்லைன்ஸ் சர்வீஸ் உள்ளது.

1985-ஆம் ஆண்டு கம்ப்யூட்டர் முன்பதிவு முறையைச் சென்னை உட்பட ஆறு நகரங்களில் அறிமுகப் படுத்தியது இந்நிறுவனம். தற்போது கஜுராஹோ தவிர அனைத்து விமான நிலையங்களிலும் இவ்வசதி இருக்கிறது.



• உனக்குப் பெருமை வேண்டுமானாலும், உற்சாகம் வேண்டுமானலும் பிற மனிதனுக்குத் தொண்டு செய்வதில் போட்டி போடுவதன் மூலம் தேடிக் கொள்.

—தந்தை பெரியார்

மாநாட்டின் முடிவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், இந்தியாவில் மைய அரசுக்கும் மாநில அரசுக்கும், இலங்கைத் தமிழர்களைப் பற்றிய கொள்கை இல்லை, என்ற கண்டனம் தெரிவிக்கப்பட்டது. மேலும் இந்திய நாட்டின் அரசியலமைப்புச் சட்டம், பணக்காரர்களாலும், அரசர்களாலும் கொண்டுவரப்பட்டதென்றும், மக்களுடைய தேவையை அவை பூர்த்தி செய்ய வில்லையென்றும், ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கவும், மேலும் தமிழ் மக்களுடைய அரசியல் மற்றும் குடியுரிமைகளைத் திரும்பப் பெறவும், தன்னுரிமைக் கருத்து உள்ளடக்கிய, புதியதொரு அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கவும், பாட்டாளி மக்கள் கட்சி போராடப் போவதாகவும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த டாக்டர் எஸ். ராமதாஸ், திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் மற்றும் பலர், திரு. ராஜீவ் காந்தி கொலை வழக்கில், குற்றவாளி என்று அறிவிக்கப் பட்ட பிரபாகரனை ஆதரித்தும், தமிழ் மக்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டதாகக் கூறி, அவற்றைக் காப்பாற்ற, தமிழ் மக்கள் தன்னுரிமை பெறவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியும், மற்றும் போராட்டம் நடத்தப்போவதாகவும் பேசி, மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றிய நிலையில், அவர்களின் இச்செயல்களின் தன்மை ஆராயப்பட்டு, அவை சட்டவிரோதமான நடவடிக்கைகள் ஆகும், என்று தமிழக காவல்துறை முடிவெடுத்து, டாக்டர் ராமதாஸ் மற்றும் 15 பேர்கள் மீது, 1967-ஆம் வருடத்திய சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டப் பிரிவு *13(1)* மற்றும் *13(2)*-இன் கீழ், வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கினைத் தொடர்ந்து, 18.9.92 அதிகாலை, டாக்டர் ராமதாஸ் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் உட்பட, 8 பேர் கைது செய்யப்பட்டனர். எனினும், டாக்டர் ராமதாசும், சட்டமன்ற உறுப்பினர் திரு. பண்ருட்டி ராமச்சந்திரனும், நீதிமன்றத்தால் ஜாமினில் விடுதலை செய்யப் பட்டனர்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து பல மாவட்டங்களிலிருந்து அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும், தனியார் பேருந்துகளும், தாக்கப்பட்ட சம்பவங்கள் கவனத்திற்கு வந்தது. மொத்தத்தில் 54 அரசுப் பேருந்துகள் மீதும், 17 தனியார் வாகனங்கள் மீதும் கல்வீசப்பட்டதாகவும், மற்றும் 2 அரசு பேருந்துகளும், 2 தனியார் வாகனங்களும், தீயிட்டு கொளுத்தப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 19.9.92-ஆம் நாள் வரை, 4,065 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காவல்துறை மற்றும் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு, சட்டம்- ஒழுங்கு, அமைதி, நிலைநாட்டவும், அரசு மற்றும் பொதுவுடைமை சொத்துக்களைப் பாதுகாக்கவும், விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு, அந்தந்த இடங்களின் நிலைமைக் கேற்ப பேருந்துகளை இயக்குமாறும், அவைகளுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறும், அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு, பாதுகாப்புப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற, மைய அரசிடம் தொடர்பு கொண்டு, மைய அரசின் காவல் தொகுப்பிலிருந்து, 10 கம்பெனி காவலர்களை அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. மைய அரசும் 6 கம்பெனி ஆயுதப்படைகளை அனுப்ப ஏற்பாடு செய்து, அவை தமிழ்நாட்டிற்கு வந்து சேர்ந்துள்ளன. தமிழகத்தில் தற்போது சட்டம்-ஒழுங்கு, முழுமையாக நிலைநாட்டப்பட்டு அமைதி நிலவுகிறது.

தமிழகத்தில், தேசவிரோத சக்திகளையும், தேசிய ஒருமைப்பாட்டிற்குப் பங்கம் விளைவிக்க முயற்சி செய்யும் எவரையும், இந்த அரசு எப்போதும் அனுமதிக்காது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை தடுத்து நிறுத்தி, அவர்களை வளர விடாது, முளையிலேயே கிள்ளி எறியும் அத்தனை நடவடிக்கைகளையும் எங்கள் அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், தமிழக மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

**- 21.9.92 அன்று சட்டப்பேரவையில் அளிக்கப் பட்ட பொது முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கை.**

## தமிழகத்தில் 9 கிணறுகளில் பெட்ரோல் கண்டுபிடிப்பு

தமிழகத்தில் எண்ணெய் நிலவாயுக் கமிஷன் தோண்டிய 56 கிணறுகளில், 9 கிணறுகளில் பெட்ரோல் இருப்பதும், 4 கிணறுகளில் இயற்கை எரிவாயு இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



## புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உதவி

புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து மனுக் கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 484 நபர்களைத் தேர்ந்தெடுத்து 21.9.92 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

புதுக்கோட்டையிலிருந்து அரசு செலவில் வாகனங்களில் சென்னைக்கு அழைத்துவரப்பட்டு அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத் துறைகள் மூலமாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நிதியுதவித் திட்டத்தின்கீழ் 37 பெண்களுக்கு ரூபாய் ஒரு இலட்சத்து 85 ஆயிரம் நிதியுதவியும்,கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 5 பெண்களுக்கு நிதியுதவியும், 2 நபர்களுக்குத் தையல் இயந்திரங்களும், 7 விதவைப் பெண்களின் மகள்களுக்குத் திருமண நிதியுதவியும், 9 நபர்களுக்குச் சலவைப் பெட்டிகளும், 5 நபர்களுக்குச் சவரப் பெட்டிகளும், 5 நபர்களுக்கு மூன்று சக்கர வண்டிகளும், கடற்சிப்பி பொருட்கள் செய்ய 3 நபர்களுக்கு ரூ.81,500-ம், ஒருவருக்கு கிரஷர் யூனிட் வைப்பதற்கு ரூ.4,36,000-ம் நிதியுதவி வழங்கப்பட்டது.

மாவட்டத்தில் தொழில் தொடங்க, தொழில் வணிகத் துறை மூலம் 10 நபர்களுக்கு ரூ.6,66,681 நிதியுதவியும், வண்டியும் மாடுகளும் வாங்க 32 நபர்களுக்கு ரூ.2,72,000 நிதியுதவியும், 38 நபர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க ரூ.2,66,000-ம், செம்மறி ஆடு வளர்க்க 11 நபர்களுக்கு ரூ.16,92,000 நிதியுதவியும், பெட்டிக் கடை வைக்க 12 நபர்களுக்கு ரூ.40,000 நிதியுதவியும், கயிறு திரிக்கும் தொழிலுக்கு 11 நபர்களுக்கு ரூ.16,500 நிதியுதவியும் வழங்கப்பட்டன.

2 நபர்களுக்கு டிராக்டர் வாங்க ரூ.4,37,000-ம், 7 நபர்களுக்கு ஆட்டோ ரிக்ஷா வாங்க ரூ.2,93,500-ம், லாரி வாங்க 3 நபர்களுக்கு ரூ.12,95,000-ம், 29 நபர்களுக்குச் செயற்கை வைரத்தைப் பட்டை தீட்டும் இயந்திரம் வாங்க ரூ.31,26,000-ம் 'அறிவொளி மகளிர் சைக்கிள் வழங்கும் திட்டத்'-தின் கீழ் 9 பெண்களுக்கு ரூ.12,700-ம் நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

64 நபர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்களும், 13 நபர்களுக்கு நிலப்பட்டாக்களும் வழங்கப்பட்டன. 25 நபர்களுக்கு நலிந்தோர் நல வாழ்வுத் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் ரூபாய்க்கான உதவிகளும், 61 நபர்களுக்கு நகர்ப்புற வேலைவாய்ப்புக் கடன் உதவித் திட்டத்தின்கீழ் ரூ.2,53,500 மதிப்பீட்டில் உதவிகளும் வழங்கப்பட்டன.

மொத்தம் 484 நபர்களுக்கு ரூ.1,02,14,464 (ரூபாய் ஒரு கோடியே இரண்டு இலட்சத்துப் பதினான்கு ஆயிரத்து நானூற்று அறுபத்து நான்கு மட்டும்) பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள். இதில் 285 நபர்கள் பெண்களாவர்.

மேலும், 1990-91-ஆம் ஆண்டிற்கு 19 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவியும், 13 கர்நாடகத் தமிழருக்கு மொத்தம் ரூ.65,000-ம் நிதியுதவியும் வழங்கப்பட்டது.

### திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில்

# மீன் வளர்ப்பு

திரு. எம். அப்துல் ஜலீல்
உதவி இயக்குநர்
மீன் துறை

நிலமும், நீரும் ஒருங்கே பெற்றுள்ள வேளாண் மக்கள் வேளாண்மையுடன் மீன் வளர்ப்பையும் தமது இணைந்த தொழிலாக ஏற்றால், மாவுச்சத்து நிறைந்த வேளாண் விளை பொருள்களுடன் விலங்கினப் புரதச் சத்து மிக்க மீனையும், சமச்சீர் சத்துணவாகப் பெறமுடியும். தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் மீன் வளர்ப்பிற்குப் பயன்படுத்தப்படாத நிலையில் பல குளங்கள் உள்ளன. இக்குளங்களில் தீவிர மீன் வளர்ப்பு மேற்கொண்டு ஒரு எக்டேர் நீர்ப் பரப்பில் சுமார் 4,000 கிலோ வரை பெரு ரகக் கெண்டை மீன்களை உற்பத்தி செய்து ஆண்டுக்குச் சுமார் ரூ.20,000 வரை நிகர லாபம் அடையலாம்.

மாறுபட்ட உணவுப் பழக்கங்களையுடைய வெவ்வேறு வகை மீன்களை ஒரே குளத்தில் இட்டு வளர்த்து மீன் உற்பத்தியைப் பெருக்குவதே கூட்டின மீன் வளர்ப்பாகும்.

**குளங்களின் அமைப்பும் பராமரிப்பும்**

மீன் வளர்ப்பிற்குத் தேர்வு செய்யப்படும் குளத்தில் சுமார் ஒன்று முதல் இரண்டு மீட்டர் ஆழத்திற்குத் தண்ணீர் தேங்கி நிற்கவேண்டும். களிமண் பாங்கானதும், நீர்ப்பிடிப்புத் தன்மையுள்ளதுமாக இருத்தல் வேண்டும். கால்வாய், நீர் ஊற்று அல்லது ஆழ்குழாய்க் கிணற்றுக்கு அருகில் உள்ள, ஒன்று முதல் ஐந்து ஏக்கர் பரப்பளவுள்ள குளங்கள் மீன் வளர்த்துப் பராமரிக்க மிகவும் ஏற்றவை. புதிதாக மீன் வளர்ப்புக் குளங்கள் அமைக்க மிகுந்த செலவாகும். எனவே கிராமங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியம், வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, இந்து சமய அறநிலையத்துறை, வனத்துறை மற்றும் தனியார் பொறுப்பிலிருக்கும் குளம், குட்டைகளைத் தூர் எடுத்துக் கரைகளைப் பலப்படுத்தி மீன் வளர்ப்புக்குப் பயன்படுத்தலாம்.

**மீன் வளர்ப்பிற்குக் குளத்தைத் தயார் செய்தல்**

குளத்தில் அதிகப்படியாக வளர்ந்து இருக்கும் நீர்த் தாவரங்களை அகற்ற வேண்டும். குளத்தின் அடியில் சேர்ந்து அமுங்கியிருக்கும் சகதியை முடிந்தவரை அகற்ற வேண்டும். குளத்தில் குறைந்தது 5 அடி நீர் நிற்கும் அளவிற்குக் கரைகளை உயர்த்திப் பலப்படுத்தி வைக்க வேண்டும். குளத்தின் மத்தியில் நான்கு புறமும் பள்ளம் தோண்டி வைத்தல் நல்லது. குளத்தின் கரைகளில் பலன்தரும் மரங்களை வளர்த்தல் நல்லது. குளத்தில் இயற்கையாக வளர்ந்துவரும் நாட்டுக் கொண்டைகள் மற்றும் கெழுத்தி மீன்களை மீன்கொல்லி மருந்துகளை உபயோகித்து அழிக்கவேண்டும். ஒரு எக்டேருக்கு 2,500 கிலோ என்ற அளவில் இலுப்பைப் பிண்ணாக்கை மீன் கொல்லியாகப் பயன்படுத்தலாம். இலுப்பைப் புண்ணாக்கின் விஷத்தன்மை சுமார் 15 தினங்கள் நீரில் இருக்கும். பின்னர் அது குளத்திற்கு உரமாக மாறி விடும். குளத்தின் நீர் காரத்தன்மை வாய்ந்ததாக இருக்கவேண்டும். அமிலத்தன்மை இருந்தால் தேவையான அளவு சுண்ணாம்பிட்டு பி.ஹெச்-8-க்கு மேல் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும். மீன் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தவில்லையாயின் நீரை வடித்து



# தொழில் வளர்ச்சி

சுதந்திரத்திற்குப் பின் கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளில் இந்தியர்களாகிய நாம் பல துறைகளில் சாதனை புரிந்துள்ளோம். பருத்தி ஆடைகள் தயாரிப்பில் உலகில் இரண்டாவது இடத்திலும், நைட்ரஜன் உர உற்பத்தியில் மூன்றாவது நிலையிலும், கடின நிலக்கரி அகழ்வில் நான்காவதாகவும், சிமெண்ட் உற்பத்தியில் ஐந்தாவதாகவும், மின் உற்பத்தியில் ஒன்பதாம் நிலையிலும் நாம் இருக்கிறோம்; இது பெருமைக்குரிய செய்தியாகும்.

நாட்டின் வளர்ச்சியில், குறிப்பாகப் பொதுத் துறையின் பங்கை மறப்பதற்கில்லை.

1951 ஏப்ரல் முதல் தேதியன்று 29 கோடி ரூபாய் முதலீட்டில் ஐந்து நிறுவனங்களைக் கொண்டிருந்த பொதுத்துறை, 1991 மார்ச் 31-ல் ரூ.1,13,234 கோடி முதலீடு கொண்டு 246 நிறுவனங்களாக வளர்ந்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20 சதவிகிதத்தை மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் அளிக்கின்றன.

நிலக்கரி, லிக்னைட், பெட்ரோலியம், செம்பு, ஈயம் ஆகியவற்றின் நூறு சதவிகித உற்பத்தியையும் தேசிய எஃகு உற்பத்தியில் 60 சதவிகிதத்தையும் இவை அளிக்கின்றன! அதுமட்டுமின்றி, 23 இலட்சம் பேருக்கு வேலை தந்து வாழ்வும் அளிக்கின்றன பொதுத்துறை நிறுவனங்கள்!

—நன்றி: 'தூவானம்'

குளத்தை உலரச் செய்தும் களை மீன்களை அழிக்கலாம். மேலும் குளங்களில் நீர் உட்புகும் மற்றும் வெளியேறும் மதகுகளைச் சிறிய கண்ணியுடைய இரும்பு வலைகளால் இருப்புச் செய்யும் மீன் குஞ்சுகள் தப்பித்துவிடாதவாறு அமைத்திட வேண்டும்.

**உரமிடல்**

இயற்கை மற்றும் இரசாயன உர மிடுதல் மூலம் மீன்களுக்கு இயற்கை உணவுகள் அதிக அளவில் கிடைக்கச் செய்ய முடியும். இயற்கை உணவுகளான தாவர நுண்ணுயிர் Phytoplantitai மற்றும் விலங்கு நுண்ணுயிர் Zooplantitai நிறைந்த அளவில் உற்பத்தியாகுமாறு உர மிடுவது அவசியம். பரிந்துரைக்கப் படும் உரங்களின் அளவுகள் வருமாறு:

1. மாட்டுச்சாணம் அல்லது - கோழிச்சாணம் .. 10 டன்கள்/எக்டேர் 5 டன்கள்/எக்டேர்
2. யூரியா .. 200 கிலோ/எக்டேர்
3. சூப்பர் பாஸ்பேட் .. 250 கிலோ/எக்டேர்
4. பொட்டாஷ் .. 40 கிலோ/எக்டேர்

மேற்கூறிய உரங்களில் ஐந்தில் ஒரு பங்கு அடியுரமாக இட வேண்டும். ஈரப்பதமான சாணம் மிகவும் ஏற்றது. சாணத்தைத் தண்ணீர்விட்டு நன்கு பிசைந்து, கலக்கி குளத்தின் மேற்பரப்பில் முழுவதும் தெளிக்கவேண்டும். உர மிட்ட பத்து நாட்களில் மீன் குஞ்சுகள் இருப்புச் செய்யும் குளம் தயாராக இருக்கும். இவ்வாறு உரமிடுவதால் குளத்தில் மீன்களுக்கு உணவாகப் பயன்படும் தாவர மற்றும் விலங்கின நுண்ணுயிர்கள் நிறைந்த அளவில் உற்பத்தியாகி மீன்களுக்குத் தொடர்ந்து கிடைக்கின்றன.

**மீன்குஞ்சு இருப்புச் செய்தல்**

10 செ.மீட்டருக்கு மேல் வளர்ந்த பெரு ரகக் கெண்டை மீன் குஞ்சுகளான கட்லா, ரோகு, மிர்கால், சாதாகெண்டை, புல்கெண்டை மற்றும் வெள்ளிக்கெண்டை ஆகியவை ‹ ‘டின மீன் வளர்ப்பிற்கு ஏற்றவை. மேற்குறிப்பிட்ட மீன் குஞ்சுகளை ஜூன், ஜூலை மாதங்களில் அரசு மீன் விதைப் பண்ணைகளினின்றும், மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மீன் விதைப் பண்ணைகளினின்றும், பெற்று எக்டேருக்கு 5,000 முதல் 7,500 வரை கீழ்க்காணும் விகிதத்தில் இருப்புச் செய்யலாம்.

| | |
|---|---|
| கட்லா .. | 15% |
| ரோகு .. | 20% |
| மிர்கால் .. | 15% |
| வெள்ளிக்கெண்டை .. | 20% |
| புல்கெண்டை .. | 10% |
| சாதாக்கெண்டை .. | 20% |

மேற்குறிப்பிட்ட மீன் இனங்களில் கட்லா மற்றும் வெள்ளிக் கெண்டை குளத்தின் மேற்பரப்பில், ரோகு மற்றும் புல்கெண்டை உற்பத்தின் நடுப்பகுதியிலும், மிர்கால் மற்றும் சாதாக்கெண்டை குளத்தின் அடிப்பகுதியிலும் காணும் தாவர மற்றும் விலங்கின நுண்ணுயிர்களை உணவாக உண்பதால் உணவு உண்பதில் மீன் இனங்களிடையே போட்டி இல்லை.

**மீன்களுக்கு உணவிடுதல்**

குளத்தில் மீன்களுக்கு இயற்கை உணவுகள் கட்டுப்பாடில்லாமல் தொடர்ந்து கிடைக்க உரமிடுதல் அவசியம். எனினும் மீன்களின் வளர்ச்சியை அதிகரிக்கவும் உற்பத்தியைப் பெருக்கவும் செயற்கை உணவு அளிக்கப்படுகிறது. குளத்தில் இருப்புச் செய்யப் பட்டுள்ள மீன் குஞ்சுகளின் எடைக்கு 3 சதவிகித செயற்கை உணவு தினமும் அளிக்கப்பட வேண்டும், பொதுவாக அரிசித்தவிடும், கடலைப் பிண்ணாக்கும் முறையே 1:1 என்ற விகிதத்தில் பயன்படுத்தப்படுகிறது. ஒரு எக்டேருக்கு 5000 மீன் குஞ்சுகள் வீதம் இருப்புச் செய்வதானால் அவற்றிற்கு கொடுக்கப் படும் உணவு அளவை பின்வருமாறு கணக்கிடலாம்.

1. முதல் காலாண்டிற்கு ஒரு எக்டேருக்கு .. 3 கிலோ நாள் ஒன்றுக்கு (ஒன்றரை கிலோ புண்ணாக்கு மற்றும் ஒன்றரை கிலோ தவிடு)
2. இரண்டாம் காலாண்டிற்கு .. 6 கிலோ
3. மூன்றாம் காலாண்டிற்கு .. 9 கிலோ
4. நான்காம் காலாண்டிற்கு .. 18 கிலோ

பொதுவாக ஒரு எக்டேருக்கு ஓராண்டிற்கு சுமார் 2,500 கிலோ பிண்ணாக்கும், தவிடும் உணவாக

# மறைமலைநகர்-
# காமராஜர் இரயில் நிலையம்: முதல்வர் அறிவிப்பு

காட்டாங்குளத்தூர் - சிங்கபெருமாள் கோயில் இரயில் நிலையங்களுக்கு இடையே உள்ள மறைமலை நகர் இரயில் நிலையத்திற்கு 'காமராஜ் நகர் இரயில் நிலையம்' எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் பல்வேறு பிரிவினரிடமிருந்தும் அரசுக்கு வந்துள்ளன. மேலும் 1988-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ஆம் தேதி, அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் பிரதமர், நம் பாசத்திற்குரிய திரு. ராஜீவ் காந்தி அவர்கள் 'காமராஜ் நகர் இரயில் நிலையம்' என்ற பெயர் நிரந்தரமாக அவ்விடத்திற்கு இட வேண்டும் என்று மறைமலை நகரிய மக்கள் தன்னிடம் வேண்டுகோள் விடுத்ததாகவும் அறிவித்திருந்தார்.

பிறகு, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த பல்வேறு தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மறைமலை நகர் இரயில் நிலையத்திற்கு காமராஜ் நகர் இரயில் நிலையம் என்று பெயரிடச் சொல்லி, போராட்டங்களின் மூலமும், தனிப்பட்ட முறையில் கடிதங்களின் மூலமும் அரசுக்கு அவ்வப்போது வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அமரர் ராஜீவ் காந்தி அவர்களிடம் பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கிற வகையிலும், நேற்று என்னைச் சந்தித்த காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுத்த இந்தக் கோரிக்கையினை நிறைவு செய்கிற வகையிலும், இது தொடர்பாகப் பொதுமக்களிடமிருந்து வந்த கோரிக்கைகளுக்கு மதிப்புக் கொடுக்கிற வகையிலும், மறைமலை நகர் இரயில் நிலையத்தை ''மறைமலை நகர் - காமராஜர் இரயில் நிலையம்'' எனப் பெயர் மாற்றம் செய்ய மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- சட்டப் பேரவையில் 24.9.92 அன்று அறிவிக்கப்பட்டது.**

---

கொடுக்கப்படுகின்றன. பாசித்திறன் மிக அதிகமாகத் தோன்றினாலும் நீரின் தன்மை மாறுபாடு அடைந்தாலும் உணவு அளிப்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவேண்டும். இருப்புச் செய்யப்பட்ட மீன்கள் நன்கு வளர்ந்திருக்கின்றனவா என்று அறிய மாதம் ஒருமுறை சோதனை மீன்பிடிப்பு நடத்திட வேண்டும். இது மீன்களுக்கு உணவளிப்பதன் அளவீட்டை அவ்வப்போது நிர்ணயம் செய்யவும் மீன்களின் ஆரோக்கியத்தைச் சோதனை செய்யவும் உதவும்.

**மீன்களைப் பாதுகாத்தல்**

குளத்தைச் சுற்றிலும் உபயோகப்படுத்தப்பட்ட நைலான் வலைகளை வேலியாக அமைத்தால், தவளை, பாம்பு போன்ற பிற நீர்ப்பிராணிகளிடமிருந்து வளரும் மீன்களைப் பாதுகாக்கலாம்.

**மீன் பிடிப்பு**

குளங்களில் தண்ணீர் இருக்கும் கால அளவைப் பொறுத்தும், வளர்ச்சியைப் பொறுத்தும், எட்டுமாத இறுதியிலோ அல்லது ஆண்டு இறுதியிலோ அறுவடை செய்வது நல்லது. சில சமயங்களில் சில மீன்களின் வளர்ச்சி மிகக் குறுகிய காலங்களிலேயே நன்கு அமையும். அவற்றை அறுவடை செய்து பிடிபட்ட மீன்களின் எண்ணிக்கையை ஈடு செய்ய அதே இன மீன்களை இருப்புச் செய்து நல்ல பலன் பெறலாம்.

**மீன் வளர்ப்புப் பொருளாதாரம்**

கலப்பின மீன் வளர்ப்பு முறையில் நவீன யுத்திகளைக் கையாண்டு மீன் உற்பத்தியைப் பெருக்கிட, ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றது. இருப்பினும் உயர்ந்த அளவாகக் கல்கத்தாவில் உள்ள மத்திய உள்நாட்டு மீன்வள ஆராய்ச்சி நிலையம் 10 டன்/எக்டேருக்கு உற்பத்தி செய்து சாதனை புரிந்துள்ளது. தமிழ்நாட்டில் சராசரியாக எக்டேருக்கு 3,000 முதல் 4,000 கிலோ வரை உற்பத்தி செய்யப்படுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு குறைந்த அளவு மீன் உற்பத்தி எக்டேருக்கு 3,000 கிலோ என்று வைத்துப் பொருளாதாரம் கணக்கிடப்பட்டுள்ளது.

1. குளம் சரி செய்வதற்கு ஆகும் செலவு, உரமிடுதல், மீன் குஞ்சுகளின் விலை, மீன் உணவு, மீன் பிடிக்கச் செலவு, நீரேற்றல் - செலவு மற்றும் காவல் கூலி உட்பட .. ரூ.10,000

2. மீன் உற்பத்தி - 3000 கிலோ விற்பனை மூலம் வருவாய் ரூ.10 கிலோ .. ரூ.30,000

3. நிகர லாபம் .. ரூ.20,000

இந்த வரன்முறை மண்ணின் உரச்சத்தையும், மீனின் வளர்ச்சியையும் பொறுத்து மாறும்.

பொருளாதார ரீதியில் பார்க்கும்போது கூட்டின மீன் வளர்ப்பு ஓர் இலாபகரமான தொழிலாகும். எனவே கூட்டின மீன் வளர்ப்பில் ஈடுபட்டு மீன் உற்பத்தியினைப் பெருக்கி வீடும், நாடும் நலம் பெறச் செய்வோமாக.





இந்தியாவுக்கான பெல்ஜியம் நாட்டுத் தூதர் திருமதி. கிறிஸ்டினா பியூனெஸ்னோப்பென் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, தலைமைச் செயலகத்தில் சந்தித்தார் (22.9.'92).

## தொடர்ந்து மூன்றாம் முறையாக அமெரிக்க நாட்டில் இந்தியர் மேயராகத் தேர்வு

அமெரிக்காவில் உள்ள 'ஹாலிவுட் பார்க்' என்னும் சிறு நகரத்தின் மேயராக பாலா கே. ஸ்ரீநிவாஸ் என்னும் இந்தியர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இது இவருக்கு முதல் முறையல்ல; தொடர்ந்து மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார், இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நகரம்டெக்ஸாஸ் மாநிலத்தில் சான் அன்டோனியோ அருகே உள்ளது. இதன் மக்கள்தொகை 3,000-க்கும் குறைவாகும். இந்நகரத்தில் இந்திய வமிசாவளியைச் சேர்ந்த மூன்று குடும்பத்தினர் வசிக்கின்றனர்.

பாலா ஸ்ரீநிவாஸ் இந்நகரத்தின் மேயராக 1988-ஆம் ஆண்டில் முதன்முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்கு முன்பு, 1985 முதல் அவர் அந்த நகராட்சியின் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். இந்த ஆண்டு மேயர் தேர்தலில் ஸ்ரீநிவாஸை எதிர்த்து இரண்டு வெள்ளையர்கள் போட்டியிட்டனர். ஆனால் ஸ்ரீநிவாசுக்கு 64 சதவீத வாக்குகள் கிடைத்தன. இவர் டெக்சாஸ் மாநிலக் குடியரசுக் கட்சியின் தீவிர உறுப்பினருமாவார்.

திரு. பாலா ஸ்ரீநிவாஸ் ஐதராபாத்தில் பிறந்தவர். அமெரிக்காவில் மெக்சிகன் பல்கலைக்கழகத்தில் இயந்திரப் பொறியியலில் முதுகலைப் பட்டம் பெற்றவர். இவர் ஜாம்ஷெட்பூரில் உள்ள டாடா "எஞ்ஜினியரிங் அண்ட் லோகோமோடிவ்" நிறுவனத்திலும், ஐதராபாத்தில் உள்ள "பிராகா டூல்ஸ்" நிறுவனத்திலும் பணியாற்றியவர். 1966-ஆம் ஆண்டில் இவர் அமெரிக்காவில் குடியேறினார்.

அமெரிக்காவிற்கு வந்ததும் இவர் கிளிவ்லண்ட் நகரில் பல ஆண்டுக்காலம் பணியாற்றினார். 1980-இல் இவர் ஹாலிவுட் பார்க்கிற்குக் குடிபெயர்ந்தார். இவரது மனைவி டாக்டராகப் பணி புரிகிறார்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

# திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் இளம்பிள்ளைவாத மறுவாழ்வு முகாம்



**தி**ண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் உள்ள கிராமப் பகுதியில் வாழும் மக்களிடையே இருக்கும் இளம்பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறு வாழ்வு அளிக்கும் வகையில் இலவச மருத்துவ முகாம், எலும்பு முறிவு சிகிச்சையில் சிறந்த பயிற்சி பெற்ற நிபுணர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தில் முதல் கட்டமாக ஆத்தூர், ஒட்டன்சத்திரம் ஆகிய பகுதிகளிலும், இரண்டாம் கட்டமாக பழனி, சாணார்பட்டி ஆகிய பகுதிகளிலும் நடத்தப்பட்டு இளம்பிள்ளைவாத சிகிச்சை நிவாரணம் அளிக்கப்பட்டது.

நடப்பு ஆண்டில் நிலக்கோட்டை மற்றும் வேடசந்தூர் ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் இளம்பிள்ளை வாத நோய்க்கு சிகிச்சை அளிக்கும் வகையில் 8 இடங்களில் மருத்துவ முகாம் அமைக்கப்பட்டு, நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டு நிவாரணம் செய்யப்பட்டுள்ளது.

இம்முகாம்களின் மூலம் 325 நபர்களுக்கு இளம்பிள்ளைவாத நோய் கண்டறியப்பட்டு அவர்களின் 30 நபர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு முட நீக்கியல் சாதனம் வழங்கி நிவர்த்தி செய்யப்பட்டது. தலா ரூ.600 வீதம் 30 நபர்களுக்கும் ரூ.18 ஆயிரம் செலவிடப்பட்டது.

தசைப் பயிற்சி மூலம் நிவாரணம் அளித்தலின் பொருட்டு 132 நபர்களுக்குத் தசைப் பயிற்சிக்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

**முட நீக்கியல் சாதனம்**

இம்முகாமில் 118 நபர்களுக்கு முட நீக்கியல் சாதனம் வழங்கத் தேர்வு செய்யப்பட்டது. 118 நபர்களுக்கு முட நீக்கியல் சாதனம் வழங்கும் பொருட்டு தலா ரூ.506 வீதம் மொத்தம் ரூ.73 ஆயிரத்து-370க்கு145 முடநீக்கியல்சாதனங்கள் வழங்கப்பட்டன. இதன் உபயோகம் பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**ஊன்றுகோல்**

இளம்பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்டு நடக்க இயலாத நபர்களுக்கு ஊன்றுகோல் மூலம் நடந்திட வழிவகை செய்யும் பொருட்டு, தலா ரூ.385 வீதம் 42 நபர்களுக்கு ரூ.16 ஆயிரத்து 170 மதிப்புள்ள ஊன்றுகோல்கள் வழங்கப்பட்டுள்ளன்.

**மூன்று சக்கர வண்டி**

இந்நோயினால் பர்திக்கப்பட்டு நடக்கவே இயலாத 30 நபர்களுக்குத் தலா ரூ.2,200 வீதம் ரூ.66 ஆயிரம் மதிப்புள்ள 30 மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 4 நபர்களுக்குத் தலா ரூ.2 ஆயிரம் வீதம் ரூ.8 ஆயிரத்துக்குச் சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன.

**கல்வி உதவித் தொகை**

கல்வி கற்பதற்கு, இந்நோயினால் பாதிக்கப்பட்ட 4 நபர்களுக்கு மைய அரசின் மூலம் கிடைக்கும் கல்வி உதவித் தொகை தலா ரூ.850 வீதம் ரூ.3 ஆயிரத்து 400-ம் தமிழக அரசின் சார்பில் 171 நபர்களுக்கு ரூ.14 ஆயிரத்து 989-ம் வழங்கப்பட்டுள்ளது.

**வங்கிக் கடன்**

இளம்பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்ட 13 நபர்களுக்குத் தலா ரூ.3 ஆயிரம் வீதம் ரூ.39 ஆயிரம் வழங்கப்பட்டது.

**பராமரிப்பு உதவித் தொகை**

இந்நோயினால் பாதிக்கப்பட்டு எந்த ஒரு பணியையும் செய்ய இயலாத 5 நபர்களுக்கு மாதம் ரூ.100 வீதம் 10 ஆண்டிற்கு பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

கே.பி. நல்லதம்பி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்

# குடிப் பழக்கமாம் உயிர்க்கொல்லி!

மது அருந்துவதால் நூற்றுக் கணக்கான மக்கள் தினமும் உயிர் இழக்கின்றனர். மது அருந்துபவர் களைப் பல கொடிய நோய்கள் தாக்கு கின்றன - மனிதனின் ஈரல், நரம்பு தொடர்பான நோய்கள், உயர் இரத்த அழுத்தம், மனநோய் போன்ற வைகளை மட்டுமல்ல; பல சாலை விபத்துக்களையும் மது ஏற்படுத்து கிறது.

உலகத்தில் உள்ள மொத்த வயது வந்தவர்களில் 10 சதவிகிதத்தினர் குடிக்கு அடிமையானவர்களாக இருக்கிறார்கள் என்று உலக சுகா தார நிறுவனம் தெரிவித்துள்ளது.

குடிப்பழக்கத்திற்கு ஆட்பட்டால் ஆக்கத்திறனும், ஊக்கத்திறனும் குறைவதையும் பல விபத்துக்கள் நடைபெறுவதையும், பலபேர் உடல், மன வியாதிகளால் பாதிக்கப்படு வதையும், இதனால் குடிப்பழக்க முடையோர் குடும்பத்தில் பலவிதப் பிரச்சினைகள் எழுவதையும் நாம் காண்கிறோம்.

எத்தில்-ஆல்கஹால் (Ethyl Alcohol)எல்லா வகை மதுபானம் தயாரிப்பிலும் முக்கியப் பொரு ளாகும்.

இது - அமெரிக்காவில் தயாரிக் கப்படும் விஸ்கியில் (Whisky) 51.5 சதவிகிதமும், இந்தியத் தயாரிப்பு களான ரம் (Rum), ஜின் (Gin) மற்றும் விஸ்கியில் 42.8 சதவிகித மும், ஸ்காட்ச் விஸ்கியில் (Scotch Whisky) 62 சதவிகிதமும், கோக் நாக் பிராந்தியில் (Cognac Brandy) 70 சதவிகிதமும், ஒயினில் (Wine) 10-லிருந்து 15 சதவிகிதமும், பீர் வகைகளில் (Beer) 5-லிருந்து 8 சதவிகிதமும் சேர்க்கப்படுகிறது.

குடிக்கப்படும் மது மாற்றம் ஏதுமின்றி வயிறாலும் (Stomach) சிறு குடலாலும், அப்படியே உறிஞ் சப்படுகிறது. பால் மற்றும் கொழுப் புச் சத்துள்ள உணவுப் பொருட்கள் உட்கொள்வதால் மதுவை உடல் ஏற்றுக் கொள்வதைத் தடுக்கின்றது; தண்ணீர், உறிஞ்சும் தன்மையை ஊக்குவிக்கின்றது. மது அருந்திய ஐந்து நிமிடத்தில் அதன் விளைவும் பாதிப்பும் இரத்தத்தில் தெரிகிறது. அதாவது மது அருந்திய ஐந்து நிமி டத்தில் அது இரத்தத்தில் கலந்து விட்டதற்கான அறிகுறி தென்படு கிறது. அதிக அளவு வீரியத்தன்மை (Concentration) 30-லிருந்து 90 நிமிடத்தில் இரத்தத்தில் தெரிகிறது. இரத்தத்துடன் அது உடலின் பல பாகங்களுக்குச் செல்கிறது.

மதுபானம் அருந்திய சிறிது நேரத்தில் ஒருவிதத் தளர்ச்சி ஏற் படுவது போல ஒரு உணர்வு ஏற் பட்டு, அடக்கி வைக்கப்பட்டிருக் கின்ற ஆற்றல், நல்ல நிலையில் உள்ளோம் என்ற மன நிறைவு மற்றும், நம்பிக்கை போன்றவை சிதைகின்றன.

இந்த உணர்வு வந்த நிலையில், குடிப்பவன் மேலும் மேலும் மது அருந்துவதற்கு உந்தப்படுகிறான். பிறகு அவன் குடிக்கு அடிமை யாகவே ஆகிவிடுகிறான்.

குடித்துப் பழகியவன் எல்லா நேரத்திலும், மதுவின் பாதிப் பிலேயே இருக்க விரும்புகிறான். இவ்வாறு குடிப்பதால் அவனால் மதுவின் அளவைக் குறைக்க இய லாதவனாகி, அதிகரித்துக் கொள்வ தனால் அவனுடைய உடல் மிகவும் பாதிப்படைகிறது.

விளைவு - அவனால் கூர்மை யாகச் சிந்திக்க இயலாமல் போய் விடுகிறது! அவனுடைய செயல்கள் கோவையாக இல்லாமல், போய் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் செயல்படுவதுடன் பேச்சும் தெளி வாக இல்லாமல் உளறத் தொடங்கு கிறான். முகம் வீங்கி அல்லது உப்ப லாகி எப்பொழுதும் வேர்த்துக் கொண்டு கண்கள் சிவந்த நிலையில் பார்வைத் தெளிவின்றிக் காணப் படுகிறான்.

இதற்கு, நம் உடலில் உள்ள மத்திய நரம்பு மண்டலம் (Central Nervous System) தளர்ச்சியடைவதே காரணமாகும். மதுவுக்கு அடிமை யானவர்கள் செயலற்ற திகைப்பு நிலையை அடையலாம்; அல்லது முற்றிலுமாகச் செயலிழந்து போக லாம்; எல்லா உணர்ச்சியும் இழந்த மயக்க நிலையில் மரக்கட்டைபோல் தள்ளப்படலாம்.

வலிப்பு, உயர் இரத்த அழுத்தம் போன்றவை வந்து, உயிருக்கு ஆபத்து ஏற்படவும் வாய்ப்பிருக் கிறது. குடிக்கு ஆளானவர்கள், எப் பொழுதாவது மது அருந்துபவர் களைவிட அளவில் சிறிதே அருந்தி னாலும் அவர்களையும் கொடிய நோய்கள் தாக்கும்.

குடிக்கு ஆட்பட்டவர்கள் மது வின்மேல் மிக அழுத்தமான வெறி கொண்டவர்களாக இருப்பார்கள்.

அமெரிக்காவில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்மூலம் - அகால மரணம் அடைபவர்களில் குடியி னால்தான் இளைஞர்கள் சாவு அதிகம் என அறியப்பட்டுள்ளது.

ஒரு கோடியே 80 இலட்சம் அமெரிக்கர்கள் இப்போது குடிக்கு ஆட்பட்டு அவதிப்படுகிறார்கள் என்று நிபுணர்கள் புள்ளி விவரம் தருகின்றனர்.

அவர்களில் மூன்றில் இரண்டு பேர் ஆண்களாக உள்ளனர். மது




அருந்துவதால், ஆண்களைவிடப் பெண்களுக்குத்தான் அதிகப் பாதிப்பு ஏற்படுகிறது என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள். அதிலும் - சிகிச்சை பெறும் மூன்றில் இரண்டு அமெரிக்கப் பெண்கள் 35 வயதுக்குட்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். The American Council on Alcoholic Problems (ACAP) என்ற அமெரிக்க இயக்கம், மதுபானம் தயாரித்தல், விளம்பரப்படுத்துதல் மற்றும் விற்பனையைக் குறைப்பதற்காக அமைக்கப்பட்டுச் சிறப்புறச் செயலாற்றி வருகிற ஓர் அமைப்பாகும்.

குளிர் காலத்தில் உடலில் வெப்ப மூட்டுவதற்காக என்று கூறிப் பலர் மது அருந்துகிறார்கள்; இது மிகவும் தவறு. ஏனென்றால் உண்மையில் நடப்பது இதற்கு நேர்மாறாக உள்ளது.

பொதுவாக - சீதோஷ்ணநிலை குளிராக இருக்கும்போது உடலில் உள்ள சிறிய இரத்தக் குழாய்கள் (நாளங்கள்) சுருங்கி இரத்த ஓட்டத்தைக் குறைக்கின்றது. இதனால், உடலில் உள்ள வெப்பம் உடலின் மேல்பாகத்திற்கு - அதாவது உடலின் வெளிப்பகுதிக்கு வராமல், உடலில் இருந்து வெளியேறாமல் இருக்கும். மது அருந்தியவுடன் இந்த இரத்தக் குழாய்கள் விரிவடையும். அந்த நிலையில் உடல் சூடாக இருப்பதுபோலவும், உடல் கதகதப்பாக இருப்பது போன்றும் உணர்வு ஏற்படுகிறது. ஆனால், உண்மையில் உடலில் உள்ள வெப்பம் வெளியேறி விடுகிறது. ஆனால் இந்த வெப்பம், உண்மையில் வெளியிலிருந்து உடலுக்கு வரும் வெப்பம் இல்லை, உடலிலிருந்து வெளியேறும் சூடுதான் என்பதை மொடாக் குடியர்கள் அறிய வேண்டும்.

மது அருந்துபவர்கள் குடிக்கு ஆட்படுவதற்கு முன்பாகவே மிக எளிமையான முறையில் அதை நிறுத்தி விடலாம். அதற்குத் தகுந்தாற்போலக் குடும்பச் சூழ்நிலையும், சுற்றுப்புறமும், மதுப்பழக்கத்தை விடுவதற்கான நல்ல எண்ணத்தை ஏற்படுத்துவதற்குத் தக்க நண்பர்களும் அமையவேண்டும்.

மது அருந்துவதில்லை என்று சபதம் எடுத்து, விரதம் போல் பாவித்து மனக்கட்டுப்பாட்டுடன் நிறுத்தலாம். •

நன்றி: 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'
தமிழில்: இரா. இராசசேகரன்.

# வளமான வாழ்வுக்கு

## மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்

அளிக்கும்

# விஜய்

உரங்கள்

விவசாயிகளின் மகிழ்ச்சி, வளமான வாழ்வு இவைகளே எங்களது நோக்கம். நாங்கள் விஜய் உரங்கள், நுண்ணுயிர் உரங்களைத் தயார் செய்கிறோம். உரங்களைத் தயாரித்து விற்பனை செய்வது மட்டுமே எங்கள் குறிக்கோள் இல்லை! "முறையான பயிர்பாதுகாப்பு, சத்துக்களை ஒருங்கிணைத்து அளித்தல், முதலியவற்றை வலியுறுத்தி விவசாயிகளை ஊக்குவித்து புதிய சாகுபடி முறைகளைக் கடைப்பிடிக்கச் செய்கிறோம்".

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம், நீண்ட கால வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம், மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டம் மூலமாக நவீன சாகுபடிக் கருத்துக்களை வலியுறுத்தி விவசாயிகள் முன்னேற்றத்திற்கு செயல்படுகிறோம்.

**விஜய் என்றாலே வெற்றி!**




VIJAY
MADRAS FERTILIZERS

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்**

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்
மணலி, சென்னை 600 068

HTA 8249

# மாயூரம் வேதநாயகம் பிள்ளை



தமிழ் மொழியிலே முதன் முதலாகத் தொடர்கதை - அதுவும் கற்பனையில் எழுதிய பெருமைக் குரியவர் யார் என்று கேட்டால் ''மாயூரம் வேதநாயகம் பிள்ளை'' என்று சட்டென்று சிலர் சொல்லி விடுவார்கள்.

ஆம்; 1876-இல் நகைச்சுவை ததும்ப அவர் எழுதி வெளியிட்ட புதுமைத் தொடர்கதை 'பிரதாப முதலியார் சரித்திரம்'- தான் அது. தமிழில் எழுதப்பட்டு,ஆங்கிலத்திலே மொழி பெயர்க்கப்பட்ட முதலாவது கற்பனைத் தொடர்கதையும் இதுதான்!

அதற்குப் பிறகு 1887-இல் 'சுகுண சுந்தரி சரித்திரம்' எற்றொரு கதையையும் எழுதி வெளியிட்ட வேதநாயகம் பிள்ளை கிறிஸ்துவ மதத் தொடர்பாக அவ்வப்போது தாம் எழுதிய பல இசைப் பாடல் களையும் தொகுத்து - 'சத்தியவேதக் கீர்த்தனை' என்றும் 'தேவதோத்திர மாலை' என்றும் 1889-இல் வெளியிட்டார்.

ஆகவே இவர் வெறும் கதாசிரியர் மட்டுமல்ல; இலக்கண இலக்கியங்களில் தேர்ந்த தமிழறிஞரும் கூட!

**கிறித்தவரான விதம்:**

திரிபுரத்திலிருந்து மதுரைக்குச் செல்லும் வழியில் - அதாவது திருநெல்வலி மாவட்டத்தில் உள்ள குளத்தூர் இவரது பிறப்பிடம்.

சவரிமுத்துப் பிள்ளை - ஆரோக்கிய மரியம்மாள் என்பது இவருடைய பெற்றோர் பெயராகும். 11.10.1826 இவர் பிறந்த நாள்.

வேதநாயகம் பிள்ளையின் முன்னோர்கள் சைவ வேளாள குலத்தினராவர். இவருடைய முப்பாட்டனரான மதுரநாயகம் பிள்ளை என்பவர், தம் ஐம்பதாவது வயதில் 'சூலைப் பிடிப்பு நோய்' என்றோர் கொடிய நோயினால் பெரும் அவதிக்கு ஆளானார்.

உள்ளூர் நாட்டு வைத்தியரின் மருந்துகளாலெல்லாம் அந்நோயைக் குணப்படுத்த முடியவில்லை; ஒரு நாள் நோய்ப் படுக்கையிலிருந்து அவர் கனவில், அவர்களது குல தெய்வமாம் கலிவராயன் என்கிற ஐயனார் தோன்றி 'ஆவூருக்கு வந்துள்ள மருத்துவரை அணுகினால் நோய் நீங்கும்' என்றதாம். அதன் படி -

அப்போது புதுக்கோட்டை அரசைச் சேர்ந்ததாக இருந்த ஆவூருக்குச் சென்றார் மருதநாயகம் பிள்ளை.

ஆவூருக்கு வந்திருந்த கிறித்தவப் பாதிரிமார்கள் மேனாட்டு முறைப்படி அவருக்குச் சிகிச்சையளித்தனர்; நோய் நீங்கிக் குணம் பெற்ற மருதநாயகம் பிள்ளை, அவர்களால் கிறித்தவ மதத்திலே சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்பது வரலாறு.

ஆகவே - அவர்கள் வழி வந்த வேதநாயகம் பிள்ளையும் கிறித்துவர். எனினும் தம் வாழ்நாள் முழுதும் 'எம்மதமும் சம்மதமே'

என்கிற பொது நோக்குடன் நடந்து கொண்டார் இவர்.

**மொழிப் புலமை**

இளமை முதலே நல்ல தமிழறிவு கைவரப்பெற்றிருந்தார் வேதநாயகம் பிள்ளை. பிறகு, திரிசிரபுரம் வழக்கு மன்றத்தில் மொழி பெயர்ப்பாள ராக இருந்த தியாகப் பிள்ளையிடம் ஆங்கிலய கற்று, அம்மொழித் திற மையும் பெற்றார்.

முறைப்படி மரபுக் கவிதைகள் எழுதுமளவுக்கான புலமை வேத நாயகம் பிள்ளைக்கு இருந்தது.

ஒரு நாள் தனது பெரியம் மாளின் மகன் அடைக்கலம் என் பவர் தம் வீட்டுக்கு வந்த போது -

'சீர்பெருகு குளத்தூர்வாழ்
அடைக்கல அண்ணாகருணைத்
தியாக வா, வா!
ஏர்பெருகு நின்சுமுகம்
கண்டுவந்தேன் இன்பமிகும் நீயும்
நானும்
ஓர்உதரம் தனிற்பிறவாத்
தோடமொன்றே, மாமணியும்
ஒளியும் போல
நேர்படவே நிலைநிற்கும்
எந்நாளும் நம்மிருவர் நேசந் தானே!

- என்றோர் அறுசீர் விருத்தம் பாடினார் வேதநாயகம் பிள்ளை; இதுவே இவருடைய முதற்கவிதை எனப்படுகிறது.

தாமே பல நூலும் பயின்று தம் அறிவைப் பெருக்கிக் கொண்டவர் வேதநாயகம் பிள்ளை. அவ்வப் போது பொம்மைக் கல்யாணம், நலங்குப் பாடல், சோபனப் பாடல் முதலானவைகளை இவர் வேடிக்கை யாகப் பாடிக் களித்ததும் உண்டு.

**வேலை கிடைத்தது**

நம் இந்திய நாடு ஆங்கிலேயர் வசமிருந்த காலம் அது. ஆகவே 22-வது வயதில்தான், அரும்பாடு பட்டு திருச்சிராப்பள்ளி நீதிமன்றத் தில் கார்டன் துரை என்பார் மூலம் 'ரிகார்டு கீப்பர்' என்ற வேலையில் அமர்ந்தார் இவர். பிறகு, பாயிலோ துரை என்பவரின் மூலம் தேர்வு பெற்று அதே நீதிமன்றத்தில் மொழி பெயர்ப்பாளர் வேலையில் அமர்ந் தார்.

பகல் முழுவதும் வேலை, மாலை யில் சிலருக்குப் பாடம் சொல்லித் தருதல், இரவில் நூலாராய்ச்சி என நாட்கள் கடந்தன.

ஒரு நாள், வேறொருவர் செய்த பிழை காரணமாக வேதநாயகருக்கு வேலை போய்விட்டது. சிலகாலம் இதனால் தொல்லை துயருக்கு ஆளாக நேர்ந்தது.

பிறகு, கீழ் முறை மன்றத்தில் நீதிபதியாக இருந்த சுவிண்டன் துரை என்பாருடன் பெரிதும் வாதாடி, மீண்டும் அவ்வேலையைப் பெற்றார் வேதநாயகம் பிள்ளை. இதற்குத் துணையாக இருந்தவர், சுவிண்டன் துரைக்குப் பிறகு அப் பதவிக்கு வந்த ஆரிச் துரையாவார்.

**தமிழ்மேல் காதல்**

**இந்தக் கால கட்டத்திலேதான் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் நட்பு இவருக்குக் கிடைத்தது. இந்த நட்பு நெருக்கத் தால் வேதநாயகம் பிள்ளைக்கு இருந்த தமிழ் மொழியின் மீதான காதல் பெரு வளர்ச்சி பெற்றது.**

நாள்தோறும் கவிதைகள் எழுது வதும், மீனாட்சி சுந்தரனாரிடம் அவற்றைக் காட்டி மகிழ்வதும் பொழுதுபோக்காயிற்று.

அவரும் இவரது மொழித் திறத் தைப் பாராட்டிக் கவிதை எழுதி யருளியதுண்டு.

வேதநாயகம் பிள்ளை மீது மீனாட்சி சுந்தரனார் எழுதிய 438 செய்யுட்களைக் கொண்டதோர் தொகுப்பு நூல் - 'குளத்தூர் வேத நாயகம் கோவை' என்றும் 'குளத் தூர்க் கோவை' என்றும் பெயர் பெற்றது; பெரும் புகழ் பெற்றது.

இதற்குப் பிறகு - அவரை, இவர் தம் ஆசானாகவே போற்றி மதிப் பளிக்கலானார்.

**முன்சீப் வேலை**

1856-இல், பதவி உயர்வு பெற எண்ணிய வேதநாயகம் பிள்ளை, முன்சீப் வேலைக்காக மனுச்செய்து கொண்டார். கும்பகோணம் நீதி மன்றத் தலைவராக இருந்த பீச்


**தமிழரசு**
தமிழ்நாடு அரசு ஏடு

சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை) ஆண்டுச் சந்தா ரூ. 24
'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை) அரையாண்டுச் சந்தா ரூ. 12
'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை) ஆண்டுச் சந்தா ரூ. 12

சந்தாத் தொகையை — மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

—உதவி இயக்குநர்
விற்பனை விநியோகம்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

சாம்பு துரை என்பவரே நேர்காணல் தேர்வு அதிகாரியாக வந்தமர்ந்தார்.

நேர்காணலுக்காக - வேத நாயகம் பிள்ளை, (பிற்காலத்தில் சென்னையில் நீதிபதியாக இருந்த முத்துசாமி ஐயர், ரகுநாத ராவ்) உட்பட அறுபது எழுபதுபேர் வந்திருந்தனர்.

பேட்டி முடிவில் மேலே நாம் குறிப்பிட்ட மூவர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பின்னர், தரங்கம்பாடி நீதி மன்றத்தில் காலியாக இருந்த முன்சீப் வேலை (சம்பளம் அறுபது ரூபாய் என்பது நூறு ரூபாயாக உயர்த்தப்பட்டது) நம் வேதநாயகம் பிள்ளைக்கு அளிக்கப்பட்டது.

**நீதிநூல் வெளியீடு**

வேதநாயகம் பிள்ளை பிறகு, *1858* இல் அங்கிருந்து சீர்காழிக்கு மாற்றப்பட்டார். புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் அங்கு வந்து சேர்ந்தார்.

வேதநாயகம் பிள்ளை அவ்வப் போது தாம் எழுதிக் குவித்திருந்த இருநூறு முந்நூறு அறநெறிக் கருத்தமை அரிய கவிதைகளையெல்லாம் அவரிடம் காட்டிச் செப்பனிட்டுக் கொண்டார்.

அவரது சிறப்புப் பாயிரத்தோடு, அத்தொகுப்பானது 'நீதிநூல்' என்ற பெயருடனேயே தனி நூலாக வெளியிடப் பெற்றது.

வேதநாயகம் பிள்ளை கேட்டுக் கொண்டதற்கிணங்க புலவர் மீனாட்சி சுந்தரனாரால் 'சீர்காழிக் கோவை' என்றோர் அறிய நூல் இயற்றப் பெற்றது. அந்நூல் வேதநாயகர் தலைமையில், சீர்காழி கோயிலினுள்ளேயே அரங்கேற்றப்பட ஏற்பாடு நடந்தபோது, கிறிஸ்தவர் இவர் என்பதால் சில சலசலப்பு மூண்டது. பிறகு ஒருவாறாக அமைதியான முறையிலே அவ்விழா நடந்தேறியது.

**வறியோர்க்கு உதவிடல்**

*1860*-இல், வேதநாயகம் பிள்ளை மாயூரத்திற்கு மாற்றப் பட்டார்.

இவர் சென்ற நேரத்தில் அப் பகுதியில் ஏற்பட்ட கடும் வறட்சி நிலை காரணமாக மக்கள் பெரும் அவதிக்கு ஆளாகியிருந்தனர்.



இவரோ, தம்மால் முடிந்த அளவுக்கு, அப்பகுதி மக்களுக்கெல்லாம் பேருதவி புரந்தார். உடை கொடுத்தார்; உணவளித்தார்; ஏழைச் சிறார்களுக்குக் கல்வி கற்றிட உதவி புரிந்தார்.

இதற்கெல்லாம் மேலாக தம் வீட்டருகிலேயே கஞ்சித் தொட்டி ஒன்றும் திறந்து, நாள்தோறும் நூற்றுக்கணக்கான பாதிக்கப்பட்டோர் பசிறாற வகை செய்தார்.

இவ்வாறான நற்பணிகளுக்காகப் பாவலர் கோபால கிருஷ்ண பாரதியார் - 'நீயே புருட மேரு' எனத் தொடங்கும் இசைப் பாடல் ஒன்றை இயற்றிப் பாடி, இதயம் களித்ததும் உண்டு.

**சித்தாந்த சங்கிரகம்**

ஆங்கிலத்திலே இருந்த உயர் நீதிமன்றத் தீர்ப்புகளையும் சில வகைச் சட்ட திட்டங்களையும் புரியாமல் நம்நாட்டுச் சட்டத்துறையினர் பலரும் குழம்பிக் கொண்டிருந்த காலம் அது. இதை உணர்ந்தார் வேதநாயகர்.

ஆகவே - *1862*-இல் முதன் முதலாக - அவற்றுள் முக்கியமானவைகளைத் தமிழில் மொழி பெயர்த்தெழுதி வெளியிட்டார். 'சித்தாந்த சங்கிரகம்' என்ற இந்த நூல் வழக்காடு துறையைச் சேர்ந்த நம் நாட்டோருக்கெல்லாம் நல்ல உறுதுணையாக இருந்து உதவியது.

இதன் பின்னாலேதான் அவ்வகை நூற்கள் பலராலும் எழுதி வெளியிடப்பட்டன.

> • பழமையின் பிடியிலிருந்து பக்குவமாக மக்களை விடுவித்துப் புதுமையின் சோபிதத்தைக் காட்டிப் புத்துலகு அமைக்கவேண்டும் வாலிபர்கள்!
>
> —அறிஞர் அண்ணா

மகளிர் கல்வி, பெண்கள் முன்னேற்றம் பற்றியெல்லாம் மிகுந்த பேரவாக் கொண்டிருந்தார் பிள்ளையவர்கள்; இதன் காரணமாக *1869*-இல், உரைநடையும் கவிதையும் கலந்த 'பெண்மதி மாலை' என்ற பெருமைக்குரிய நூலொன்றை எழுதி வெளியிட்டுப் புகழ் பெற்றார்.

**வேலையை விட்டு விலகுதல்**

*1872*-இல், தஞ்சை மாவட்ட நீதிமன்றத் தலைவராக இருந்த நெல்சன் துரைக்கும் நமது வேதநாயகம் பிள்ளை அவர்களுக்கும் இடையே சில பொறாமையாளர்களால், சரியான உறவு இல்லாத நிலை ஏற்பட்டது.

இதனாலும், முதுமை காரணமாக அடிக்கடி நேர்ந்த உடல் நலிவினாலும் வேலையை விட்டு விலகிக் கொண்டார் வேதநாயகம் பிள்ளை; மாதம் நூறு ரூபாய் ஒய்வூதியமாக வழங்கப்பட்டது.

இதன் பின்னாலே, இவருடைய வாழ்நாள் படிப்பதிலும் எழுதுவதிலும் இனிது கழிந்திடலாயிற்று. அதற்கடுத்த ஆண்டே - திருவருளந்தாதி, திருவருள் மாலை, தேவமாதா அந்தாதி போன்ற நூற்களை எழுதி வெளியிட்டார் வேதநாயகனார்.

> • அறிவுத்தாய் பெற்றெடுத்த அருமைக் குழந்தைகளே சுதந்திரம் - விடுதலை - உரிமை ஆகிய அனைத்தும்!
>
> —இங்கர்சால்

## நீர்

இருக்கும் வளங்களைச் சுரண்டி விட்டால் வருங்காலச் சந்ததியினருக்கும், சுற்றுச் சூழலுக்கும் பிரச்சினைகள் ஏற்படும், நிலத்தடி நீரைத் திட்டமிட்ட முறையில் பயன்படுத்தினால்தான், தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படும் சமயங்களில் அதைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

அறிவியல் முறைப்படி நிலத்தடி நீரினைக் குறிப்பிட்ட காலங்களுக்கு மறு ஆய்வு செய்யவேண்டும். நமக்குக் கிடைக்கக்கூடிய நிலத்தடி நீரின் வளம், உலகில் உள்ள ஆறுகள், ஏரிகள், அணைக்கட்டுகள், உள்நாட்டுக் கடல்கள் இவற்றின் ஒட்டு மொத்த நீரைக் காட்டிலும் 35 மடங்கு அதிகமாகும்.

நிலத்தடி நீரை அதிகமாகப் பயன்படுத்தினால், உள்நாட்டு, மண்டல, சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தோன்றிவிடும்.

### குழாய்

குடிநீர், நிலவாயு, கச்சா எண்ணெய் முதலியவற்றை சேதாரமின்றியும், மாசபடாமலும் எடுத்துச் செல்ல குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

கி.மு.5000-வது ஆண்டில் சீனர்கள் மூங்கில் மற்றும் களிமண் குழாய்களைப் பயன்படுத்தினார் என நம்பப்படுகிறது. 2000-ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் இத்தாலியர்கள் நகரங்களுக்கு குடிநீரைக் கொண்டு செல்ல குழாய்களைப் பயன்படுத்தியதற்கான ஆதாரம் இன்றும் காணப்படுகிறது.

அமெரிக்காவில் முதன் முதலாக 1870-இல் இயற்கை வாயுவைக் கொண்டு செல்ல இரும்புக் குழாய் கட்டப்பட்டது. 1974-75-இல் அலாஸ்காவில் எஃகுக் குழாய் பயன்படுத்தப்பட்டது.

இந்தியாவில் கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருட்களைக் கொண்டுசெல்ல 3,473 கி.மீ. நீளத்திற்குக் குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

—நன்றி: 'தூவானம்'

---

நண்பர்களின் வேண்டுகோளின்படி - சென்னையை அடுத்துள்ள பெரிய பாளையத்தில் எழுந்தருளியுள்ள அம்மன் மீதும் அற்புதமான பதிகம் ஒன்று பாடியிருக்கிறார் இவர்.

ஒவ்வோர் கால கட்டத்திலே இவரெழுதிய அல்லது பர்டிய பாடல்களெல்லாம் 1878-இல் 'சர்வ சமய சமரசக் கீர்த்தனை' என்ற பெயரில் வெளியிடப்பட்டது.

தமிழ்ப் புலமை காரணமாகத் திருவாவடுதுறை ஆதீனத்தார்க்கும், நம் வேதநாயகனார்க்கும் நல்ல தொடர்பிருந்து வந்ததும் குறிப்பிடத் தக்கதாகும்.

**வேதநாயகனாரின் நகைச்சுவைப் பாடல்கள்**

வேதநாயகனாரின் பாடல்கள் கருத்தாழமும் நல்ல நயமும் உடையவைகளாக மட்டுமல்ல; சில நேரங்களில் நகைச்சுவை உணர்வு பொங்குவதாகவும் அமைந்ததுண்டு.

ஒரு சமயம், இவர் வைத்திருந்த வண்டிக்கு நண்பரொருவர் ஒரு மாடு வாங்கிக் கொடுத்திருந்தார். நல்ல தீனியோடு கொழுத்துவந்த இந்த மாடு, அந்த வேலைக்கும் உதவாததாக இருந்தது.

அந்த மாட்டைப் பற்றி வேதநாயகனார் ஒரு பாட்டே எழுதினார். பாடலில் எவ்வளவு நகைச்சுவை நயம் பொங்குகிறது பாருங்களேன்.

'இட்டமுடன் முதலியார்
வாங்கிவந்த காளைதினம்
இருபோர் தின்னும்;
சட்டமுடன் கொள்ளுண்ணும்
புல்லுண்ணும் அதைப்பண்டி
தன்னிற் பூட்டக்
கிட்டவரின் முட்டவரும்
தொட்டவர்மே லேகழியும் கீழே வீழும்
எட்டாள்கள் தூக்கிடினும்
தடிகொண்டு தாக்கிடினும்
எழுந்தி ராதே!'

**விடுதலை வேட்கை**

முன்சீப் வேலையை விட்ட பிறகு மாயூரம் (மயிலாடுதுறை) நகரவைத் தலைவராகவும் சில காலம் இருந்தார். வேதநாயகனார்.

எம்.ஏ.,பி.எல்., கற்றுத் தேர்ந்து திருநெல்வேலி வண்ணாரப் பேட்டையில் முன்பு வழக்குரைஞராகப் பணியாற்றிய போது இந்திய விடுதலை வேட்கை தொடர்பான சில பாடல்களை இவர் எழுதியதுண்டு

'பொற்பலகை மீதிவர்ந்து
பொம்மென் றளிமுரல
எற்பூ இடறி
எழிலார் வளம் சிதைத்துச்
சொற்புலவோர் வாழ்த்தும்
சுதந்திரைபோர் நாம்பாடி
விற்புருவம் வேர்வையெழ
ஆடாமோ ஊஞ்சல்,
விருப்பளிக்கு மாபாடி
ஆடாமோ ஊஞ்சல்!'

- என்ற பாடல் மட்டுமல்ல; தேவாரத்தின் பழைய திருத்தொண்டத் தொகைபோல, இவர் ஒரு புதிய திருத்தொண்டத் தொகையும் விடுதலை வேட்கையுடன் எழுதியுள்ளார்.

'தில்லைவாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக்
குயவனார்க் கடியேன்...'

- என்றெல்லாம் அது தொடங்குகிறதென்றால் -

'தன்னுயிரைப் பிறர்க்களித்த
தாதாபாய்க் கடியேன்...'

- என்று இது தொடங்கியுள்ளது. 'பாரத மாதாவினுக்கும் அடியேன்' என்றெல்லாம் தம்மைக் குறித்தும் அதில் சொல்லிக் கொள்ளுகிறார் வேதநாயகர்.

'நெல்லைச் சிறுவன்' என்று அதில் தன்னைப்பற்றி இவர் அடக்கத்தோடு எழுதியிருப்பதும் நினைவு கூரத் தக்கது.

அந்நாளில் - பாவலர் பாரதியாருக்கும், நாவலர் பாதியாருக்கும், மிக நெருங்கிய நட்பினராகவும் இருந்தவர் வேதநாயகம் பிள்ளை.

**கடைசிக் காலம்**

முதுமைக் காலத்தே 'அதைப்பு நோய்' கண்டு பெரும் அல்லலுக்கு ஆளானார் இவர்.

நாட்டு வைத்தியம், ஆங்கில மருத்துவம் எனப் பலவகை மருத்துவங்களும் மேற்கொள்ளப்பட்டன; பயனில்லை.

21.6.1886 அன்று, நமது பலதுறை அறிஞராம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் இயற்கை எய்தினார்.

- பி.எல். ராஜேந்திரன்.

# சென்னையில்

# அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழா!

அண்ணல் காந்தியடிகளின் 124-வது பிறந்த நாள் விழா, சென்னையில் உள்ள காந்தி மண்டபத்தில், 2.10.92 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பீஷ்ம நாராயண்சிங் அவர்கள் பங்கேற்ற இவ்விழாவிற்கு மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் டாக்டர் செ.அரங்கநாயகம், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் புலவர் திருமதி ஆர். இந்திரகுமாரி, சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம், திருக்குறளார் வீ.முனிசாமி ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை மூலம் நடத்தப்பட்ட இவ்விழாவில், இயக்குநர் திரு. க.கணேசன் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். விழா முடிவில் துணை இயக்குநர் திரு. இர. அண்ணாதுரை அவர்கள் நன்றி கூறினார்.

விழா முடிவில் செல்வி ஸ்ரீநிதி ரங்கராஜனின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது; அதைத் தொடர்ந்து 'காந்தி' திரைப்படம் திரையிடப் பட்டது.



விழா மேடையின் ஒருபுறம் காந்தி அடிகளின் முழு உருவப் படமும், இன்னொருபுறம் அவர் துணைவியார் கஸ்தூரிபா அம்மையார் முழு உருவப்படமும் வைக்கப்பட்டிருந்தது. வருகைதந்த பிரமுகர்களுக்கெல்லாம் கதராடை அணிவித்துக் கவுரவிக்கப்பட்டது.

**வரவேற்புரை:**

செய்தித் துறை இயக்குநர் அவர்கள் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:—

இன்று காலை முதலே தமிழக அரசு அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடி வருகிறது; 1947-ஆம் ஆண்டுக்கு முன்பு, மக்கள் எழுத்தறிவோ கல்வி அறிவோ போதுமான அளவுக்குப் பெறாதிருந்த நிலையிலும் அவர்களுக்குச் சத்தியம், உண்மை, தியாகம் ஆகியவற்றைக் கற்பித்து பிரிட்டிஷ் அரசுக்கு எதிராகச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடச் செய்து வெற்றி பெற்றவர், காந்தியடிகள். 'வெள்ளையனே வெளியேறு, இயக்கப் பொன் விழா ஆண்டில், விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கெல்லாம் பல்வேறு சலுகைகளை வழங்கிப் பெருமை கொண்டவர் நமது தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களாவர்.

**திருக்குறளார்:**

தம்முடைய வாழ்த்துரையில் திருக்குறளார் வீ.முனிசாமி அவர்கள் பேசியதாவது:

''இந்திய நாட்டுக்கே விடுதலை வாங்கித் தந்த பெருமையாளரான மகாத்மா காந்தியடிகள் உயர்ந்த பண்புகளை இந்நாட்டில் விதைத்தவரும் ஆவார். தென்னாட்டில் எப்படி பெரியார் தோன்றியிராவிட்டால் அண்ணா இருந்த இடமும், நம் நாவலர் இருந்த இடமும் தெரியாமல் போயிருக்குமோ- அதேபோல் வடநாட்டில் காந்தியார் தோன்றியிராவிட்டால் நேரு, படேல், நம் காமராசர் போன்ற பெரும்பெரும் தலைவர்களையெல்

லாம் நாம் அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் போயிருக்கும்''.

**சிலம்புச் செல்வர்**

சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள் வாழ்த்துரையாவது:

''நம் நாட்டில் கட்சி வேறுபாடின்றி ஒருவருக்கு விழா எடுக்கப்படுகிறதென்றால், அது காந்தியாருக்குத்தான். இந்திய நாட்டின் ஜனாதிபதியாக ஒரு தாழ்த்தப்பட்டவரை ஆக்கவேண்டும் என்று ஆசைப்பட்டார் காந்தியடிகள். திருமதி இந்திராகாந்தி அவர்கள், அதை நிறைவேற்றி ஜெகஜீவன்ராம் அவர்களை ஜனாதிபதியாக்க முயன்று-அதனாலேயே காங்கிரஸ் பிளவுபட்டது. அந்தக் கனவு இப்போதுதான் நிறைவேறியிருக்கிறது; தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஒருவர் இந்நாட்டின் உதவி ஜனாதிபதி ஆக்கப்பட்டிருக்கிறார். பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்கவேண்டிய பொறுப்பு உங்கள் எல்லோரது கைகளிலும் இருக்கிறது''.

**சமூக நலத்துறை அமைச்சர்:**

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் புலவர் திருமதி ஆர்.இந்திர குமாரி அவர்கள் பேசியதாவது:

''அண்ணல் காந்தியடிகள் தமது ஆன்மீக பலத்தாலும், அமைதி வழியாலும், அறநெறிப் போக்காலும் வல்லரசுகளையே வலிமையிழக்கச் செய்தவராவார். ஆணுக்குப் பெண் தாழ்வில்லை என்பது அவரது முக்கியமான கொள்கைகளில் ஒன்றாகும். காந்தியடிகளின் அடியொற்றி ஆட்சி நடத்திவரும் நமது முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள், மகளிர் முன்னேற்றம் கருதி, அவர் கனவை நனவாக்கும் விதத்தில் ஆற்றிவரும் மகத்தான பணிகளை நாடு காண்கிறது. இந்த நல்லரசு நிலைபெற-காந்தியடிகள் பிறந்த இந்த நாளில் நாமெல்லாம் சங்கல்பம் ஏற்க வேண்டும்.

**கல்வி அமைச்சர்:**

மாண்புமிகு கல்வியமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''சோப்பு, சீப்பு, கண்ணாடி விற்க இந்த நாட்டுக்கு வந்த வெள்ளையரின் கீழ் நாம் அடிமைப்பட்டோம்; அவர்களை எதிர்த்து நின்று வெல்ல, நாமெல்லாம் ஒன்றுபட்டு நிற்க மூல காரணமானவர் காந்தியடிகளாவார். நாளடைவில், இன்று இந்தியாவெங்கும் பல்வேறு சூழல்களில் அந்த ஒற்றுமை உணர்வு கெட்டிருப்பதைக் காண்கிறோம். அந்த நிலை மாறி, நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்திட இந்த நாளில் நாமெல்லாம் உறுதி பூணவேண்டும்''

**நிதி அமைச்சர்:**

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது தலைமையுரையில் தெரிவித்ததாவது:

''வீழ்ச்சியுற்ற இந்தியருக்கெல்லாம் எழுச்சியூட்டியவர் காந்தி அடிகளாவார். எப்படி வாழ்வது என்றெண்ணும் இளைஞர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் அவர். இன்றைய தினம் இந்தியா மிகப்பெரிய ஜனநாயக நாடாக விளங்குகிறது என்றால் அவரே இதற்குக் காரணம். இந்தியாவில் அன்றிருந்த கட்டுப்பாட்டு உணர்வுதான் இப்போது வேண்டப்படுகிறது. மற்றவர்கள், அவர்கள் தவறை உணரச் செய்யத் தனது உடலை, உள்ளத்தைத்தான் காந்தியார் வருத்திக் கொண்டாரே தவிர, மற்றவர்களைத் துன்புறுத்த அவர் எண்ணியதில்லை. ஒவ்வொருவருக்கும் நாணயம் வேண்டும்; நேர்மை வேண்டும்; எழுச்சி வேண்டும் என்பதை நமக்குணர்த்தினார் காந்தியார்; நாமெல்லாம் அதை உணர்ந்து நடந்து கொண்டால் - கடமை ஆற்றினால் வறுமை நீங்கும்-ஏழ்மை அகலும்''.

**மேதகு தமிழக ஆளுநர்:**

மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் தமது விழாப் பேருரையில் குறிப்பிட்டதாவது:

''உத்தமமான மனிதர்கள் ஒரு நாட்டுக்கு மட்டுமல்ல; உலகத்திற்கே சொந்தமானவர்கள்; அந்த வகையில் திகழும் காந்தியார் ஆயுத பலத்தைக் காட்டிலும் ஆன்ம பலம் உயர்ந்தது என்பதை உலகம் உணரச் செய்தவர்; அமைதிப் புரட்சியின்



• பசியென்ற நெருப்பானது, ஏழைகள் தேகத்திலும் பற்றி எரிகின்றபோது— ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் ஜீவகாருண்யம்.

—இராமலிங்க அடிகள்



## தமிழ்நாட்டில் உலக வங்கி உதவியுடன் ஒருங்கிணைந்த விவசாய மேம்பாட்டுத் திட்டம்

**தமிழ்நாட்டில் உலக வங்கி உதவியுடன் ரூ.329 கோடி செலவில் ஒருங்கிணைந்த விவசாய மேம்பாட்டுத் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. 5 ஆண்டுகளில் நிறைவேற்றப்படவிருக்கும் இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதி உதவியை வழங்க, மத்திய அரசு தயாராக இருப்பதாக மத்திய விவசாயத்துறை இணை அமைச்சர் திரு. கே.சி. வெங்கா அவர்கள் சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.**

**1991-'92-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்திற்குக் கடந்த ஆண்டு ரூ.21.96 கோடியும் நடப்பு ஆண்டில் ரூ.35.89 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், பாசன வசதி செய்தல், குடிநீர் வசதி வழங்குதல், சாலை வசதி செய்தல், தோட்டக் கலை மற்றும் கால்நடை வளர்ப்புத் திட்டங்களை மேற்கொள்ளுதல், விவசாய ஆய்வுப் பணிகள் போன்ற கிராமப்புறங்களையே மாற்றி அமைக்கும் பல்வேறுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளின் உதவியுடன் ரூ.13.65 கோடி செலவில் ஆடு வளர்க்கும் திட்டம், தமிழகத்தில் அமல்படுத்தப்படும். இந்த திட்டத்தின்கீழ் சிறந்த கலப்பின ஆடு வகைகளை விருத்தி செய்தல் உள்ளிட்ட பல திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.**

**இதுதவிர, இந்திய விவசாய ஆராய்ச்சி மையத்தின் மூலம் தமிழ்நாட்டில் பயிர் அறிவியல், தோட்டப் பயிர்களை வளர்த்தல், விவசாயப் பொறியியல், விவசாயக் கல்வி, ஆய்வுகள் போன்ற 56 திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த விவசாய மேம்பாட்டுத் திட்டம் எந்த் அளவுக்கு அமல்படுத்தப்படுகிறது என்பதைக் கண்காணிக்க மாண்புமிகு தமிழக விவசாயத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் தலைமையில் குழு அமைக்கப்பட்டிருப்பதாகவும் மாண்புமிகு மத்திய விவசாயத் துறை அமைச்சர் தெரிவித்தார்.**

அறிவிப்பாளர் அவர். சமூக, பொருளாதார மாற்றத்தை மக்களிடையே ஏற்படுத்தப் பாடுபட்ட அவர், உண்மையான ஜனநாயகவாதி என்ற சொல்லுக்குப் பொருளாக விளங்கிய வருமாவார். அந்த மகானின் பிறந்த நாளைக் கொண்டாடும் நாம்- அவரது உயர்ந்த இலட்சியத்திற்காக நம்மை நாமே ஒப்படைத்துக் கொள்ள முன்வர வேண்டும்''.

**பரிசளிப்புகள்:**

விழா முடிவில், மேதகு ஆளுநர் அவர்கள்- இந்திய குஷ்ட நிவாரண சங்கத்தின் தமிழ்நாடு கிளையின் கவுரவச் செயலாளர் டாக்டர் எஸ்.என். கணபதி அவர்களின் சேவையைப் பாராட்டி நினைவுப் பரிசு வழங்கினார்.

அண்ணல் காந்தியடிகளைப் பற்றிய கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற மாநிலக் கல்லூரி மாணவி ஜி.ரேவதி, இரண்டாம் பரிசு பெற்ற காயிதேமில்லத் மகளிர் கல்லூரி மாணவி எஸ். ஸ்ரீதேவி, மூன்றாம் பரிசு பெற்ற புதுக்கல்லூரி மாணவன் சாதிக் பாட்சா ஆகியோருக்கும்- பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ற வள்ளல் அழகர்சாமி மேனிலைப் பள்ளி மாணவன் டி. இராஜசேகரன், இரண்டாம் பரிசு பெற்ற சேவா சதன் மாணவி ஆர். இலட்சுமி தேவி, மூன்றாம் பரிசு பெற்ற சாரதா வித்யாலயா மாணவி எம். சண்முகப் பிரியா ஆகியோருக்கும் மேதகு ஆளுநர் அவர்கள் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார்.

**மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக உதவிகள்:**

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மூலம், ஆதி திராவிடர்கள் 20 பேருக்கு ரூ.43,19,351- இருபது அம்சத் திட்டப் பயிற்சியாளர் ஐவருக்கு ரூ.7,500 பெறுமானமுள்ள இஸ்திரிப் பெட்டிகள்- எட்டுப் பேருக்கு ரூ.10,608-48 பெறுமானமுள்ள தையல் எந்திரங்கள் - ஊனமுற்றோர் மறுவாழ்வு இல்லத்தைச் சேர்ந்த 7 பேருக்கு ரூ.6,075 விதவைப் பெண்கள் எண்மரின் மறு வாழ்வு நிதி ரூ.24,000 ஒருவருக்கு விபத்து நிவாரண நிதி ரூ.10,000 - முதிய விதவைகள் ஓய்வூதியமாக 130 பேருக்கு ரூ.9,750 ஆகிய நலத்திட்ட உதவிகளும் மேதகு ஆளுநர் அவர்களால் வழங்கப் பட்டன.

அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளையொட்டி, காந்தி மண்டபம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

**— நிகழ்ச்சித் தொகுப்பு: பி.எல்.ஆர்.**



# உலகச் சுற்றுலா நாள்

தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் சார்பில் உலகச் சுற்றுலா நாள் விழா 27.9.1992 அன்று மாலை மாமல்லபுரத்தில் மிகச் சிறப்பாக் நடைபெற்றது.

இந்த விழாவின்போது மாமல்ல புரம் கலைச் சிற்பங்களை இரவு நேரத்திலும் கண்டுகளிப்பதற்கு வசதி யாக அமைக்கப்பட்ட சிறப்பு மின் ஒளித் திட்டத்தையும், வார இறுதிக் கலை நிகழ்ச்சியையும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

விழாவிற்கு வந்திருந்தவர்களை, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. ஞான தேசிகன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

விழாவில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி பி. சிவகாமி, இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில், அனைத்துச் சுற்றுலாத் தலங்களிலும் சுற்றுலாத் தினம் கொண்டாடப் படுவதாகக் கூறினார். 1971-இல் ஐந்து உணவு மற்றும் தங்கும் விடுதி களுடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், கடந்த ஆண்டு (1991-92) ரூ.33 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. இந்த ஆண்டில் இது 41 இலட்ச மாக உயரக்கூடுமென்றார். கடந்த ஆண்டில் 1.11 கோடி சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டுக்கு வருகை செய்ததாகவும் அவர் கூறினார்.

செய்தி சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி கி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்குத் தலைமை யேற்றுப் பேசுகையில், மாமல்லபுரத் தில் 1992 செப்டம்பர் மாதம் முதல், வார இறுதியில் நாட்டிய நிகழ்ச்சி நடத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி வழங்கியிருப்பதாகக் கூறி னார். தற்சமயம் மாமல்லபுரத்திலுள்ள நான்கு கலைச் சிற்பங்கங்களுக்கு மின் ஒளி வசதி செய்யப்பட்டிருப்ப தாகவும், மற்ற கலைச் சிற்பங் களுக்குப் படிப்படியாக மின் ஒளி வசதி செய்யத் திட்டமிடப்பட்டிருப்ப தாகவும் தெரிவித்தார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாமல்லபுரத் தைத் தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு சுற்றுலாத் தலமாக ஆக்கியிருப்ப தால், மாமல்லபுரத்தில் போக்கு வரத்து வசதியை மேம்படுத்த முட்டுக் காடு முதல் பாண்டிச்சேரி வரை யிலான மாமல்லபுரச் சாலையை நான்கு வழிப்பாதையாக மாற்றித்தர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

விழாவில் சிறப்பு விருந்தின ராகக் கலந்துகொண்டு சிற்பங் களுக்கு ஒளிவிளக்கு ஏற்றிவைத்து மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் பேசுகையில், மாமல்ல புரம் பழங்காலச் சிற்பங்களை உள்ளடக்கிய ஒரு சிறந்த சுற்றுலாத் தலம். உலகின் பல பகுதிகளிலிருந் தும் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை தருவதால், இங்குள்ள கலைச் சிற்பங்களுக்கு ரூ.10 இலட்சம் செலவில் மின் விளக்குகள் பொருத் தப்பட்டுள்ளன. இவற்றைப் பரா மரிக்க பேரூராட்சியிடம் ஒப்படைக் கப்பட்டிருந்தாலும், இந்த மின் விளக்குகள் நிரந்தரமாக எரிய வழிவகை செய்யப்படும் என்றார்.

மாமல்லபுரம் வழியாகச் செல் லும் சென்னை-கன்னியாகுமரி வரை யிலான கிழக்குக் கடற்கரைச் சாலை ரூ.56 கோடி செலவில் மேம்படுத் தப்படுவதாகவும் இந்தப் பணி திட்ட மிட்டப்படி 4 ஆண்டுக் காலங்களில் நிறைவேற்றப்படும் என்றும் கூறினார். நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு ரூ.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு, 187 கி.மீ. தூர சாலை மேம்பாட்டுத் திட்டப்பணி நடை பெற்று வருவதாகவும் மாண்புமிகு அமைச்சர் தெரிவிக்கார்.

சுற்றுலாத்துறை இயக்குநர் திரு. சு. மச்சேந்திரநாதன் இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை நிகழ்த்துகை யில், இவ்வாண்டு செப்டம்பர் திங்கள் முதல் ஒவ்வொரு சனிக் கிழமையும் மாமல்லபுரத்தில் நாட்டிய நிகழ்ச்சி நடைபெறுமென்றும், 1993 சனவரி திங்கள் முதல் ஒவ்வொரு வாரமும் மூன்று நாட்கள் (வெள்ளி, சனி, ஞாயிறு) இந்த நாட்டிய நிகழ்ச் சியை நடத்தத் திட்டமிடப்பட்டிருப்ப தாகவும் கூறினார்.

விழாவில் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்களும், அயல் நாட்டு, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும், ஏராளமான பொது மக்களும், பள்ளி மாணவ மாணவி களும் கலந்து கொண்டனர்.

விழா தொடங்கும் முன் மாண்பு மிகு அமைச்சர் அவர்கள், கடற் கரைக் கோயில் சென்று அங்கு அமைக்கப்பட்டுள்ள வண்ண மின் விளக்குகளைப் பொத்தானை அழுத் தித் தொடங்கிவைத்தார்.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
ஜே. சந்திரன்.



# நாடகக் குழுவினர் அரசு பஸ்களில் 50 சதவிகித கட்டணத்தில் பயணம் செய்யலாம்!

## மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பு

''ஒய்.ஜி.பி. நடிப்பு மற்றும் நுண்கலைப் பயிற்சிப் பள்ளித் தொடக்க விழாவும், ''யுனைடெட் அமெச்சூர் ஆர்ட்டிஸ்ட்'' (யு.ஏ.ஏ.) என்ற நாடகக் குழுவின் 40-வது ஆண்டு விழாவும் சென்னை 'மியூசிக் அகடமி'யில் 30.9.92 அன்று சிறப்புற நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி நடிப்புப் பயிற்சிப் பள்ளியைத் தொடங்கிவைத்தார்.

ஒய்.ஜி.பி. நடிப்புப் பள்ளிக்குத் தமது சொந்தப் பணத்தில் இருந்து 2 இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்குவதாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தார்.

விழா மலரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, தொழில் அதிபர் நல்லி குப்புசாமி அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டார்.

இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பேசியதாவது:-

''ஒய்.ஜி. பார்த்தசாரதி அவர்களையும், அவரது மனைவி ராஜலட்சுமி மற்றும் இந்த ''யுனைடெட் அமெச்சூர் ஆர்ட்டிஸ்ட்'' குழுவில் தொடர்பு உள்ள மற்றவர்களையும் சிறு வயது முதலே எனக்குத் தெரியும்.

எனக்கு 4 வயது இருக்கும்போது எங்களது குடும்பம் சென்னையில் குடியேறியது. அப்போது, 'ஒய்.ஜி.பி.' அவர்கள் எங்களது நெருங்கிய குடும்ப நண்பர் ஆனார்.

''யுனைடெட் அமெச்சூர் ஆர்ட்டிஸ்ட்'' சபாவின் நாடகங்களில் எனது தாயார் மற்றும் அத்தை ஆகியோர் நடிப்பார்கள். நானும் எனது சகோதரரும் ஒய்.ஜி.பி. வீட்டில் நீண்டநேரம் இருந்து பொழுதைக் கழித்து இருக்கிறோம்.

நான் பள்ளி மாணவியாக இருந்த போது, 'ஒய்.ஜி.பி.' அவர்களின் மனைவி இன்னொரு தாய் போன்று இருந்தார்கள். அவர்கள் எனக்கு நிறைய அறிவுரைகளும், படிப்பில் வழிகாட்டுதலும் செய்தார். எனது வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு அவர் செய்துள்ள உதவிகளுக்கு நான் மிகவும் நன்றி சொல்லக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

நாடகம், என்பது அறிவு, ஒழுக்கம் நிரம்பிய ஒரு கலை. வாழ்க்கையே ஒரு நாடகம். நாம் எல்லோரும் அதில் நடித்துக் கொண்டு இருக்கிறோம்.

ஆனால், நாடக நடிகர்கள் மிகவும் கடினமாக உழைக்க வேண்டியிருக்கிறது. வாழ்க்கையில் அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். அதிலும் நகைச்சுவை நாடக நடிகர்கள் பொறுப்புகளைச் சவாலுடன் சந்திக்க வேண்டியவர்கள்.

சினிமா, டெலிவிசன் மற்றும் வீடியோ வளர்ச்சியினால் இப்போது நாடகங் களுக்கு மவுசு குறைந்து வருகிறது.

மக்கள் இப்போது வீட்டிலேயே இருந்து கொண்டு டெலிவிசனில் சினிமா பார்ப்பதையே விரும்புகிறார்கள். பணத்தையும், நேரத்தையும் மிச்சப்படுத்த விரும்புகிறார்கள். அத்துடன் வீட்டில் தனிமையில் இருந்து நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிக்கவே ஆசைப்படுகிறார்கள். மக்கள் வீட்டை விட்டு வெளியே வர விரும்பாவிட்டால், நாடகக் கலை அழிந்துவிடும். எனவே நாடகக் கலை மிகப் பெரிய சவாலை எதிர்நோக்கி உள்ளது.

**பாதுகாக்க வேண்டும்**

நாடகம் ஒரு பழமையான கலை. அதைப் பாதுகாக்க வேண்டும். என்ன விலை கொடுத்தாவது நாடகக் கலையைக் காப்பாற்ற வேண்டும்.

கலையை நேசிப்பவர்கள் அனைவரும் இதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே சமயம் நாடகத் துறையில் சம்பந்தப்பட்ட எழுத்

தாளர்கள், நடிகர்கள், இயக்குநர்கள் நாடகங்கள் தரமுடையதாக, மக்களுக்குப் பொழுது போக்கு அம்சம் நிறைந்ததாக, அவர்கள் கொடுக்கும் பணத்துக்குப் பயனுள்ளதாகப் பார்த்துக் கொள்ளவேண்டும். 'யு.ஏ.ஏ.' நாடகக் குழுவினர் தரமான நாடகங்களைத் தயாரித்து வழங்குகிறார்கள். தொடர்ந்து 40 ஆண்டுகளாக நாடகங்களை நடத்திச் சாதனை புரிந்து உள்ளார்கள்.

இந்த நடிப்புப் பள்ளியைத் தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கே நடனமாடிய மதுவந்தியின் நடனத்துக்கு டாக்டர் பத்மா சுப்பிரமணியம் பாடல்களைப் பாடினார்.

சர்வதேசப் புகழ் வாய்ந்த டாக்டர் பத்மா சுப்பிரமணியத்தின் நடனத்தைத் தான் நான் கண்டிருக்கிறேன். இன்று இங்கு அவரது பாடல்களைக் கேட்டேன். அற்புதமாக, அழகாகப் பாடினார். அவருக்கு என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**புதிய சலுகைகள்**

நாடகக் குழுவினருக்கு இரண்டு அறிவிப்புகளை இங்கே வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். நாடகக் குழுவினர் அரசாங்கப் போக்குவரத்துக் கழகப் பஸ்களில் பயணம் செய்ய 50 சத விகித சலுகைக் கட்டணம் வழங்கப்படும்; 'இதற்கான உத்தரவை இன்று பிறப்பித்துள்ளேன்.

நாடகக் குழுவினர் சென்னை கலைவாணர் அரங்கில் நாடகம் நடத்துவதற்கு 50 சதவிகிதக் கட்டணச் சலுகை அளிக்கவும் உத்தரவிட்டு இருக்கிறேன்.

திருமதி ஒய்.ஜி.பார்த்தசாரதி அவர்கள் இங்கே பேசும்போது, நலிந்த கலைஞர்களுக்கு வழங்கப்படும் 'பென்சன்' தொகையில் 3 ஆண்டுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும் என்று இருக்கிறது. அதை மாற்றி ஆயுள் முழுவதும் 'பென்சன்' கிடைக்கும் அளவில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்துத் தகுந்த உத்தரவு பிறப்பிப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடங்கப்பட்டு உள்ள நடிப்புப் பயிற்சிப் பள்ளியின் காப்பாளராக இருக்க வேண்டும் என்று என்னைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை முழுமனதுடன் ஏற்றுக் கொள்கிறேன்.

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பேசினார்.

விழாவில் இந்தியன் வங்கித் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், திரு. எம். கோபாலகிருஷ்ணன், இயல், இசை, நாடக மன்றத் தலைவர் திரு. ஆர்.எஸ். மனோகர், தொழில் அதிபர் திரு. டி.டி. வாசு, நகர சபாக்களின் கூட்டமைப்புத் தலைவர், திரு. ஆர். கிருஷ்ணசாமி, திரைப்பட இயக்குநரும் நடிகருமான விசு ஆகியோர் பேசினார்கள்.

நடிகர் ஒய்.ஜி. மகேந்திரன், ஒய்.ஜி. ராஜேந்திரன், பிரியா மூர்த்தி ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார்கள்.

தொடக்கத்தில் திருமதி ஒய்.ஜி. பார்த்தசாரதி அவர்கள் வரவேற்றுப் பேசினார். நடிகர் ஒய்.ஜி. மகேந்திரன் விழா முடிவில் நன்றி கூறினார்.

ஒய்.ஜி.பி. அறக்கட்டளை, யுனைடெட் அமெச்சூர் நாடகக் குழு ஆகியவற்றின் சார்பில் இந்த விழா நடைபெற்றது.

# ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி

**ம**துரை மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 543 நபர்களைத் தேர்ந்தெடுத்து 28.9.92 அன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மதுரையிலிருந்து அரசுச் செலவில் வாகனங்களில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு, அவர்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத்துறைகள் மூலமாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தின்கீழ் 8 பேர்களுக்கும், விதவை மகள் திருமண உதவி 9 பேர்களுக்கும், நலிந்தோர் உதவித் திட்டத்தின்கீழ் 33 நபர்களுக்கு நிதி உதவியும், 6 பேர்களுக்குத் தையல் இயந்திரங்களும், மூன்று சக்கரவண்டிகள் 4 பேர்களுக்கும், காதொலிக் கருவிகள் 5 நபர்களுக்கும், குடும்ப நலத் திட்டத்தை மேற்கொண்டமைக்காக 4 பெண்களுக்குத் தங்கப்பதக்கங்களும் வழங்கப்பட்டன.

மாவட்டத்தில் தொழில் தொடங்க 19 பேர்களுக்கு ரூபாய் 10 இலட்சம் தொழில் முதலீட்டு மானியமும், செம்மறியாடு வளர்க்க 53 நபர்களுக்கு ரூ.3,98,000 மானியத்துடன் கூடிய கடனுதவியும், கறவை மாடுகள் வாங்க 79 பேர்களுக்கு ரூ.57,93,000 கடனுதவியும், பால் பண்ணை அமைக்க 13 பேர்களுக்கு ரூ.6,58,000 மானியத்துடன் கூடிய கடனுதவியும், செயற்கை வைரம் தயாரிக்கும் தொழிலுக்கென 14 பேர்களுக்கு ரூ.61,64,000 கடனுதவியும், தொழிற்கூடங்கள் அமைக்க 7 நபர்களுக்கு ரூ.33,00,000 கடனுதவியும், விசைத்தறி அமைக்க ஒருவருக்கு ரூ.12,50,000 கடனுதவியும், 31 நபர்களுக்குக் குடும்ப நல நிதியாக ரூ.15,80,000-மும், தவணை முறையில் வீடுகள் கட்ட 20 நபர்களுக்கு ரூ.34,93,000 கடனுதவியும், பவர் டில்லர் வாங்க 14 பேர்களுக்கு ரூ.7,76,000 கடனுதவியும், ஆட்டோ ரிக்ஷா வாங்க 10 நபர்களுக்கு ரூ.4,24,000 கடனுதவியும், திராட்சைச் சாகுபடி செய்ய 8 நபர்களுக்கு ரூ.4,21,000 கடனுதவியும், டிராக்டர்கள் வாங்க 18 நபர்களுக்கு ரூ.39,44,000 கடனுதவியும், சொட்டு நீர்ப்பாசனம் மேற்கொள்ள 26 பேர்களுக்கு மானியத்துடன் கூடிய கடனாக ரூ.12,51,000-மும், லாரிகள் வாங்க 5 பேர்களுக்கு ரூ.19,26,000 கடனுதவியும், வேன்கள் வாங்க 5 நபர்களுக்கு ரூ.11,51,000 கடனுதவியும் வழங்கப்பட்டன.

மொத்தம் 543 நபர்களுக்கு ரூ.4,16,27,000 (ரூபாய் நான்கு கோடியே பதினாறு இலட்சத்து இருபத்தேழாயிரம் மட்டும்) பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்கினார். இதில் 292 பேர் பெண்களாவர்.

இதுதவிர, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 8 பேர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்காக ரூ.1,24,000 நிதி உதவியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.




# குடியைக் கெடுக்கும் குடி!

புலவர் தணிகை உலகநாதன்

பிறவியிலே உயர்பிறவி மனித னாவான்;
பெற்றபகுத் தறிவாலே இயற்கை தன்னைத்
திறமையினால் வெல்கின்ற ஆற்றல் கொண்டான்
சிந்தித்துப் பாராமல் மதுவின் பக்கம்
உறவாடிக் குடிப்பதனால் ஊரார் தூற்ற
ஒன்றுக்கும் உதவாத உலுத்த னாவான்
இறகொடிந்த பறவையாய், இன்னல் சூழ்ந்தே
என்றென்றும் தீராத நோய்க்கா ளாவான்!

மலைபோலச் செல்வத்தைக் குவித்திட் டாலும்
மதுவருந்தும் பழக்கத்தைக் கொள்வா னாயின்
நிலைகுலைந்து போய்விடுவான்; பித்த னாகி
நினைவிழந்து மயக்கத்தில் மூழ்கி நிற்பான்
கொலை, களவுக் கஞ்சானாய்த் திரிவான்; அன்புக்
குடும்பத்தைப் பாலைவன மாக்கி வைப்பான்
தலைகால்கண் தெரியாமல் ஆடி ஆடித்
தன்மனைவி மக்கள்தமைத் தவிக்கச் செய்வான்!

'நல்லவனாய் உனைச்சான்றோர் மதிக்க வேண்டின்
நாசத்தை விளைக்கின்ற மதுவை உண்ணேல்'
வல்லவராம் வள்ளுவர்தாம் சொன்ன சொல்லை
மதித்துநடப் பதுதானே மனித வாழ்க்கை?
எல்லையிலாப் புகழ்காந்தி அண்ணல் தாமும்
இழிவுதரும் குடிகுடியைக்கெடுக்கும் என்றார்
தொல்லைதரும் மதுப்பழக்கம் நாட்டில் என்றும்
தோன்றாமல் காப்பதுநம் கடமை யாகும்!

மதுவென்ன உடல்வளர்க்கும் ஊட்டச் சத்தா?
மரணத்தை விலைகொடுத்து வாங்க லாமா?
கதிகெட்டுப் போவோரைக் கண்கூ டாகக்
கண்டிருந்தும் மதுவுண்போர் விலங்கே ஆவர்
எதுவரினும் மதுவருந்தும் மானக் கேட்டை
எவ்விடத்தும் பரவாமல் தடுக்க வேண்டும்
அதிவிரைவில் சான்றோர்கள் முயன்றே நாட்டை
அமைதிப் பூஞ் சோலையென ஆக்க வேண்டும்!



**கடலோரப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி உயர் அலுவலர்களுடன் முதல்வர் ஆலோசனை**

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமை பற்றியும், மாநிலக் கடலோரப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றியும், கடற்படை, கடலோரப் பாதுகாப்புப் படை, காவல்துறை மற்றும் பிற துறைகளைச் சேர்ந்த உயர் அலுவலர்களுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 23.9.'92 அன்று அரசு தலைமைச் செயலகத்தில் ஆலோசனை நடத்தினார். தமிழ்நாட்டில் அண்மையில் நடந்த சில வன்முறைச் சம்பவங்கள் பற்றியும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமை மற்றும் கடலோரப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றியும் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., உள்துறைச் செயலர் திரு. கே. மலைச்சாமி, இ.ஆ.ப., கடற்படை பொறுப்பு அதிகாரி கமாண்டர் திரு. எச்.சஹானி, கடலோரப் பாதுகாப்பு- கிழக்குப் பகுதி கமாண்டர் திரு. ஜே.பி. கார்னேரோ, தமிழக காவல்துறைத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீபால், இ.கா.ப., காவல் துறைத் தலைவர் (புலனாய்வு) திரு. கே.கே. இராஜசேகரன் நாயர், இ.கா.ப., முதல்வரின் செயலர் திரு. எஸ்.ஆர். கருப்பண்ணன், இ.ஆ.ப., சட்டம் ஒழுங்கு கூடுதல் டி.ஜி.பி. திரு. தேவாரம் இ.கா.ப. மற்றும் சென்னை நகரக் காவல்துறை ஆணையர் திரு. ஆர். இராஜகோபாலன், இ.கா.ப. ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

## பார்த்தோம் படித்தோம்:

**1.9.92** இதழில், 'நம்மை வாழ வைக்கும் பூண்டு' எனும் கட்டுரை, மிகவும் பயனுள்ள நமது பண்டையத் தமிழர் மருத்துவத்தை விளக்கும் அருமையான கட்டுரை.

—இரா.மாறன்
சாலியமங்கலம்
(தஞ்சை மாவட்டம்)

இந்தியாவின் ஒன்பதாவது குடியரசுத் துணைத் தலைவர் திரு. கே.ஆர். நாராயணன் அவர்களைப் பற்றிய இனிய அறிமுகம் அருமை. திரு.வி.க. பற்றிய கட்டுரையும் பயனுள்ளதாக இருந்தது.

—ப.முருகேசபாண்டியன்,
கரப்பாடி (கோவை மாவட்டம்)

அறிவியல் சம்பந்தமான கட்டுரைகள், தேசபக்தர்களின் வாழ்க்கை வரலாறுகள் இடம்பெற்றால், இளம் தலைமுறையினருக்கும் பெரிதும் பயன்படும்.

—கே. அனந்தநாராயணன்
கன்னியாகுமரி

'நம்மை வாழ வைக்கும் பூண்டு' போன்ற மருத்துவக் கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட வேண்டுகிறேன்.

—பி. நடராஜன்
போரூர், சென்னை-116.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 48-வது பிறந்த நாள் நினைவாக வெளியிட்ட கட்டுரை அருமை.

—ச. பொன்னுசாமி,
கு. அய்யம்பாளையம்,
(சேலம் மாவட்டம்)

கோழிப்பண்ணை, எண்ணெய்ப் பனை ஆமணக்கு, மாம்பழம் போன்ற கட்டுரைகள், என் போன்ற விவசாயிகளுக்கு மிகவும் பயன்படும்.

—கே.எம்.தங்கவேல்,
உப்புக்காரன் தோட்டம்
(கோவை மாவட்டம்)

'ஒட்டுநர்களும் குடிப் பழக்கமும்' எனும் கட்டுரை சிறப்பானது. பயனுள்ளது. ஒட்டுநர்களின் பொறுப்பைத் தெளிவாகக் காட்டுவது.

—சு. பெரியசாமி
(நடத்துநர்)
கோவை-27

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.



தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23